
# வந்து போகும் மேகம்



# வந்து போகும் மேகம்

## 1

அமைதியற்ற ஒரு சிறு பரபரப்பும் சோர்வுமாக மயூரி, ஒரு குதிப்பற்று, இங்கும் அங்குமாய் அலைந்து கொண்டிருந்தாள்.

ஒன்றை எடுப்பதும், இன்னோர் இடத்தில் வைப்பதும், மீண்டும் பழைய இடத்துக்கே மாற்றுவதுமாகப் பயனற்ற வேலையில் பொழுது சென்று கொண்டிருந்தது.

அவளது பரபரப்பைக் கண்டு, அவளுடைய அன்னை ரேவதியே ''என்னடா மய்யூ, குட்டிபோட்ட பூனைபோல ஏன் இப்படிக் குறுக்கும் நெடுக்குமாக அலைந்து கொண்டு இருக்கிறாய்? பாடம் எதுவும் புரியவில்லையா?'' என்று வினவினாள். ''நான் வேண்டுமானால், டெலிஃபோன் செய்து, குணாவை வரச்சொல்

லட்டுமா? பாடத்தில் சந்தேகம் எதுவும் இருந்தால் அவனிடம் கேட்டுத் தெரிந்துகொள்! பொறுமையாய்க் கற்றுக் கொடுப்பான்!''

''போங்கள் அம்மா!'' என்று உதட்டைப் பிதுக்கி னாள் மகள். ''குணாதான் போன தடவையே எல்லாம் சொல்லித் தந்துவிட்டாரே! அத்தோடு எனக்குப் பாடத் தில் எந்தவிதச் சந்தேகமும் இல்லை!''

''பின்னே? படித்து முடித்தும் ஆயிற்று என்றாயே?''

''ஆமாம்மா! ஆனால், என்னவோ ஒரு மாதிரி... என்னவோ நிறையச் செய்ய வேண்டும் போலவும், அதேசமயம், செய்வதற்கு எதுவுமே இல்லாதது போல வும், ஒரே குழப்பமாக இருக்கிறது, அம்மா!''

''படிக்காதவர்களுக்குப் பரீட்சை பயம் வரும் என் பார்கள்! நீ பாடத்தை முடித்துவிட்டு இப்படிச் சொன் னால், எனக்கும் ஒன்றும் புரியவில்லை போ! என் னவோ, 'யோகா' செய்தால் மனது அமைதிப்படும் என்பாயே! அதை வேண்டுமானால், செய்து பார்! வேறு யோசனை எனக்கு ஒன்றும் தெரியவில்லை, கண்ணு!'' என்று எழுந்தாள் அன்னை. மகளை நோக்கிப் புன்னகை புரிந்து, ''இன்று இரவுக்கு உனக்கு பிடித்தமான சமையல்! அதனால் நான் சமையலறைக்குப் போகிறேன்! என்ன?'' என்று கூறிவிட்டுக் கிளம்பினாள்.



திடுமென முகம் மலர, ''அம்மா! குணா அண்ணா!'' என்று மகள் மகிழ்ச்சியோடு கூவ ரேவதியும் நின்று, ஆவலோடு வாயிலை எட்டிப் பார்த்தாள்.

வந்தவன் குணசீலன்தான்.

''வாப்பா! உட்கார்! என்ன சாப்பிடுகிறாய்? சூடா கக் காஃபியா? குளிர்ச்சியாகப் பழச்சாறா?'' என்று பிரியமாய் உபசரித்தாள் பெரியவள்.

''ஏன் குணா? இங்கே வந்தே சிற்றுண்டி சாப்பிட்டி ருக்கலாமே! கீரைவடை செய்திருந்தேன்! இப்போது முறுக்கு இருக்கிறது. கட்டித் தருகிறேன். கொண்டு போய்ச் சாப்பிடு!'' என்றவள் தொடர்ந்து, ''இந்தப் பெண்ணுக்குக் கொஞ்சம் ஏதாவது சொல்லு, குணா! அப்போது பிடித்து குறுக்கும் நெடுக்குமாய் அறைகளை அளந்து கொண்டு இருக்கிறாள்; நாளன்று பரீட்சை! அதை நல்லபடியாக எழுத அவளுக்கு நிறைய யோசனை சொல்லிக்கொடு!'' என்றாள்.

அதற்குள் உள்ளே சென்று, கண்ணாடித் தம்ளரில் ஃபிரிஜ்ஜில் வைக்கப்பட்டிருந்த அன்னாசிச் சாறுடன் வந்து சேர்ந்தாள் மயூரி! ''இந்தாருங்கள், குணா! குடியுங் கள்'' என்று, தம்ளரை அவனிடம் நீட்டினாள்.

''என்ன, மயூரி! இப்போதுதான் அம்மாவிடம் வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருந்தேன்!'' என் றான் குணசீலன்.

''என்னிடம் சொல்லவில்லையே!'' என்று சிரித்தாள் மயூரி! ''வெறும் தண்ணீர்தானே? சும்மா குடியுங்கள்! ரொம்பத்தான் பிகு பண்ணுகிறீர்களே, குணாண்...ணா!'' என்று வற்புறுத்தினாள் மகள்!

''அச்சோ! இது பிகு, இல்லை மயூரி, முன்னெச்சரிக்கை அவ்வளவு தான்!'' என்றான், குணசீலனின் அருகே வந்து அமர்ந்து கொண்ட சுந்தர் - மயூரியுடைய ஒரே தம்பி.

''முன்னெச்சரிக்கையா? எதற்கு?'' என்ற தாயைத் தொடர்ந்து ''அம்மா, கேட்காதீர்கள்! அவன் வம்புக்கு ஏதாவது சொல்வான்!'' என்று கத்தினாள் மயூரி.

''வம்பா? நானா? காட்ப்ராமிஸ்! நான் உண்மையை தவிர வேறொன்றும் சொல்வதில்லை என்று உங்களுக்குத் தெரியாதாம். அதுதான் அக்காவுக்குப் பயம்! அதாவது, நான் உண்மையைச் சொல்லி விடுவேனோ என்று! அப்படித்தானேக்கா?'' என்று சுந்தர் சிரித்தான்.

''ஆமாம்! பெரிய அரிச்சந்திரன் இவன். அன்றைக்குச் சந்திரஹரி என்று பழைய' படம் - என்.எஸ். கிருஷ்ணன் நடித்தது டி.வியில் பார்த்தேன். உண்மையைச் சொல்லாதவனாக, அரிச்சந்திரனுக்கு நேர் எதிர்மறையாக ஒரு கதாபாத்திரம். இந்தத் தலைமுறைக்கு நீதான் அப்படி?'' என்று பாய்ந்தாள் தமக்கை. குணசீலனிடம் திரும்பி, ''அவன் சொல்வதை நம்பாதீர்கள், குணா!'' என்றும் கேட்டுக் கொண்டாள்.



''அவன் இன்னும் சொல்லவே இல்லையே!'' என்று புன்னகை புரிந்தான் குணசீலன். ''சொன்னால் தானே நம்புவது நம்பாதது பற்றி முடிவுசெய்ய இயலும்?''

''அம்மா! இந்த ஜூஸை ஏற்கனவே தயாரித்து ஃபிரிஜ்ஜில் வைத்ததா? அல்லது புதிதாக அக்காவின் கைவண்ணமா?'' என்று விசாரித்தான் சுந்தர்.

''ஏன் கேட்கிறாய்? நேற்று உங்களுக்கெல்லாம் தந்தேனே! அதில் பாதி உள்ளே வைத்திருந்ததிலிருந்து தான் கொண்டு வந்திருக்கிறாள்!'' என்று தாயார் கூறவும், ''அப்பாடி! பிழைத்தீர்கள், அண்ணா! இனித் தைரியமாக இதைக் குடியுங்கள்! குறைந்தபட்சமான வாந்தியிலிருந்து, அதிகபட்சமான உயிர் போவது வரை எதுவும் நடக்காது'' என்று கண்சிமிட்டினான் சின்னவன்!

''ஏய்! இதற்காகத்தான் நான் சொல்வது! உளறுவதைப் பாருங்கள்! நீங்கள் சும்மா குடியுங்கள் குணாண்ணா...'' என்றாள் மயூரி தம்பியை வெட்டுவது போலப் பார்த்து.

''அதைத்தான் நானும் சொல்கிறேன்! இனிமேல் தைரியமாகக் குடியுங்கள், அண்ணா!'' என்று சுந்தர் ஒத்துப்போவது போலப் பாவனை செய்தான்.

''உன்னை... உன்னை...'' என்று வார்த்தை வராமல் தடுமாறிவிட்டு ''அன்றைக்கு 'பேபி கார்ன்' பஜ்ஜி செய்து வைத்தேனே! அதைமட்டும் எனக்கும் அம்மாவுக்கும்

இல்லாமல் மொக்கினாயே!'' என்றாள் தமக்கை ரோஷத்துடன்.

''அ...அது ஒரு விதிவிலக்கு! ஆனால், ஞாயிற்றுக் கிழமைகளில் அம்மாவுக்கு ஓய்வு கொடுப்பதாகச் சொல்லி ஒரு குப்பும் இன்னும் ஏதோ ஒரு பயங்கரமும் ஒருநாள் செய்திருந்தாயே! அது மறக்கவே மாட்டேன் என்கிறதே!'' என்று, தம்பி விடாமல் தாக்க, பதில் கொடுக்க முடியாமல் ''பாருங்கம்மா!'' என்று தாயைத் துணைக்கழைத்தாள் மயூரி.

ஆனால் தாயார் பரிந்துரைக்கு முன்பாகவே குணசீலன் மயூரியின் உதவிக்கு வந்துவிட்டான். ''வார முழுவதும் வேலை செய்யும் அம்மாவுக்கு அவளது லீவு நாளைத் தியாகம் செய்து உதவி செய்வது, எவ்வளவு பெரிய விஷயம்! அதைப் பாராட்டுவதை விடுத்துக் கிண்டலடிப்பதா, சுந்தர்? ஊகூம்! சரியில்லை தம்பி!'' என்று லேசாகக் கண்டித்தான்.

''அதைச் சொல்லு, குணா! அப்பா, பிள்ளை இருவருக்குமே அதன் அருமையே தெரியவில்லை! சகிக்கவில்லை என்று ஹோட்டலில் ஆர்டர் பண்ணிவிட்டார் அவன் அப்பா! அந்த நாளிலேயே, இன்றைக்கு இருபது ஆண்டு முன்பாக, நான் முதல்முதலாகச் சமைத்தபோது, குழம்பில் உப்புப் போட மறந்துவிட்டேன்! காரக்குழம்பு! அதைக்கூட 'வெகுருசி' என்று என் அப்பா எப்படிச் சாப்பிட்டார் தெரியுமா? 'மகள் கையால் தண்ணீரைக்



கொடுத்தாலும் தேவாம்ருதம் என்பீர்களே' என்று என் அம்மா கேலி செய்தார்கள்!...'' என்ற ரேவதியின் பார்வை எங்கோ நிலைத்தது!

பழைய ஞாபகங்கள்! அவைமட்டும்தானா? ஓர் ஒப்பிடலுமா?

பரிவுடன் அவளை நோக்கிவிட்டுக் குணசீலன், சுந்தரிடம் திரும்பினான்! ''அதுமட்டுமில்லை, சுந்தர், மயூரிக்கு நாளன்று தேர்வு தொடங்குகிறதில்லையா? ரொம்பவும் மட்டம்தட்டி மனதைக் கஷ்டப்படுத்தக் கூடாது! ஓரளவு கேலி, கிண்டல் சரிதான்! ரொம்ப வேண்டாம், என்ன?'' என்று அறிவுரை கூறியவன் அடுத்து மயூரியை அழைத்தான். ''மயூரி, நீ பாடம் எல்லாம் திரும்பப் படித்து முடித்துவிட்டாயல்லவா? இனிமேல் அதிகம் அலட்டிக் கொள்ளாதே. நாளை மாலைக்குமேல், பாடத்தில் அடிக்கோடிட்ட இடங்களை மட்டும் லேசாகப் பார், அது போதும். நாளைவரை எல்லாவற்றையும் இலகுவாகவே எடுத்துக்கொள். பாட்டு கேள்! டிவி பார்! ஆனால், எதிலும் தீவிரமாக ஈடுபடாதே! பாடம் சற்று மறக்க அது வாய்ப்பாகிவிடக் கூடும்! சரிதானா?'' என்று அவன் கேட்க, மயூரி தலையாட்டினாள்.

''அப்புறம்... தேர்வு நன்றாக எழுத, இப்போதே என் நல்வாழ்த்துக்கள்!''

மயூரி, கேள்வியாய் நோக்கவும், ''இன்றிரவே நான் வெளியூர் போக வேண்டியிருக்கிறதம்மா! என் சிநேகி

தன், ராகவேந்திரன் இருக்கிறானே அவனுடைய தங்கைக்கு திருச்சியில் திருமணம். என்னை வீடியோ எடுக்க அழைத்திருக்கிறான். முன்தினம் நிச்சயம், மாப்பிள்ளை அழைப்பு, திருமணம், மறுநாள் மறுவீடு. அதற்கு அடுத்த நாள் ராகவேந்தருடைய அண்ணன் மகன் பிறந்தநாள் என்று எல்லா விழாக்களும் முடிந்து, உன் பரீட்சை தொடங்கிய பிறகுதான் வருவேன்! அதனால்தான் 'அட்வான்ஸ் வாழ்த்துக்கள்!' என்று முறுவலித்தான் அவன்.

''ரொம்ப நன்றி, குணான்...ணா! வாழ்த்துக்களுக்கு மட்டுமாய்ச் சொல்லவில்லை! உங்கள் புத்திமதிக்கும் சேர்த்துதான். அதிலும் முக்கியமாகச் சுந்தருக்குக் கொடுத்தீர்களே! அதற்காகவும் தான்!'' என்று கன்னம் குழிய நகைத்தாள் மயூரி. உடனேயே முகம்வாட, ''ஆனால் தேர்வு தொடங்கும் போது இங்கே... சரிசரி... ஒரு வேலையை ஒத்துக்கொண்டபிறகு விட முடியாதுதான்! போய்வாருங்கள், குணான்...ணா!'' என்று முடித்தாள்.

''எத்தனையோ தடவை சொல்லிவிட்டேன், குணாவையும் அண்ணாவையும் சேர்த்துப்போட்டு இழுக்க வேண்டாம் என்று!''

''வெறுமனே 'குணா' என்றால் மரியாதை இல்லாத மாதிரித் தெரிகிறது...''

''நான் என்ன 'குணா வாடா, போடா' என்றா சொல்லச் சொன்னேன்? வாருங்கள் போங்கள் என்றால் மரியாதை தானாக வந்து ஒட்டிக் கொள்ளாதா? என்னைப் பொறுத்தவரையில், அது போதும்! என்ன?''



ஒப்புதலாய் மயூரி தலையாட்ட, குணசீலன் எழுந்தான்.

அதற்குள் சற்றுப் பெரியதான ஒரு பாக்கெட்டுடன் ரேவதி வந்தாள். ''முறுக்கும் கொஞ்சம் ஜிலேபியும் வைத்திருக்கிறேன், குணா! எடுத்துப் போ'' என்றாள்.

''இவ்வளவு வேண்டாம் ஆன்ட்டி. நான் இன்றிரவே ஊருக்குப் போகிறேன். அப்பா நொறுக்குத்தீனி சாப்பிடமாட்டார், அதனால் சின்னதாக இரண்டு அல்லது மூன்று முறுக்கு போதும்!'' என்றுரைத்து பாக்கெட்டைப் பிரித்து, அவனுக்குத் தேவைப்பட்ட அளவில் மிகக் கொஞ்சமாக எடுத்துக்கொண்டு, மீதியை மயூரியிடம் நீட்டினான். ''உள்ளே கொண்டுபோய், மீண்டும் டப்பாவில் போட்டு வைத்து விடும்மா! அல்லது கரகரப்பு குறைந்துவிடும்! வரட்டுமா ஆன்ட்டி? சுந்தர், மயூரி பை!'' என்று விடைபெற்றுச் சென்றுவிட்டான் குணசீலன்.

''நல்ல பையன்!'' என்றாள் ரேவதி கனிந்த குரலில்.

பிள்ளைகள் இருவரும், ஆமோதிப்பாய் 'மக்கும்' கொட்டினர்.

குணசீலன், கையில் தந்த முறுக்கைக் காட்டி, ''இவ்வளவையும் வைத்துவிட்டுப் போய்விட்டாரேம்மா! கொண்டு போனால், ரயிலில் தின்னலாம்! சிநேகிதர்களுக்குக் கொடுக்கலாம். டப்பாவில் மூடி வைத்துவிட்டுப் போனால், வந்தபிறகு கூட உண்ணலாம்! இத்தனைக்கும் உங்கள் முறுக்கு என்றால் குணாவுக்கு ரொம்ம்...பப்

"பிடிக்கும்!" என்று அங்கலாய்த்தபடி மயூரி, உள்ளே சென்றாள்.

"சில பேரைப் போல, அடுத்தவர்கள் சாப்பாட்டை அவர்களுக்கே இல்லாமல் பிடுங்கி விழுங்கிப் பசியேப்பம் விடுகிற புத்தி அண்ணாவுக்குக் கிடையாதே கிடையாது!" என்றான் சுந்தர் ஒருமாதிரிக் குரலில்.

சட்டென்று சுற்றுமுற்றும் சற்று மிரட்சியுடன் நோக்கி, "உஷ்!" என்று எச்சரித்தாள் அன்னை.

அறைவாயில் வரை சென்றிருந்த மயூரி லேசாகத் திரும்பிப் பார்த்தாள். இதழ்களில் லேசான புன்னகை அரும்ப, "அதெல்லாம் விரைவிலே சரியாகி விடும், பார்!" என்று சர்வநிச்சயமான குரலில் ஆருடம் சொன்னாள்!

வருத்தமாய்ப் புன்னகைத்த ரேவதியின் முகத்திலும், ஏளனமாய் உதட்டைப் பிதுக்கிய சுந்தரின் முகத்திலும் நம்பிக்கையின்மை தெள்ளத்தெளிவாய்த் தெரிந்தது!

## 2

குணசீலன் கிளம்பிச் சென்றபிறகு மகள் மயூரியிடம் பழைய மாதிரிப் பரபரப்போ, தவிப்போ இல்லை என்பதைக் கண்டு ரேவதி நிம்மதியுற்றாள்.



அடிக்கடி தமக்கையிடம் மல்லுக்கட்டும் சுந்தர் கூட, அண்ணாவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு அமைதி காக்கவே, அவருக்கு மகிழ்ச்சியாகக் கூட இருந்தது.

மயூரியும், அப்படித்தான் உணர்ந்தாள் போலும்! உதடுகளில் ஓர் இளம் புன்னகையுடன், நடமாடினாள். டிவியில் இன்னிசையை மெலிதாகக் கேட்டபடி, ஷோகேசில் பொருட்களை மாற்றி அடுக்கினாள். சில துணிமணிகளை 'அயர்ன்' செய்தாள். தாயாருக்குச் சமையல் அறையில் வெங்காயம் வெட்டிக் கொடுத்தாள்.

முதல் அபாயம், இரவு உணவின்போது நேர்ந்தது.

பொதுவாக, இரவு உணவை அப்பாவும் மக்களுமாகச் சேர்ந்து உண்பது அந்தவீட்டு வழக்கம். மற்றபடி, ஃபாக்டரி கஸ்டமர் என்று அலையும் தந்தைக்கும் பிள்ளைகளுக்கும் தொடர்பே இராது போய் விடக்கூடும் என்று எண்ணி, ரேவதி வீட்டில் இப்படி ஒரு பழக்கத்தைக் கொணர்ந்திருந்தாள். மகேந்திரன் வீடுவரச் சற்றுத் தாமதம் ஆனாலும், மக்களிடம் ஏதாவது கதை பேசிக் காத்திருக்கச் செய்வாள்.

மகேந்திரன், பொதுவாக வீட்டில் கலகலப்பாகப் பேசிப் பழகுகிறவர் அல்லதான். ஆனால், பெற்றபிள்ளைகள், புத்திசாலித்தனமாக அதையிதைப் பேசியபோது மெல்ல மெல்ல அவரும் அதில் ஈடுபடலானார்.

சில மாதங்களாக, அன்னையையும் உடன் அமர்த்தி உண்ணவைத்துக் கொண்டிருந்தாள் மயூரி! "பிற

யாரம்மா, பரிமாறுவது?'' என்று கேட்ட தந்தையிடம், ''ப:ஃபே மாதிரி அவரவர் எடுத்துக் கொள்ளலாம்பா! நாம் நாலுபேரும் சேர்ந்து பேசிக்கொண்டே சாப்பிட்டால் நன்றாக இருக்கும்ப்பா!'' என்று சிறு கெஞ்சலும் குழைவு மாகப் பேசி, அவரை இணங்கச் செய்தாள்.

பெற்றவரும் அரைமனதாகச் சம்மதித்தார்.

அன்றும் அப்படித்தான்.

சாப்பாட்டுச் சாமான்கள் எல்லாம், உணவு மேஜை யின் நடுவுக்கு வந்தாயிற்று. ஃபேக்டரி அழுக்கு நீங்கக் குளித்துவிட்டு வருவதாகச் சொல்லி மகேந்திரன் உள்ளே சென்றிருந்தார்.

''அம்மா...'' என்ற குரலிலேயே ரேவதியின் முகம் மாறிவிட்டது!

அவள் என்னவென்று கேட்கு முன்பாகவே, ''ஆட் டுக்கு யாரோ விருந்தாளிங்க வராங்களாம்! கோழி, மீன் என்று ஏதாச்சம் ரெண்டு மூணு தினுசு வாங்கியாரச் சொன்னாங்கம்மா!'' என்றாள் செல்வி - மகேந்திரனு டைய ஒன்றுவிட்ட தங்கை மனோரஞ்சிதத்தின் வீட்டு வேலைக்காரி!

மனோரஞ்சிதம், அதேவீதியில், எதிர்புறமாக மூன்று பங்களா தள்ளி இருப்பவள். உடன்பிறந்த அண் ணன்மார் தொழிலில் நசித்துப் போய்விடவே, என் னவோ அவர்கள் தனக்குப் பெருத்த அநியாயம் செய்து விட்டாற்போலப் பேசி ஒதுக்கிவிட்டவள், நல்ல நிலை



யில் இருந்த, ஒன்று விட்ட சகோதரனான மகேந்திரனே தன் ஒரே அண்ணன் என்று உறவு கொண்டாடுபவள். ஒற்றைப் பிள்ளையான மகேந்திரனுக்கும் அவளது பேச் சில் உச்சிகுளிர்ந்து போகும்!

இந்த உறவை இன்னும் வலுப்படுத்திக் கொள்ள, மனோரஞ்சிதத்துடைய மகன் அபூர்வனுக்கு மயூரியைக் கட்டிக்கொள்ளப் போவதாகக் குறிப்பாகவும், வெளிப் படையாகவுமே மனோரஞ்சிதம் பேசுவாள். மகேந்திர னும் அதை மறுத்துப் பேசியதில்லை. ரேவதிக்கும், நேரடியாக எதையும் சொல்லத் தைரியம் இல்லாவிட்டா லும், 'சின்னப் பிள்ளைகள்! இப்போதே இந்தப் பேச்சு எதற்கு அண்ணி?' என்று சிரித்த முகமாகவே விஷ யத்தை ஆறப்போடுவாள்.

ஆனால், நிகழ்கால, வருங்கால உறவுகளின் அடிப் படையில், மனோரஞ்சிதம் பல்வேறு உரிமைகளை தானாகவே எடுத்துக் கொள்வாள்! அவற்றுள், இப்படி வேலையாளை அனுப்புவதும் ஒன்று! முன்பெல்லாம், செல்வியின் கைகளில் ஏதாவது பாத்திரம் இருக்கும்! பிறகு அது நின்றுவிட்டது! ஒரு பாத்திரத்துக்கு மேல் அனுப்பினால் நன்றாயிராது! வருவதும், அந்த ஏதேனும் ஒருவகைப் பதார்த்தத்தோடு நின்று விடும்! அதைவிட, மேலே இரண்டு தினுசு இருந்தால் அவைகளும்தான் வரட்டுமே! வேறு யாரேனும் அன்னியருக்கா செய்யப் போகிறார்கள்? வருங்கால மருமகனுக்கும், அவனைப் பெற்று வளர்த்தவர்களுக்கும் இவ்வளவு கூடச் செய்யா விட்டால் எப்படி?

ரேவதி எதையும் கச்சிதமாகச் செய்பவள். இல்லை என்று சொல்ல வேண்டாத அளவுக்குத் தயாரிப்பாளே தவிர, அதிகமாக மீந்து வீணாகிவிட விடமாட்டாள். எனவே, இப்படி இடைவழி பாதி செல்ல நேரும் போது, வீட்டில் தட்டுமுட்டடித்து விடும்.

கணவன் வகைச் சொந்தம்; நாத்தனார் முறை எனும் போது அவளுக்கு மறுக்கவும் தைரியம் வராது! எனவே, வம்புக்கு இடமின்றிப் பெரும்பாலும் இருப்பதில் பாதியையேனும் அனுப்பிவிடுவதுதான். இருப்பதில், மகேந்திரனுக்குப் போக மிச்சத்தைப் பிள்ளைகளுக்குப் பங்கிட்டு விட்டு, வயிற்று வலி அது இது என்று சாக்குச் சொல்லித் தயிரும் ஊறுகாயுமாக உண்டு முடிப்பாள்.

ஆனால், இன்று அப்படிக் கொடுக்க ரேவதிக்கு மனம் வரவில்லை. நாளன்று தேர்வு என்று முயன்று படித்த பெண்ணுக்கு இதம் செய்ய எண்ணி, அவளுக்குப் பிடித்தமான 'பட்டர் சிக்கன்' சமைத்திருந்தாள். இரவு என்பதால் மீந்துவிடக்கூடாது என்று ஓரளவு கணக்காகவும் செய்திருந்தாள். இதை எப்படிக் கொடுப்பது?

எனவே, செல்வியிடம், ''இங்கே ஒன்றும் பெரிதாகப் பண்ணவில்லையே, செல்வி!'' என்று கூறிச் சமாளிக்க முயன்றாள் அவள்.

ஆனால் செல்வி உடனே திரும்பிப் போய் விடவில்லை! அசையாமல் நின்று, ''இல்லீங்களேம்மா! கோழி வாங்கி வந்தாகக் கப்பு சொல்லிச்சுதே!'' என்று கேட்டாள்.



'கப்பு' என்கிற கற்பகம், இந்த வீட்டு வேலைக்காரி மிகவும் நல்ல பெண்தான். ஆனால் கொஞ்சம் ஓட்டை வாய்! அத்தோடு பணியாளிடம் போய், சிக்கன் வாங்கியதை அந்த வீட்டு ஆட்களிடம் சொல்லிவிடாதே என்று கூறவா முடியும்?

''ஆ...ஆமாம். ஆனால் கொஞ்...சம்தான் செய்தேன்...'' என்று ரேவதி இழுக்குமுன் டெலிஃபோன் கூப்பிட்டது.

அழைத்தது மனோரஞ்சிதம்தான். ''அண்ணி; செல்வியை அனுப்பினேனே வந்தாளா? ஒரு பத்துப் பன்னிரண்டு பெரிய துண்டுகளாக அனுப்புங்கள் அண்ணி! அவளைச் சீக்கிரமாக வரச் சொல்லுங்கள்! இங்கே சாப்பாட்டுக்கு லேட்டாகி விட்டது!'' என்று தாக்கோ விட்டு விட்டு, ''அண்ணன் வந்தாயிற்றா? என் மருமகளைக் கேட்டதாகச் சொல்லுங்கள்! நான், அப்புறமாய் அவளிடம் பேசுவதாகச் சொல்லுங்கள்! வைக்கட்டுமா? உடனே செல்வியை அனுப்பிவிடுங்கள்... சிக்கனோடு!'' என்று முடித்து, ரிசீவரை வைத்துவிட்டாள்!

ஒரு பெருமூச்சுடன், மகேந்திரனுக்கு இரண்டும், பிள்ளைகளுக்கு ஆளுக்கு ஒன்றுமாக, நாலு சிக்கன் துண்டுகளை எடுத்து வைத்துவிட்டுப் பாத்திரத்தைச் செல்வியிடம் கொடுத்து அனுப்பினாள் ரேவதி!

உள்ளூரப் பொருமல்தான். ஆனால், வெளிக் காட்டும் திடமும் இல்லையே!

பார்த்துக் கொண்டே இருந்த மயூரி, தாயின் கையைப் பற்றி அழுத்தி, ''எனக்கு இது போதும்மா!'' என்றாள்.

ஆனால், சுந்தர் அப்படியின்றி, ''இன்னும் வேண்டும்'' என்று கேட்டான். வேண்டுமென்றே கேட்டான் என்பது ரேவதியின் சந்தேகம்.

இதற்கொரு முடிவு நேரக்கூடுமோ என்ற ஆவலில், வழக்கம் போல மகனை அடக்காமல், ''வேறே இல்லையடா!'' என்றாள் அன்னை.

சட்டென நிமிர்ந்து, ''ஏன் இல்லை? கொஞ்சம் நிறைய வாங்கிக் கூடுதலாகச் செய்வதற்கென்ன? பிறந்த வீட்டுக் கஞ்சத்தனம் இன்னமுமா போகவில்லை?'' என்றார் மகேந்திரன் குத்தலாக.

தாயின் முகம்வாடியது பொறுக்காமல் மயூரியும் சுந்தரும் சேர்ந்து நடந்ததை அவருக்குச் சொன்னார்கள்.

ஆனால் ரேவதி விரும்பிய பலன்தான் கிடைக்கவில்லை. ''அதற்கென்னடா? மனோ அத்தை நமக்குச் சொந்தம்தானே? உறவு என்கிற உரிமையோடு கேட்கிறாள்! அவள் கேட்குமுன்பாகவே, கூடக் கொஞ்சம் சேர்த்து செய்து இவளாகவே அனுப்பலாமே! அப்படி உறவுக்கு ஒன்றும் செய்யத் தெரியாதவளா, உங்கள் அம்மா? அந்தப் பையன் குணாவோ, கனாவோ, அவன் வந்தால் மட்டும் மூட்டை மூட்டையாகக் கட்டிக் கொடுப்பதில்லையா? இத்தனைக்கும், அவன் சொந்தம் என்று



கூடச் சொல்லமுடியாது. உன் அம்மாவின் பிறந்த ஊர்க்காரன்! அவ்வளவுதான்! காசு பணம் ஒன்றும் இல்லாத பரதேசி வேறு! அவனுக்குக் கொடுப்பதை விட உங்கள் அத்தைக்குச் செய்வதுதானே நியாயம்?...'' என்று பேசிக் கொண்டே போன தகப்பனாரை இடைமறித்துப் பேசினான் சுந்தர்.

''குணா அண்ணா ஒன்றும் பரதேசிஇல்லை அப்பா!'' என்றான் அவன் ஆத்திரத்தோடு.

''ஆமாம் அப்பா! அவர்களுக்கும் வீடு இருக்கிறது கார் இருக்கிறது!'' என்றாள் மகளும் ரோஷமாக.

''அதெல்லாம் வீடும் காரும் என்று சொல்லிக்கொள்வதா? ஒண்டுக் குடித்தனம் மாதிரி ஒரு ஃப்ளாட்! தகரடப்பா கார்! அத்தையின் பங்களா, சீயல்லோவோடு, இவைகளை ஒத்திட்டுப்பாருங்கள்! மேலும்...''

மீண்டும் அவர் பேச்சில் குறுக்கிட்டு, ''அத்தோடு அப்பா, அம்மாவாக ஏதேனும் கொடுத்தால்கூட, குணா ஒன்றிரண்டுக்குமேல் எடுத்துப் போகவே மாட்டார்! தெரியுமா?'' என்றாள் மயூரி, உள்ளடக்கிய வருத்தத்துடன்.

தந்தை, குணாவை மட்டம்தட்டிப் பேசியது அவளுக்கு மிகவும் வேதனையை அளித்தது. எனவே, குணாவைப் பற்றிய தந்தையின் அபிப்பிராயத்தை மாற்றிவிடும் வேகத்தோடு அவள் பேசினாள்.

ஆனால், மகேந்திரன் அந்தப் பேச்சையே ஒதுக்கி, "அவன் எப்படியிருந்தால் நமக்கென்னம்மா? அத்தை வீட்டுக்கு அம்மாவே கொடுத்து அனுப்பியிருக்க வேண்டும் என்பதுதானே முக்கியம்? நினைவு வைத்துக்கொள், ரேவதி! இனிமேல், நல்ல பதார்த்தங்கள் எது செய்தாலும் நிறையவே செய்து, மனோ வீட்டுக்கும் தாராளமாகவே அனுப்பிவை! இந்தக் கஞ்சத்தனம், பிச்சைக்காரத்தனம் ஒன்றும் தேவையில்லை! நான் நன்றாகத்தான் சம்பாதிக்கிறேன்!" என்று முடித்துவிட்டுக் கை கழுவி எழுந்தார்.

தாயின் வாடிய முகத்தைப் பார்த்துவிட்டு, எழுந்து வந்து, இடக்கையால் அன்னையை மயூரி அணைத்துக் கொண்டாள். "கவலைப்படாதீர்கள் அம்மா! பல்லைக் கடித்துக்கொண்டு, இன்னும் கொஞ்சநாள் பொறுத்துக் கொள்ளுங்கள். அதன் பிறகு எல்லாம் சரியாகிவிடும்!" என்றாள்.

"எப்படி? இன்னும் பத்து ஆண்டுகாலம் ரொம்பவும் கஷ்டப்படுவாய்! அப்புறம் கஷ்டம் குறைந்து போகும்! ஏனென்றால் 'அதற்குள் அந்தக் கஷ்டம் பழகிப் போய் விடுவதால், இவ்வளவு சிரமமாய்த் தோன்றாது' என்றானாமே, ஒரு ஜோசியன்! அதுபோலவா!" என்று கேட்டுவிட்டு மெல்லச் சிரித்தாள் ரேவதி.

"போங்கம்மா! நீங்கள் சொல்லுகிற மாதிரியெல்லாம் ஒன்றுமில்லை!" என்று சிணுங்கிவிட்டு, "விரைவிலேயே நின்றுவிடத்தான் போகின்றனே! நீங்களும் பார்த்து



மகிழத்தான் போகிறீர்கள்!" என்று அழுத்தம்திருத்தமாக உரைத்தாள் மகள்.

மறுநாள் காலையும், விடிந்த நேரம், அவ்வளவு நல்லதாக மயூரிக்குத் தோன்றவில்லை!

சுமார் பத்துமணி அளவில் "மய்யூ..." என்று செல்லமாக அழைத்தபடி உள்ளே வந்த அபூர்வனைக் கண்டதும் உள்ளூரப் பெருமையுடன் தான் அவள் அவனை வரவேற்க ஓடிவந்தாள்.

நல்ல சிவந்த நிறமும், அமைப்பான முக ஜாடையும், வெகு நாகரீகமான நடை, உடை, பாவனைகளும் அவனை ஹீரோவாக்கிக் காட்டின! மயூரியுடைய தோழிகள் பலர் அப்படிச் சொன்னதும் உண்டு. முறைப்பையன் அது இது என்று ரகசியம் பேசிக் கிளுகிளுப்பார்கள்!

இப்போது அவன் 'மய்யூ!' என்று செல்லமாக அழைத்ததைக் கேட்க அவர்களில் ஒருவர் கூட அருகில் இல்லையே என்று அவளுக்கு வருத்தமாகக் கூட இருந்தது.

ஓடோடி வந்து உட்காரச் சொல்லி உபசரித்தவனிடம், அபூர்வன் நாலு தடிமனான புத்தகங்களை நீட்டினான்.

தயங்காமல் புத்தகங்களை வாங்கிக் கொண்டு "இவை என்ன புத்தகங்கள் அத்தான்?" என்று விசாரித்தாள் அவள். அவளது பாடங்களுக்கு உதவியான குறிப்புகளாக இருக்கக்கூடுமோ என்று எண்ணினாள்

அவள். ஆனால் இவ்வளவு பெரிய புத்தகங்களைப் படித்துப்பார்க்க இனி அவகாசம் இருக்குமா? தேர்வு நாளை தொடங்குகிறதே!

எப்படியோ அவளுக்குக் கொணர்ந்திருக்கிறானே! அதுவே பெரிய விஷயம்தான்!

மலர்ந்த முகத்துடன் அவனை நோக்கி, ''உட்காருங்கள் அத்தான்! அன்னாசி ஜூஸை கொண்டு வருகிறேன் வீட்டில் செய்தது!'' என்றபடி புத்தகங்களை டீபாயில் வைத்துவிட்டு உள்ளேபோகத் திரும்பினாள்.

''அன்னாசியும் வேண்டாம். ஆப்பிளும் வேண்டாம்! கொஞ்சம் நின்று இதைக் கேட்டுவிட்டுப் போ!'' என்றான், அபூர்வன்.

உடனே நின்று, ''என்ன அத்தான்?'' என்று பதவிசாய்க் கேட்டாள், அவள்.

ஜீன்ஸ் வெயிஸ்ட்கோட்டின் பையில் இருந்து ஒரு காகிதத்தை எடுத்து அதையும் அவளிடம் கொடுத்தான் அவன். ''இந்தப் பேப்பரில் நாலு கேள்விகள் இருக்கின்றன. மய்யூ! நாலில் இரண்டு கட்டாயம் தேர்வுக்கு வருமாம்! பதில்களை இந்த நாலு புத்தகங்களிலிருந்தும் திரட்டி எடுத்து எழுத வேண்டுமாம். அடுத்தவாரம் எனக்கும், பரீட்சை தொடங்குகிறதல்லவா? இந்தப் புத்தகங்களைப் படித்துக் கொண்டிருந்தால் குறைந்த பட்சம் ஒரு முழுநாள் எனக்கு வீணாகிவிடும்! அதனால், நீயே எழுதி வைத்துவிடு, மயூரி'' என்றான் அவன் சர்வசாதாரணமாக!



தன் ஏமாற்றத்தை மறைத்துக்கொண்டு, ''எனக்கு நாளைக்குத் தேர்வு தொடங்குகிறதே அத்தான்!'' என்றாள் மயூரி அழாக்குறையாக.

''அதற்கென்ன? நீதான் படித்து முடித்து விட்டாயே! அப்புறமென்ன?'' என்றான் அபூர்வன் அலட்சியமாக!

'அ...அதற்கில்லை, அத்தான்! வேறு எதிலாவது தீவிரமாக மனதைச் செலுத்தினால், பாடம் மறந்துவிடக் கூடும்... என்று''

''அய்...சும்மா கதை! இதைப் படித்தால் அது எப்படி மறக்குமாம்? உனக்கு இதைப் படிக்கச் சோம்பேறித்தனம்! அதுதானே? அப்படியே கொஞ்சம் மறந்தாலும்தான் என்ன? நீ அதிக மார்க் வாங்கி என்ன செய்யப்போகிறாய்? வீட்டுச் சமையலைச் செய்யப் பள்ளியில் 'முதல் ராங்க்'கா வந்தாக வேண்டும்? ஒன்றும் அவசியமில்லை! நீ முதலில் இதைப்பார்!'' என்றவனின் முகமும் குரலும் மாற, ''ஏன் மய்யூ! எனக்காக நீ இவ்வளவு கூடவா செய்யக்கூடாது?'' வருத்தமும் கோபமுமாக ஆபூர்வன் கேட்கவும் மயூரி தன்னையறியாமல் தலையாட்டி வைத்தாள்.

விசிலடித்தபடியே கிளம்பிவிட்டான் அவன்!

கையிலிருந்த கேள்வித்தாளை வெறித்து நோக்கிய மயூரியின் பெரிய விழிகளிலிருந்து கண்ணீர் பெருகி வழியலாயிற்று.

இந்தப் பெரிய புத்தகங்களை அவள் எப்போது படித்து எப்போது இந்தக் கேள்விகளுக்கு உரிய பதில்களைத் தயாரிக்கப் போகிறாள்?!

இந்த நாலு புத்தகங்களையும் முழுக் கவனத்தோடு படித்து முடித்து கேள்விகளுக்குரிய பதிலையும் எழுதி முடித்தபிறகு அவளது சொந்தப் பாடங்கள் எந்த அளவுக்கு அவளுக்கு நினைவிருக்கும்?

குணசீலன், பொறுமையோடு அவளுக்குக் கற்றுத் தந்ததெல்லாம், வீணாகிப் போய்விடுமா?

# 3

அபூர்வனிடம் மறுத்து உரைக்கும் எண்ணமே மயூரிக்குத் தோன்றவில்லை என்றாலும் குணசீலன் அவ்வளவு கஷ்டப்பட்டுக் கற்றுக் கொடுத்தது, முழுமையாகப் பயன்படாமல் போய்விடக்கூடும் என்பது அவளுக்கு மிகுந்த வேதனையைத் தந்தது. அந்த வேதனை, விழிகளில் நீராக வடிய அவள் நிற்பதைப் பார்த்து விட்டு, அவளுடைய தம்பி சுந்தர் தமக்கையின் உதவிக்கு வந்தான்!

கொஞ்சம் எரிச்சல்பட்டபடிதான்!

''என்ன பெண் அக்கா, நீ? எனக்கு நாளைக்குப் பரீட்சை தொடங்குகிறது. முடியாது என்று பளிச்சென்று



சொல்லிவிட வேண்டியதுதானே? அம்மா மாதிரிதான், உனக்கும் தைரியத்தையே காணோம். இங்கே கொடு, இந்த வேலையை நான் செய்கிறேன்!'' என்று முன் வந்தான்.

நன்றியால் முகம் மலர்ந்தபோதும், ''உன்னால் முடியுமாடா? என்று கவலைப்பட்டாள் அவள்.

அபூர்வனது கல்லூரிப்பாடம்! பிளஸ் டூ முடிக்கும் அவளுக்கே கொஞ்சம் கடினம்தான். பிளஸ் ஒன் மாணவன் சுந்தருக்கு இயலுமா?

''எல்லாம் முடிந்தவரை போதும்! எப்போது, தன் பாடத்தை அடுத்தவரைக் கொண்டு ஒருவன் செய்ய முயற்சிக்கிறானோ, அவன் எல்லாவற்றுக்கும் தயாராகத் தான் இருக்க வேண்டும். என் சிநேகிதனுடைய அண்ணன் ஆர்.ஈ.சியில் சேர்ந்தபோது 'ராகிங்' என்று அவனவன் பாடத்தை எழுதுகிற வேலையை, சீனியர் மாணவர்கள் இந்த முதலாம் ஆண்டுப் பையன்கள் தலையில் கட்டி விடுவார்களாம். மனம் வெறுத்துப்போய், சில பேர், 'காளைமாடு கன்றுபோட்டது' 'நான் ஒரு முட்டாள்' என்றெல்லாம் கூட இடையிடையே எழுதிவைப்பார்களாம்!...''

''ஏய் ஏய்... சுந்தர்! நீ அப்படியெல்லாம் செய்துவிட மாட்டாயே! பாவம் அபூர்வன் அத்தான்!''

''பெரிய பாவம்தான் போ! உன் நிலை பற்றிய கவலையே இல்லாமல் அபூ அத்தான் செய்தது எனக்குக் கோபம்தான். ஆனால் அதற்காக அவருக்குத் தண்டனை

யாக ஏதாவது செய்தால், நீ உருகிக் கரைந்து விடுவாயே! அதனால் அப்படி ஒன்றும் செய்துவிட மாட்டேன். புத்தகங்களையும் கேள்விகளையும் தந்துவிட்டு நீ நிம்மதியாகப் போ!'' என்றான் மயூரியுடைய தம்பி.

நன்றியுடன் புன்னகை புரிந்த மயூரியின் முகம் எதையோ நினைத்தாற்போலச் சட்டென வாடவும், சுந்தர் கை உயர்த்தி அவளைத் தடுத்தான். ''நான் கிரிக்கெட் விளையாடப் போவதாகச் சொன்னது உனக்கு நினைவு வந்து விட்டது! அதுதானே? நீ இங்கே கண்ணீர் வடித்துக் கொண்டு, வேண்டாத வேலை செய்யும்போது, என்னால் ஆனந்தமாய் விளையாட முடியுமா? விடு! நாளை கூட நான் விளையாடப் போய்க் கொள்ளுவேன்! என் பரீட்சை முடிந்து விட்டதால், அடுத்துப் பள்ளி திறக்கும் வரை நான் அவிழ்த்து விட்ட கன்றுதானே? என்றைக்கு வேண்டுமானாலும் பார்த்துக் கொள்ளுவேன். இது... அது... என்று மனதை உளப்பிக் கொள்ளாமல் உன் வேலையைப்பார்! போ!'' என்று முடித்தான் அவன்.

தமக்கைக்கும் தம்பிக்கும் ஒரு வயதுதான் வேறுபாடு! என்றாலும் இதுவரை, சுந்தரைவிட தான் எவ்வளவோ பெரியவள் போலத்தான், மயூரி உணர்ந்து வந்திருக்கிறாள். எதிலும், போட்டிக்கு வந்து சண்டையிடும் போதெல்லாம், கடைசியாகச், சின்னப்பிள்ளையிடம் போய்த் தகராறு பண்ணுகிறோமே என்று எண்ணி விட்டுக்கொடுத்து விடுவாள். இப்போது அவன் என்னவோ பெரிய ஆள் மாதிரி அவளுக்கு உதவ வந்தது வேடிக்கையாக இருந்தது மயூரிக்கு. உள்ளூர நெகிழ்வாகவும்தான்!



எழுதிமுடிக்கப்பட்டுவிட்ட கட்டுரைகளை வாங்கிப் போகவந்த அபூர்வனிடம் முன்தினம் பற்றி மயூரி லேசாகக் குறிப்பிட்டாள். அங்கே அனுப்பிவிட்டு, இங்கே வீட்டில் பற்றாக்குறை ஆகிவிட்டது பற்றி அவள் வேடிக்கையாகக் கூறியபோது, புருவம் சுருக்கி யோசித்து விட்டு, ''எது? அந்த பட்டர் சிக்கனா? வாசனைக்குக் கொஞ்சம் வெண்ணெயைப் போட்டு விட்டு, எண்ணை ஊற்றிச் செய்திருக்கிறார்கள் அத்தை என்று அம்மாகூடச் சொன்னார்களே, அதையா சொல்கிறாய்? மிஞ்சிமிஞ்சி ஆறேழு சிக்கன் துண்டுகள்! இதைப் போய் என்ன மயூரி, இதைப் போய்ப் பெரிதாக.... ஏன், எங்களுக்காக, இந்தச் சின்னவிஷயம், உன் அம்மா பொறுத்துக் கொள்ளக் கூடாதா? அண்ணிக்கு இன்னமும் பட்டணத்துப் பெருந்தன்மை முழுமையாக வரவில்லை என்று எங்கள் அம்மா சொல்வது சரியாகத்தான் இருக்கிறது! ஆனால்... அவர்கள்தான் கிராமத்தில் வளர்ந்தவர்கள்! இதெல்லாம் தெரியவில்லை! நீயாவது எடுத்துச் சொல்லியிருக்கலாமில்லையா? அதைவிட்டுவிட்டு... பாடம்.... அந்த நாலு கேள்விகளுக்கும் பதில் எழுதியாகி விட்டதா? பார், உனக்கு, நான் எவ்வளவு உதவி செய்திருக்கிறேன்!'' என்று கடைசியாக அபூர்வன் தன்னைத் தானே பாராட்டிக் கொண்ட போது மயூரிக்கு மயக்கம்போடாத குறைதான்.

பாடம் எழுதிக் கொடுத்திருப்பது அவள் வீட்டில்! இதில் யாருக்கு யார் உதவி செய்தது? இதென்ன உளறல்?

விஷயத்தை அபூர்வனே விளக்கினான்! இந்த நாலு புத்தகங்களையும், கல்லூரிக்குப் போய் படிப்பதற்குப் பதிலாக மயூரி இப்போதே படித்துவிட்டாளாம்! எனவே, அங்கேபோய்ப் படிக்கிற வேலை மிச்சமாம்! ஏற்கனவே படித்தது என்பதால், கல்லூரியில் கற்றுக்கொடுக்கும் போது அவளுக்கு மற்றவர்களை விட நன்றாக விளங்குமாம்! அதனால், பரீட்சையிலும் நிறைய மதிப்பெண் வாங்குவாளாம்! எத்தனை எத்தனை உதவிகள்!

மகேந்திரனுக்குப் பிடிக்காது என்பதால், மனோரஞ்சிதம் வீட்டாரை எதிர்த்தோ மட்டம்தட்டியோ பேசக் கூடாது என்பது, இந்த வீட்டின் பொதுவிதி! ஆயினும், இந்தப் பேச்சு பொறுக்காமல், "மயூரியும் கல்லூரியில் நீங்கள் எடுத்திருக்கும் அதே பாடங்களை எடுத்துப் படித்தால்தானே அபூ அத்தான், அப்படி? அவள் வேறு பாடம் எடுத்துப் படித்தால், இது அவளுக்கு வீண் வேலைதானே?" என்றாள் சந்தர்.

சற்றும் அலட்டிக் கொள்ளாமல், "நான் எடுத்திருக்கும் பாடம்தவிர மய்யூ வேறு எடுத்துப் படிப்பாளா? மாட்டாளே!" என்றான் அவன் சர்வநிச்சயமாக!

மயூரி மறுக்கவில்லை!

அபூர்வன் வீடு திரும்பியபோது, மறுநாள் தனக்குத் தேர்வு தொடங்குவதை மட்டும் நினைவுபடுத்திவிட்டு விடைகொடுத்தான்.

மறுநாள் காலையில் டெலி∴போன் மணியடித்ததும், மயூரிதான் ஓடோடிச் சென்று அதை எடுத்தாள்.



ஆனால், அது வெளியூர் 'கால்' எனவும், தந்தைக்காகத்தான் என்று எண்ணி ஏமாற்றத்தோடு அவரை அழைக்க அவள் வாய் திறந்தபோது "மிஸ் மயூரி இருக்கிறார்களா" என்று 'எக்ஸ்சேஞ்சில்' கேட்கவுமே அவளுக்குப் புரிந்துவிட்டது.

மகிழ்ச்சியோடு, "நான்தான் பேசுகிறேன்!" என்றுவிட்டு ஆவலோடு காத்திருந்தாள்.

அவளது பொறுமையைச் சோதிப்பதுபோல நாலைந்து 'கரகரா மொராமொரா' சத்தத்துக்குப் பிறகு, குணசீலனின் குரல் கேட்டது. மயூரி எதிர்பார்த்தது போலவே, தேர்வுக்குச் செல்லுமுன், 'பெஸ்ட் ஆ∴ப் லக்' சொல்லவே அவளை அழைத்திருந்தான் அவன்.

மயூரிக்கு உலகம் மீண்டும் வண்ணமயமாயிற்று!

தேர்வை மிக நன்றாக எழுதினாள்.

சென்றவேலை முடிந்து, தொடர்ந்து வந்த வேலைகளையும் முடித்துக் கொண்டு சென்னைக்குத் திரும்பி வந்த குணசீலனும் நல்ல சேதிகளையே சொன்னான்.

அவன் திருமணத்தையும், பிறந்தநாள் விழாவையும், வீடியோ எடுத்திருந்தவிதம் பார்த்துவிட்டு தொடர்ந்து சில வைபவங்களைப் பதிவு செய்ய அழைத்தார்களாம், அவர்களுள் ஒரு முக்கிய மனிதர் இருந்தார். இந்திய கிரிக்கெட்டில் செல்வாக்குள்ளவர் அவர். அவர் மூலமாகத் தனது கனவுகள் எல்லாமே நனவாகக்கூடும் என்ற பெரும் எதிர்பார்ப்புடன் குணசீலன் திரும்பி வந்திருந்தான்.

குணசீலனின் கனவுகள் அப்படி ஒன்றும் ஒளிவு மறைவானவை அல்ல! அவனுக்கு உலகம் முழுவதும் சுற்றவேண்டும்.

வித்தியாசமான இடங்கள்; வேறுபாடான மனிதர்கள் எல்லாம் பார்க்க வேண்டும்! சும்மா அல்ல! சம்பாதித்துக் கொண்டே பார்க்கவேண்டும்! பார்ப்பதே வருமானம் ஆகவேண்டும்!

இதற்காக அவன் நம்பியிருந்த ஒரே சாதனம் அவனது காமிராதான்.

குணசீலனுடைய தந்தை சிவசங்கரன், பணக்காரர் என்கிற அளவு சம்பாதிக்கவில்லை என்றாலும், வாயைக் கட்டி, வயிற்றைக்கட்டி வாழும் நிலைமை அவருக்குக் கிடையாது! மகன் காமராமேன் ஆகப்போவதாகச் சொன்னதுமே, ஒரு நல்ல வீடியோ காமிரா (சில லட்சங்கள் அதன்விலை) வாங்கித்தருவதாக வாக்களித்து அவனது படிப்பு முடிந்ததும் வாங்கிக் கொடுத்துத் தன் வாக்கைக் காப்பாற்றியவர் அவர்! ஒரு பிரபல தினசரிப் பத்திரிகையில் எடிட்டராக வேலை செய்தவர் என்பதால், இந்தக் காமிராவின் மதிப்பும் அறிந்தவர்.

இணைக்கும் பாலமான தாய் இல்லாத நிலையில், தந்தைக்கும் மகனுக்கும் இடையே அதிக நெருக்கம் இல்லை என்றாலும், மகனுக்கு அவர் எதிலும் குறை வைத்தது கிடையாது! குணசீலனும், நிலைமைக்கு மீறி ஆசைப்படுகிறவன் அல்ல.



பணத்தால் மகனின் தேவைகளை நிறைவேற்றிய சிவசங்கரனுக்கு அதற்குமேல் ஒரு தாயுமாய் இருந்து, அவனைப் பேணத் தோன்றவில்லை! தோன்றினாலும், அவரது பத்திரிகைப் பணி, அதற்குரிய அவகாசத்தை அவருக்குத் தரவில்லை என்றும் கூறலாம்.

ஆனால், அப்படி ஒரு பாசம் குணசீலனுக்குக் கிடைக்காமலும் போய்விடவில்லை! ரேவதியிடமிருந்து அந்த அன்பு அவனுக்கு எப்போதும் கிடைத்துவந்தது. ஒரே ஊர் என்பதனால், முதலில் தோன்றிய பிரியம், அவனது குணநலன்களை அறிய அறிய, ரேவதிக்குப் பன்மடங்காகப் பெருகிவிட்டிருந்தது. அத்தோடு, சிவசங்கரனும், அவளுடைய குடும்பத்துக்கு அறிமுகம் ஆனவரே என்பதால், குணசீலனிடம் அன்பு காட்டுவது அவளுக்கு இயல்பாகிப் போயிற்று.

நன்றாகப் படிக்கிற பையன்! விளையாட்டுகளில் பள்ளி கல்லூரி 'டீமில்' இருந்தது; கூடவே நோகப் பேசாத அவனது குணம், நல்ல உயரம், எல்லாமாகச் சேர்ந்து சுந்தருக்குக் குணசீலன் ஹீரோவாகத் தோன்றினான்!

மயூரிக்கும் எப்போதுமே அவன் ஒரு நல்லநண்பன்!

மயூரியுடைய தந்தை மகேந்திரனுக்கு மட்டும், குணசீலனை அவ்வளவாகப் பிடிப்பது இல்லை! 'பிசினஸ்மே'னான அவருக்குச் சிவசங்கரன் மாசச்சம்பளத்துக்கு மாரடிக்கிறவர்தானே என்கிற ஏளனம் உள்ளூர இருந்தது

அதோடு மனைவி ஊர்க்காரனை மதிக்கவும் மனம் வரவில்லை!

எனவே, அவ்வப்போது அந்தக் குடும்பத்தை மட்டம் தட்டும் விதமாக அவர் ஏதாவது பேசுவதுண்டு. ஆனால், பெரும்பாலும் பகலில், அவர் வீட்டில் இருப்பது இல்லை என்பதால், குணசீலனை அவர் சந்திக்கும் வாய்ப்பு அதிகமாய் ஏற்பட்டதில்லை! அப்படி ஏற்படும் போதும் அவரது குணம் உணர்ந்து, குணசீலன் மரியாதையுடன் பேசி, ஒதுங்கிப் போய்விடுவான்.

ஆனால், தான் தேர்ந்தெடுத்த தொழில் மூலமாகவே, உலகமெங்கும் சுற்றிவந்து, நிறையப் பணம் சம்பாதித்து அவர் முன் செல்வந்தனாக வந்து நிற்க வேண்டும் என்கிற ஆசை குணசீலனுக்கு உள்ளூர உண்டு!

அப்படி அவன் உலகம் சுற்றி அடைய ஆசைப்பட்டது ஓர் இடத்தில் நின்று நிலையாது என்று சொல்லப்படும் வெறும் செல்வத்தை மட்டுமல்ல!

## 4

மயூரி நல்ல மார்க்குகள் வாங்கிப் பாஸ் ஆகியிருந்தாள்.

மனோரஞ்சிதம் வீட்டுக்கு வந்து, வாய் நிறையப் பாராட்டியதோடு, ரேவதியிடம் உப்பும் மிளகாயும் வாங்கி, மருமகளுக்குத் திருஷ்டி சுத்திப் போட்டாள்!



''இன்றைக்குப் பாதாம் அல்வா செய்திருப்பீர்களே, அண்ணி? எங்கள் அப்புக்குட்டிக்கு பாதாம் அல்வா ரொம்பப் பிடிக்கும்! எனக்குத் தான் இந்தக் குடைச்சல் வந்ததிலிருந்து பிள்ளைக்கு... புருஷனுக்கு வாய்க்கு ருசியாக ஒரு பதார்த்தம் செய்ய முடியாமலேயே போய் விட்டது. நல்ல காலத்துக்கு நீங்கள் அருகில் இருப்பதால், உங்கள் மருமகனுக்கும் அவ்வப்போது ஏதாவது கிடைக்கிறது. இல்லாவிட்டால் பாவம், நாக்குச் செத்துப் போகும். முதலிலேயே அந்த டப்பாவில் எடுத்து வைத்து விடுங்கள், அண்ணி! இல்லாவிட்டால் காலியாகிப் போனாலும் போய் விடும்!'' என்றுரைத்து அவள் காட்டிய டப்பாவைப் பார்த்ததும் ரேவதிக்குப் பகீரென்றது! செய்தது முழுவதையும் வைத்தாலும் அந்த டப்பா நிரம்பாது!

அவசரமாக யோசித்து, ''அது...அது... அந்த டப்பா பழைய எண்ணெ ஊற்றி வைத்த டப்பா, அண்ணி! என்ன கழுவினாலும் காரல் நாற்றம் போகவே இல்லை! நான் உங்களுக்கு வேறு பாத்திரத்தில் வைத்துத் தருகிறேன்!''

செய்ததில் சரிபாதியை எடுத்து வைத்த பிறகே, மனோரஞ்சிதம் ஓரளவு திருப்தியடைந்தாள்.

அப்புறமும் இருந்து, இங்கே மீதி இருந்ததில் கணிசமான அளவு முழுங்கிவிட்டு, ஞாபகமாக பாதாம் அல்வா டப்பாவை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

கிளம்புமுன், மயூரியின் முகவாய் தொட்டு முத்த மிட்டு, "உன் அத்தானுக்கு பாசானதுக்கான விருந்து இந்தப் பாதாம் அல்வா கொண்டு போகிறேன், கண்ணு! அவன் ஒவ்வொரு முழுங்கு சாப்பிடுகிற போதும், உன்னையே நினைத்துக் கொண்டு உண்பான்!" என்று உபகாரமாய்க் கூறி விட்டுச் சென்றாள்.

அழுவதா சிரிப்பதா என்று அறியாமல் மயூரி பதுமைபோல நின்றாள்.

அம்மா ஆசையாகப் பாதாம் பருப்பு வாங்கி, ஊறப் போட்டு, தோலியகற்றி, அவளே பால் விட்டு ஆட்டுர லில் அரைத்து, கிண்டி வைத்த அல்வா! வீட்டினர், ஆசை தீர உண்ணக் கொடுத்து வைக்கவில்லையே என்பதில் மயூரிக்கு மிகவும் வருத்தம்தான்!

ஆனால், அபூர்வன், அவளை நினைத்தபடி ஆசை யாக உண்பான் என்பது மட்டும் சந்தோஷமாகவும் இருந்தது!

ஆனாலும், இது திருத்தப்பட வேண்டிய பழக்கம் என்பதில் அவள் மிகவும் தீர்மானமாகவே இருந்தாள்!

அடுத்து மயூரி என்ன பாடம் எடுத்துப் படிப்பது என்று வீட்டில் பேச்சுக் கிளம்பியது.

அபூர்வன் எடுத்துப் படித்த 'சோஷியாலஜி'யை எடுக்க அவளுக்குக் கொஞ்சமும் விருப்பம் இல்லை. ஆனால், அபூர்வனே, அவன் படித்ததைத்தான் மயூரியும் படிப்பாள் என்று சொல்லிவிட்ட பிறகு அதை அலட் சியப்படுத்தவும் அவளுக்கு மனம் வரவில்லை.



தந்தை தன் வாயால், வேறு எதையாவது எடுத்துப் படிக்கும்படி சொல்லி விட்டால், அதைப் பற்றிக் கொள்ள லாமே என்கிற ஆசை அவளுக்கு!

ஆனால், மகேந்திரனுக்கு மகளின் படிப்பில் அவ் வளவாக அக்கறை கிடையாது. எல்லோரும் படிக்கிறார் கள். இவளும் படித்து விட்டுப் போகட்டுமே என்பது தான். மற்றபடி என்றைக்கும் ஒருத்தனைக் கட்டிக் கொண்டு, சமையல்காரனை, விரட்டிக் கொண்டு இருக் கப் போகிறாள்! அல்லது, அவள் தாய் மாதிரி, பிள்ளைக ளுக்கு இது பிடிக்கும், புருஷனுக்கு அது பிடிக்கும் என்று தானே செய்துகொண்டு அடுப்படியில் கிடக்கப் போகி றாள்! இதற்கு, அவள் முக்கியப் பாடமாக எதை எடுத்துப் படித்து என்ன ஆயிற்று!

குணசீலன் வந்தபோது, ரேவதி பிரச்சினையை அவனிடம் சொன்னாள்.

"இதைப்பற்றி என்ன பிரச்சினை, ஆன்ட்டி? எப் போதுமே அவளுக்கு 'ஃபைன் ஆர்ட்ஸ்' தானே பிடித் தம்? அதையே எடுக்க வேண்டியதுதானே!" என்றான் இலகுவாக அவன்.

"அதைச் சொல்லு!" என்றாள் ரேவதி அலுப்புடன்.

"ஏன் ஆன்ட்டி? நான் வேண்டுமானால், மயூரி யிடம் இது பற்றிப் பேசட்டுமா? அல்லது, 'அங்கிளி'டம் எடுத்துச் சொல்ல வேண்டுமா?" என்று குணசீலன் வினவினான்.

சற்றுத் தயங்கிவிட்டு, "மயூ, அவள் அப்பாவோடு 'பாங்'கிற்குப் போயிருக்கிறாள், குணா!" என்றாள் ரேவதி மெதுவாக.

மீண்டும் குணசீலன் வந்து, இந்த விஷயம் பற்றிப் பேசத் தொடங்குமுன், நல்லவேளையாக இந்தப் பிரச்சினை தீர்ந்தே போய் விட்டது.

தீர்த்துவைத்தான் அபூர்வன்!

மயூரியின் மதிப்பெண்கள் பற்றி அங்கே அவன் வீட்டிலும் பேச்செழுந்திருந்தது. மயூரியின் மதிப்பெண்களோடு அவன் எடுத்திருந்தவைகளையும் சேர்த்துச் சீர்தூக்கிப் பார்த்து ஆராய்ச்சி நடந்திருக்கிறது.

மயூரியின் தட்டு மிகவும் தாழ, அபூர்வன் அந்தரத்தில் ஊசலாடினான்.

"மயூரி 'பளஸ் டூ'வில் எடுத்தது 'சயன்ஸ் குரூப்! இப்போதெல்லாம் சயன்சில் முழுமார்க் போடுகிறார்களே? அவன் எடுத்த, சோஷியாலஜி மாதிரிப் பாடம் என்றால் மதிப்பெண் மிகவும் குறைத்துத்தான் போடுவார்கள்!" என்கிற விதமாய்ப் பெற்றோரிடம் சமாளித்துவிட்டு, மயூரியின் வீட்டுக்கு ஓடிவந்தான் அபூர்வன்.

அத்தான் எடுத்துப் படித்த அதே சோஷியாலஜியில் நானும் சேருகிறேன் என்று அதையே அவளும் எடுத்துத் தொலைத்தாளானால் அடுத்த தேர்வின்போது என்னத்தைச் சொல்லிச் சமாளிப்பது? அவனது சோஷியாலஜி தவிர வேறு எந்தக் கழுதை, குதிரையையாவது எடுத்துப்



படிக்கச்சொல்ல வேண்டும் என்றுதான் அவன் விரைந்தோடி வந்தது.

அவனே; வேறு எடுத்துப் படிக்கும்படி கூறிவிடவும், மனதிலிருந்து பெரும் பாரம் இறங்கினாற்போல ஆயிற்று மயூரிக்கு!

மகிழ்ச்சியோடு, கல்லூரியில் சேர்ந்தாள் அவள்.

குணசீலனுக்கும் வாழ்க்கை உற்சாகமாகத்தான் இருந்தது.

திருச்சி திருமண விழாவில் அவன் சந்தித்த பெரிய மனிதர், தற்போதைய பெரிய மனிதர்கள் போல கண் மறைந்ததும் மறந்துவிடாமல், குணசீலனை நினைவு வைத்திருந்து அவனுக்காகச் சிபாரிசு செய்யவே, கிரிக்கெட் வட்டாரத்தினுள் நுழையும் வாய்ப்பு அவனுக்கு முதலில் கிட்டியது. சின்னச் சின்னக் கிரிக்கெட் போட்டிகளை அவனாகவே எடுத்துக் கொடுத்து, நல்ல திறமைசாலி என்று பெயர் வாங்கினான். மெல்ல மெல்ல, துலிப் ட்ராஃபி, ரஞ்சி ட்ராஃபி என்று படமெடுக்கும் வாய்ப்புகளும் அவனுக்குக் கிட்டலாயின. அந்த 'மாட்ச'களுக்கு வரும் வி.ஐ.பி.களைக் பேட்டி காணும்போது அதைப் படமாக்கும் காமராமேனாகவும் குணசீலன் செயல்படத் தொடங்கினான். தன் லட்சியங்களை விரைவிலேயே அடைந்துவிடலாம் என்கிற நம்பிக்கையும் அவனுக்கு உண்டாயிற்று.

மயூரியின் வீட்டைப் பொறுத்தவரையில், எல்லாம் வழக்கம் போலவே நடந்தன. மனோரஞ்சிதம், அபூர்வனின் திடீர்க் கெடுபிடிகள் உள்பட எல்லாமே!

கொஞ்சநாட்களாக மனோரஞ்சிதம் செல்வராஜ் தம்பதி, சற்று அதிக நெருக்கம் காட்டுவதுபோல உள்ளூர ஓர் உறுத்தல் ரேவதிக்கு ஏற்பட்டது. அது சரிதான் என்பதுபோல, செல்வராஜுடைய உறவு வகையில் ஒரு திருமணத்திற்கென்று, மகேந்திரனையும், ரேவதியையும் வற்புறுத்தி அழைத்துச் சென்றார்கள்.

சொந்தம் என்று பார்த்தால், மகேந்திரன் தம்பதிக்கும் திருமண வீட்டார் உறவுதான். ஆனால், வீட்டைப் போட்டுவிட்டுக் கணவன், மனைவி இருவருமாக சென்றாக வேண்டிய அளவு நெருக்கமான உறவு அல்ல! ஆனால், மனோரஞ்சிதம் சற்றுக் குழையடித்துக் கூப்பிடவே, சரிதான் என்று மகேந்திரன் மனைவியை அழைத்துக் கொண்டு கிளம்பி விட்டார்.

டாக்சிக்கும் ஓட்டலுக்கும் செலவு செய்வதற்காகவே மகேந்திரனை, நாத்தனார் அழைக்கிறாள் என்பது தெரிந்தும், அதுபற்றி ஒன்றும் சொல்லக்கூட முடியாமல், உடன்சென்றாள் ரேவதி.

மகளுக்கு ஆயிரம் அறிவுரை சொல்லிவிட்டு, வேலைக்காரியிடம், இரவு வந்து படுத்துக் கொள்ளும்படிப் பணித்துவிட்டு, அவ்வப்போது வந்து பார்த்துக் கொள்ளும்படிக் குணசீலனிடமும் கேட்டுக் கொண்ட பிறகு, அப்போதும் மனமற்றே ரேவதி பயணம் செய்தாள்.

அவளது கவலையைப் பார்த்து குணசீலனுக்கே சிரிப்பு வந்து விட்டது. ''விடுங்கள் ஆன்ட்டி! குடும்பப்



பொறுப்பு, வேலை, எல்லாம் இல்லாமல், இரண்டு நாட்கள் மாமாவோடு சுற்றிவிட்டு வாருங்கள்! இங்கே ஈ, எறும்புகூடக் கடித்துவிடாமல், சுந்தரையும், மயூரியையும் நானும் கற்பகமும், வாட்ச்மேனும் பார்த்துக் கொள்ளுகிறோம்! சனி, ஞாயிறு லீவுநாள் தானே!'' என்று ரேவதிக்குத் தென்பூட்டி அனுப்பிவைத்தான்.

அவளிடம் ஒப்புக்கொண்டபடியே பெரும்பாலும், மயூரியின் வீட்டிலேயே இருந்தான். அபூர்வனுக்கும், பெற்றோர் இல்லாதது போரடித்துப் போய்விட, அவனும் இங்கேயே டேரா போட்டான்.

நால்வருமாக கேரம் சீட்டு என்று ஏதாவது விளையாடிப் பொழுதைக் கழித்தனர். சில சமயங்களில் அபூர்வன் வீடியோ கேமில் உட்கார்ந்து விட, இவர்கள் மூவரும் ஸ்க்ராபிள் விளையாடினர்.

வீட்டுப் பெரியவர்கள் ஊருக்குப் போய் இரண்டாம் நாள், அவர்கள் நாலுபேருமாகச் சீட்டுக் கச்சேரி நடத்திக் கொண்டு இருந்த போது அவர்களைப் போலவே போரடித்துப்போன இன்னொரு விருந்தாளியாகச் சௌமியா அங்கே வந்தாள்!

சௌம்யாவும் அந்தப் பகுதியிலேயே வசிக்கும் அவர்களது உறவுக்காரப் பெண்தான். மயூரியைவிட, நாலு வயது பெரியவள். அபூர்வனுக்கும் அவளுக்கும் சில மாதங்களே வேறுபாடு. சௌம்யாவுடைய பெற்றோர் இருவருமே டாக்டர்கள். பெரிய டாக்டர்கள்! நிறையப் படித்து, சொந்த 'கிளினிக்' வைத்திருப்பவர்

கள்: நகரின் முன்னணி மருத்துவமனைகள் பலவற்றில் ஆனரரி டாக்டர்களாகப் பணி புரிகிறவர்கள். இருவரும் சம்பாதிக்கும் தொகை, மிக அதிகம். அதற்கு அவர்கள் கொடுத்த விலையும் அதிகம்தான்.

இன்னொரு குழந்தை பெற நேரமில்லை என்று ஒன்றோடு நிறுத்திக் கொண்டவர்கள். பெற்ற ஒரேமகள் அவளிடம் 'இல்லை' என்ற சொல்லையே கேட்டதில்லை! அவள் வாய்திறந்து கேட்டதெல்லாம் அவளுக்குக் கிடைக்கும். அப்போதே, சௌம்யாவிடம் கிரெடிட் கார்டு இருந்தது! எப்போது என்ன வேண்டும் என்றாலும், எது பிடித்தாலும் கிரெடிட் கார்டைக் கொண்டு போய்க் கையெழுத்திட்டு வாங்கி வந்து விடுவாள்! வருகிற பில்லுக்குரிய 'செக்'கை பெற்றோருடைய செகரட்டரி கட்டிவிடுவாள்! எனவே, பணத்தைப்பற்றி அவள் நினைத்துப் பார்த்ததே இல்லை எனலாம்!

அவளது அளவுமீறிய அலங்காரமும் எல்லை தாண்டிய நடை, உடை, பாவனைகளும் உடனொத்த பெண்களை அவளிடமிருந்து விலக்கி வைத்தன. 'அந்தப் பெண்ணோடு சகவாசம் வைத்துக் கொள்ளாதே' என்று அந்தப் பெண்களுடைய பெற்றோரை மகள்களிடம் எச்சரிக்க வைத்தது!

ரேவதி மட்டும் சௌம்யாவை ஒரேயடியாக ஒதுக்குவது இல்லை! பெற்றோரின் பரிவு, பாசத்துக்காக ஏங்கிப் போயிருக்கிறாள் இந்தப் பெண்! அவர்களது கவனத்தைக் கவரமுடியாமல் ஏதோ ஒருவகையில் மற்றவரின்



கவனத்தையாவது ஈர்த்துக் கொள்வதற்காக, சௌம்யா செய்யும் அசட்டு முயற்சியே, இந்த அதீத அலங்காரமும் ஆடை, அணி, மணிகளும்.

இப்படியெல்லாம் எண்ணியபோதும்கூட, சௌம்யாவோடு மகளை நெருங்கிப் பழகவிட ரேவதிக்கும் மனம் வரவில்லைதான். ஓரளவு மயூரியை எச்சரித்தே வைத்திருக்கிறாள். ஆனால் மற்றவர்கள் போல, சௌம்யாவை ஒரேயடியாக ஒதுக்காமல், ஆனால் ஒரேயடியாக உள்ளே, சேர்த்துக் கொள்ளவும் இல்லாமல், பட்டும் படாமலுமாகப் பழகிவந்தாள்.

கூட இருந்து - கும்மாளமிடும் 'ஜெட்செட்'டே போதும் போல, மற்றவர்களின் தோழமையையோ, துணையையோ சௌம்யாவும் அதிகம் நாடியதில்லை. எப்போதாவது வெகு அபூர்வமாக நேரும் தனிமையின் போது இந்தப்பக்கம் எட்டிப் பார்ப்பாள். ரேவதி செய்து வைத்திருக்கும் பலகாரங்களை நெட்டை விட்டுச் சாப்பிடுவாள்!

அன்றும் அப்படித்தான். ஏதோ ஓர் எரிச்சலோடு, நள்ளிரவில் வீடு திரும்பிய சௌம்யாவுக்குக் காலையில் வெளியே செல்லவே மனமில்லை! அவள் விழித்து எழுந்தபோது ஒரு 'மேஜர் ஆபரேஷன்' என்று தந்தை காலையிலேயே வெளியே சென்றுவிட்டிருந்தார். தாயார் ஊரிலேயே இல்லை! ஒரு செமினாருக்காகப் புதுடில்லி சென்றிருந்தாள்.

பத்து மணியளவில், காலை உணவுக்காகச் சாப்பாட்டு மேஜைமுன் அமர்ந்தவளுக்கு பெற்றோர் பற்றிய

சேதி சலிப்பூட்டியது! "ஆ....மாம்! என்றைக்குத்தான் இரண்டுபேரும் வீட்டில் இருந்தார்களாம்! எங்கே என்று கேட்டதே என் முட்டாள்தனம்!" என்று முணுமுணுத்த படியே தட்டைத் தள்ளிவிட்டு எழுந்துபோனாள்.

"வள்ளி, சின்னதும் சாப்பிடல்லியாம். ரெண்டு அடுக்கிலே, பொங்கல்வடை, பூரிகிழங்கு, சப்பாத்தி குருமா எல்லாம் எடுத்துத் தர்றேன். என் பிள்ளை வீட்டிலே ஒன்னைக் கொடுத்திட்டு, அடுத்ததை உன் வீட்டுக்கு எடுத்துப்போ!" என்றாள் சமையல்காரம்மாள்!

மீண்டும் ஒரு தூக்கம் போட்டுவிட்டு எழுந்து வந்த சௌம்யாவுக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது.

சாப்பாட்டு அறைக்குப் போய் மணியடித்தால், இன்னமும் சமையல் ஆகவில்லை என்றார்கள்! காலை செய்தது காலியாகி விட்டதாம்! மனம் வெறுத்து எழுந்து வந்தவளுக்கு ரேவதியின் ஞாபகம் வந்தது.

ரேவதி ஆன்ட்டி வீட்டுக்குப் போனால், ஏதாவது பலகாரம் கிடைக்கும்! முறுக்கு, அதிரசம், அச்சமுறுக்கு, முந்திரிக்கொத்து என்று பழையகாலச் சிற்றுண்டி வகைகள்தான்! பீட்சா, ரோல்ஸ் என்று ஒன்றும் இராதுதான்! ஆனாலும் வாய்க்கு ருசியாகத்தான் இருக்கும்! கூடவே கொஞ்சம் பரிவும் பிரியமுமாகவும் தருவார்!

நினைத்ததுதான் தாமதம்! உடனே பரபரவென்று ஒரு ஜீன்சை மாட்டிக்கொண்டு சௌம்யா கிளம்பிவிட்டாள்!



ஆசையாக நாக்கில் 'நீர் ஊறச் சென்றவளுக்கு அங்கும் ஏமாற்றம்தான் காத்திருந்தது. ரேவதி இல்லை. இருந்த இளைய தலைமுறை சீட்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தது.

கழுதையாட்டம்! அபூர்வன்தான் நிறைய 'லொத்து' வாங்கிக் கொண்டிருந்தான்!

அப்போதும் விருந்துபசாரம் மறவாது, மயூரி, சௌம்யாவை வரவேற்று, அருகில் அமரும்படி சொல்லி விட்டு வேலைக்காரி கற்பகத்தை அழைத்து, விருந்தாளிக்குப் பழச்சாறு கொண்டுவரச் சொன்னாள்.

பசியோடு வந்திருப்பவளுக்கு வெறும் பழச்சாறா?

சௌம்யாவுக்கு அதுவும் பிடிக்கவில்லை! அவர்கள் நாலு பேருமாகச் சேர்ந்து, சிரித்து விளையாடியதும் பிடிக்கவில்லை.

அவளை ஒத்த வயதுடையவர்கள்தானே? அவள் மட்டும் தன்னந்தனியாக, பசியோடு போராடித்துக் கொண்டு இருக்கும்போது, இவர்கள் மட்டும் எப்படி, இப்படிச் சந்தோஷமாக இருக்கலாம்? அதுவும் அவளை விட்டுவிட்டு?

"எனக்குப் 'பீட்சா' சாப்பிடவேண்டும் போல இருக்கிறது! என்னோடு யார் யாரெல்லாம் 'பீட்சா கார்னர்'ருக்கு வருகிறீர்கள்?" என்று வினவினாள்.

விளையாட்டு மும்முரத்தில் இருந்ததால் யாருமே அவளது கேள்வியைச் சரியாகக் கவனித்ததாகவே தெரியவில்லை!

''ஏய், மயூ! என்ன இது! அபூ அத்தானுக்கு மட்டும் சின்ன சீட்டாகப் பார்த்து 'லொத்து' கொடுக்கிறாயே! கொஞ்சம் நேர்மையாத்தான ஆடேன்!'' என்று கத்தினான், சுந்தர். ''இல்லாவிட்டால் ஆட்டத்தைக் கலைத்து விடுவேன்!'' என்றும் மிரட்டினான்!

''அந்த ஜாதியில் அது கடைசிச் சீட்டாக இருக்குமடா! மற்றபடி ஒன்றும் பட்சபாதம் பார்க்கமாட்டாள்! விளையாட்டில் கூட!'' என்று மயூரியைத் தாங்கிப் பேசினான் குணசீலன்!

''என்னவோ? அபூர்வன் அத்தானுக்கு 'லொத்து' வாங்கி வாங்கியே நிறையச் சேர்ந்துவிட்டது! சேர்ந்த சீட்டைப் பிடித்துக் கொள்ள இன்னொரு கை வேண்டும்! ஏன் சௌம்யா அக்கா, நீங்கள் அவருக்கு உதவுவது தானே?'' என்று கேலியாகக் கேட்டான் சுந்தர்.

''என்னது? தோல்வியில் பங்கேற்பதா? அதைவிட அருமையான ஐடியா, அபூர்வனை இழுத்துக்கொண்டு 'பீட்சா' ப்ளேசுக்குப் போவது! என்ன அபூர்வன், வருகிறீர்களா? செலவைப் பற்றிக் கவலைவேண்டாம்! என்னிடம் கிரெடிட் கார்டு இருக்கிறது! அபூர்வன் மட்டுமல்ல! எல்லோருமே சேர்ந்தே போகலாம்! என்ன சொல்கிறீர்கள்?'' என்று பணத்தைக் காட்டி, மீண்டும் அழைத்தாள் சௌம்யா!

கையில் நிறைந்திருந்த சீட்டுகள் வெறுப்பூட்ட, அவற்றைச் சுருக்கிச் சேர்த்தபடி, ''நல்ல ஐடியாதான். போகலாமா மயூரி?'' என்று அவளிடம் கேட்டான் அபூர்வன்!



பீட்சா சாப்பிட மயூரிக்கும் ஆசைதான்! ஆனால், அவளுடைய அன்னையின் கட்டளைகளுள், வீட்டை விட்டு எங்கும் வெளியே செல்லக்கூடாது என்பது ஒன்று! அதிலும் ஐஸ்க்ரீம் சாப்பிட, ஃபாஸ்ட் ஃபுட்சில் வெட்ட என்று யார் அழைத்தாலும் போகக்கூடாது என்று ரேவதி மகளிடம் கண்டித்துச் சொல்லியிருந்தாள்.

தனியாக ஓட்டல், பார்லர் என்று சுற்றுகிற பெண் என்று, தன் மகள் பெயர் கெட்டுவிடக்கூடாது என்பது அவளுக்கு!

தாயின் சொல்லை மீற மனமின்றி, ''வே...ண்டாம்! வெளியே எல்லாம் போய்ச் சாப்பிட்டால், அம்மாவுக்குப் பிடிக்காது!'' என்று மயூரி, தயக்கத்துடன் மறுத்தாள்.

''ரேவதி ஆன்ட்டியின் பலகாரங்கள்தான் பட்டிக் காட்டுப் பலகாரங்கள் என்று பார்த்தால் அவர்களே பட்டிக்காடுதானா? ஏன்? இரண்டு தெரு தள்ளி இருக்கிறது 'பீட்சா ப்ளேஸ்' அங்கே போய்ப் 'பீட்சா' சாப்பிட்டு வந்தால் உங்கள் இந்தியப் பண்பாடு என்ன குலைந்து போய் விடுமாம்?'' என்றாள் சௌம்யா துடுக்காக.

''ஆன்ட்டி எதையும் காரணமின்றிச் சொல்லமாட்டார்கள்!'' என்றான் குணசீலன் இலகுவாக, ஆனால் தெளிவாக!

''அப்படியா? ஓகே!'' என்றாள் சௌம்யாவும் இலகுவாகவே. தொடர்ந்து, ''இன்னதென்று தெரியாத அந்தக் காரணத்தைக் கட்டிக் கொண்டு, வீட்டிலேயே இருப்பவர்கள் இருங்கள்! சுடச்சுடப் பீட்சாவை ரசித்துச்

சாப்பிட விரும்புபவர்கள் என்னோடு வாருங்கள்!'' என்று அழைத்தவள், ஒருமுறை பார்வையைச் சுழற்றினாள். பிறகு, அபூர்வனிடம் சென்று, அவன் கையிலிருந்த சீட்டுகளைப் பிடுங்கிக் கீழே எறிந்தாள்! ''என்ன அபூ, இப்படியே தோற்றுக்கொண்டே இருக்கப் போகிறீர்களா? அதைவிட என்னோடு வந்து 'பீட்சா' சாப்பிடுங்களேன்! நல்ல 'பீட்சா! சீஸ், சாஸ் எல்லாம் போட்டு... வாருங்கள், அபூர்வ்!'' என்று அதட்டி, ஆசைகாட்டி அவன் கையைப் பற்றி எழுப்பி அழைத்தாள்.

''கொஞ்ச தூரம்தானே? சும்மா வாயேன் மயூரி!'' என்று மயூரியைக் கூட அழைத்தான் அபூர்வன். ''உனக்கும் 'பீட்சா' அதுவும் அந்தக் கடையில் செய்தது ரொம்பப் பிடிக்குமே!'' என்று தன் பங்குக்கு அபூர்வனும் ஆசைகாட்டி அழைத்தும் அவள் பிடிவாதமாய் மறுத்து விட்டாள்.

சௌம்யாவாவது எல்லோரையுமே முதலில் அழைத்தாள்! ஆனால் வாய்வார்த்தையாகக் கூடக் குணசீலனையோ, சுந்தரையோ அழைக்கக் கூடத் தோன்றாமல் அபூர்வன் சௌம்யாவோடு கிளம்பிச் சென்றான்.

அறைவாயில் தாண்டும் வரை அவர்களையே பார்த்துக் கொண்டிருந்த மயூரியின் முகத்தில் ஏக்கமும் ஒருவித வருத்தமும் கூட இருந்தது.

மற்ற இருவருமே அதைக் கவனித்தனர்.

''ஏய் மயூ, உனக்கென்ன 'பீட்சா' தானே வேண்டும்? நான் போய் வாங்கி வருகிறேன்!'' என்று கிளம்பினான் சுந்தர்.



சின்னச் சிரிப்புடன், ''பீட்சா' வாங்க வெளியே போய்த்தான் ஆக வேண்டுமா? டெலிஃபோன் செய்தால் வீடுதேடி அதுவே வந்துநிற்குமே! 'டயல்' எ பீட்சா' விளம்பரம் பார்த்ததில்லை?'' என்றுவிட்டு, எழுந்து சென்று, டெலிஃபோன் செய்துவிட்டு வந்து அமர்ந்தான் குணசீலன்.

பாக்கெட்டில் ஒரு பத்து ரூபாய் தவிரத் தன்னிடமிருந்த பணம் முழுவதையும் 'பீட்சா' கொணர்ந்தவனிடம், குணசீலன் எடுத்துக் கொடுத்தபோது மயூரிக்கு வருத்தமாய்த்தான் இருந்தது!

ஆனால், சௌம்யாவும் அபூர்வனும் திரும்பிவந்து, 'பீட்சா' வந்த அட்டைப்பெட்டியையும் மூவரும் உண்டு முடித்துக் கொண்டிருந்த பேப்பர் தட்டுகளையும் பார்த்து ஏமாற்றத்துடன் விழித்த போது, அந்த வருத்தம் அடியோடு மறைந்துபோனது!

இது நடந்து ஓரிரு மாதங்களில், மேல் படிப்புக்கு என்று சௌம்யா யு.எஸ். சென்றுவிட, அவளது முகம் கூட எல்லோருக்கும் மறந்து போகலாயிற்று.

மற்றது மறக்கும் அளவுக்கு இங்கும் சில பல நிகழ்ச்சிகள் நடந்தன.

மகேந்திரன், புதிதாகத் தொடங்கிய 'சிறுதொழில்' ஒன்று வெற்றிகரமாக நடக்கவே, தொழில் வட்டாரத்தில் அவருக்கு ஒரு பெரும் பெயர் உண்டாயிற்று.

மனோரஞ்சிதமும் அடிக்கடி வீடுவந்து, மயூரியின் கன்னம் தடவிக் கொஞ்சிவிட்டுப் போனாள்.

திடுமென ஒருநாள் இரவு, 'செல்வராஜ் மாப்பிள்ளை இன்றைக்கு நம் ஃபேக்டரிக்கு வந்திருந்தார்!'' என்றார் மகேந்திரன்.

அவரது உற்சாகத்தையும், அதை வெளிக்காட்டாமல் அடக்கிக் கொள்ள அவர் பாடுபடுவதையும் கண்ட ரேவதி உள்ளூர உதைப்புடன், ''ஃபே...பேக்டரிக்கா? ஏன்? எதற்காக அங்கே வந்தார்?'' என்று விசாரித்தாள்.

''ஏன்? வரக்கூடாதா? என் தங்கை புருஷன்டி! அவருக்கு என் ஃபேக்டரிக்கு வர உரிமை இல்லையா?'' என்று அவர் இடக்குபேசவும், ரேவதியின் மனம் இன்னமும் சோர்ந்தது.

என்னவோ நடந்திருக்கிறது!

''அதற்கில்லை! இதோ, எதிர்த்தாற்போலப் பக்கத்தில் இருக்கிறது வீடு! எதுவானாலும், இங்கே வந்து பேசாமல் பத்து கிலோமீட்டர் தாண்டி, ஃபேக்டரியில் வந்து பேசவேண்டுமா என்று தோன்றியது! அவ்வளவுதான்! அவர் வசதிக்குத்தான் பார்த்தேன்..'' என்று விளக்கினாள் மனைவி.

''தொழில் நடக்கும் இடத்தை நேரில் பார்த்தால்தானே, தொழில் எப்படி நடக்கிறது என்று நிச்சயமாகத் தெரியும்? ஊர் உலகில் சொல்வதை நம்பிச் செயல்பட, செல்வராஜ் மாப்பிள்ளை என்ன முட்டாளா? கறுப்பாய் வாந்தி எடுத்ததைக் காக்காய் காக்காயாய் வாந்தி எடுத்ததாகச் சொல்ல எத்தனை பேர் இல்லை? அதனால்தான், நேரிலேயே பார்த்துத் தெரிந்துகொள்ள வந்தார்!'' என்று மகேந்திரன் வாயைவிட்டார்!



''தெரிந்துகொண்டு என்ன செய்யப்போகிறாராம்?'' என்று அவர் முகத்தைக் கூர்ந்து நோக்கியவாறு, ரேவதி வினவினாள்.

மகேந்திரன், அவரது கண்ணாடியைத் துடைப்பதில் முனையவும் ''சொல்லுங்கள் நம் தொழில் நிலைமை தெரிந்து அவர் என்ன பண்ணப் போகிறார்?'' என்று பதற்றத்தை மறைத்தவாறு பிடிவாதமாகக் கேட்டாள் அவள்.

சடக்கென நிமிர்ந்து, ''வேறென்ன? சம்பந்தம் பண்ணப் போகிறார்! அவ்வளவுதான்!'' என்று குரலை உயர்த்தி மொழிந்தார் மகேந்திரன்!

திகைத்து நின்றாள் மனைவி!

## 5

கொஞ்சகாலமாகவே ரேவதி உள்ளூர அஞ்சிக் கொண்டிருந்த விஷயம்தான் இது. ஆயினும், ஒரே மகனான அபூர்வனுக்கு முடிந்த அளவு பணக்காரச் சம்பந்தம்தான் தேடுவார்கள் என்ற நம்பிக்கையும் அவளுக்கு இருந்ததால், ஒரேயடியாக இழந்து போய்விடவில்லை. அடிக்கடி மனோரஞ்சிதம் ஜாடைமாடையாகப் பேசும்போதுகூடக் கறக்கிறவரை கறப்பதற்காகக் கூறும் வார்த்தைகள். இன்னும் பகைமையாக இன்னோர் இடம்

கிடைத்தால் இந்தவார்த்தைகள் காற்றோடு போய்விடும் என்றுதான் எண்ணியிருந்தாள்!

இப்போது, இந்தப் புதிய தொழில்கூடம் நல்லபடியாக நடப்பதால், இதுவே போதும் என்று தோன்றி விட்டதா?

அதுவும், வீட்டில் பேசினால் ரேவதியின் குறுக்கீடு இருக்கக்கூடும் என்று ஃபேக்டரியில் போய்ப்பேசி யாகிறதே!

மனைவியின் பேச்சுக்கு மகேந்திரன், மதிப்புக் கொடுப்பது இல்லை என்பது எல்லோரும் அறிந்த விஷயம்தான்! ஆனாலும் அவளது மறுப்புக்கு இடம் கொடுத்து விடக்கூடாது என்றுதானே அவ்வளவு தூரம் போய்ப் பேசியிருக்கிறார்!

முடிவே செய்துவிட்டார்கள் போல் இருக்கிறதே!

என் பூ மகள் இவர்களிடமா மாட்டிக் கொள்ளப் போகிறாள்?

தன்னைச் சமாளிக்க ரேவதி பெருமுயற்சி செய்து கொண்டு இருக்கும்போதே, ''என்னடி, பேய்முழி முழிக்கிறாய்? ஒரு நல்ல இடத்திலிருந்து நம் மகளைப் பெண் கேட்டு வந்தார்கள் என்கிறேன்! ஒரு சந்தோஷம் சிரிப்பு ஒன்றும் இல்லாமல் விடியாமூஞ்சி மாதிரி நிற்கிறாயே!'' என்று அதட்டினார் மகேந்திரன்.

இதை எதிர்த்து ஏதும் பேசக்கூடாது என்று எச்சரிக்கை! ஆனால், பெற்றமகளின் வாழ்வாயிற்றே!



''அவள்... மபூ சின்னக்குழந்தை!'' என்றாள் மெதுவாக.

''என்னடி குழந்தை? அவள் வயதில், எத்தனையோ பேர் பிள்ளையே பெற்றுவிடுகிறார்கள்!'' என்று எகிறினார் பெற்றவர்.

''இன்னமும் அவளுக்குப் பதினெட்டு நிரம்பவில்லைங்க! சட்டமே விடாது!''

''சரிதான்போ! இன்றைக்கே திருமணம் என்றா நினைத்து விட்டாய்? சும்மா ஒரு பேச்சுவார்த்தை தானேடி! அதற்குள் அவளைக் கல்யாணம் செய்துகொடுத்து வீட்டைவிட்டு அனுப்பிவிடப் போவதாகப் பயந்து விட்டாயாக்கும்! போடிபோ! இதற்குத்தான் அந்த முழி முழித்தாயா?'' என்று சிரித்தார் மகேந்திரன். குரலைத் தணித்து, ''பார் ரேவதி, அவர்களும் பணக்காரர்கள்! அபூர்வன் ஒரே பிள்ளை வேறு! கண்ணுக்கு லட்சணமாய், வெள்ளையாக, அழகாக வேறு இருக்கிறான். கெட்ட பழக்கம் எதுவும் இல்லை!'' என்று அபூர்வனின் தகுதிகளை அடுக்கலானார் அவர்.

இடையிட்டு, ''ஆனால் படிப்பு இல்லையே! பி.ஏ. கூட ஃபெயில் ஆகிவிட்டானே!'' என்றாள் ரேவதி மெல்லிய குரலில்.

''பெரிய பாஸ்! பெரிய ஃபெயில்! இவன் பட்டம் வாங்கி எந்த அலுவலகத்தில் போய் வேலை பார்த்தாக வேண்டும் சொல்லு! என்ன, ஆங்கிலத்தில் பேசத் தெரிகிறது; எழுதத் தெரிகிறது! நம் தொழிலுக்கு இது போதாதா? பல்லி மாதிரி சொல்லிக்கொண்டே இருக்கி

நாயே! அவன் தகுதிக்குத் திருமணத்துக்குப் பார்க்கிறார்கள் என்று தெரிந்தாலே யாராவது கொத்திக் கொண்டு போய்விடுவார்கள்! அதனால்தான்... ஒரு பேச்சு உறுதி பண்ணிக் கொண்டால் நல்லது'' என்று...''

''ஒத்துக் கொண்டுவிட்டீர்களா?'' என்று அவசரமும் அச்சமுமாக ரேவதி கேட்டாள்.

''ஆமாம்!'' என்றார் அவர் அழுத்தமான குரலில்!

இதுபற்றி மேலும் பேசி, கணவனின் பிடிவாதத்தை மேலும் வலுப்படுத்த விருப்பம் இல்லாமல், ரேவதி வாயை மூடிக்கொண்டாள்.

இதற்குமேல் மயூரி மூலமாய்த்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆனால், மயூரியிடம் இந்தப் பேச்சை எடுத்த போது, ரேவதி பெரும் ஏமாற்றமே அடைந்தாள்! ஏனெனில், மயூரி, அபூர்வனை மணந்து கொள்ள சந்தோஷமாய்ச் சம்மதித்தாள்!

அபூர்வனை மணந்துகொள்ளச் சம்மதமா என்று கேட்டபோது இதென்னம்மா கேள்வி?'' என்று கேட்டாள் மகள். ''சின்னப் போதிலிருந்தே அப்படித்தானே அம்மா திட்டம்?'' என்று மயூரி தொடர்ந்து கூறவும் ரேவதிக்கு மிகவும் வேதனையாகி இருந்தது.

மனோரஞ்சிதம் உரிமைகாட்டி, குறிப்பு கொடுத்துப் பேசும் போதெல்லாம் வீண் தகராறு வேண்டாம் என்று பேசாமல் இருந்தது. எவ்வளவு பெரிய பிழையாகி விட்டது?



தகராறு என்று வந்தால், கணவன் தன்னைத்தானே அடக்குவார் என்று வாய்மூடி ஒதுங்கியது வினையாகி விட்டதே! இவள் மனதில் அபூர்வன் முகம் பதிந்து விட்டதா?

உள்ளப் பதைப்பை வெளியே காட்டாமல், ''அதென்னம்மா பெரிய திட்டம்? உறவிலே, முறையிலே, பொருத்தமான வயதிலே பிள்ளைகள் இருந்தால், ஒருவருக்கொருவர் முடிச்சுப் போட்டுப் பேசுவதுதான்! அதுவே சாசுவதம் என்று இல்லை மயூரி! உனக்குப் பிடிக்கவில்லை என்றால் தைரியமாகச் சொல்லிவிடு! அதில் ஒன்றும் தப்பில்லை, கண்ணு!'' என்று வழிசொல்லிக் கொடுத்தாள் தாய்.

'வேண்டாம் என்று சொல்லிவிட்டேன்' என்று கெஞ்சியது அவள் மனம்.

ஆனால், ''விருப்பம்தான், அம்மா!'' என்று கூறிவிட்டாள் மகள். ''என் சினேகிதிகள் எல்லோரும், அபூ அத்தான் சும்மா இங்கு வந்து பழகுவதற்கே என்னை ரொம்ப 'லக்கி' என்பார்கள். அவரை விட்டு விடாதே என்பார்கள்! அத்தோடு, இந்தத் திருமணத்தால் நமக்கு நிறைய நல்லதும் இருக்கிறதம்மா!''

''என்னடி நல்லது?''

''அத்தை வீட்டிலிருந்து, திடீர் திடீரென்று குழம்பு, கூட்டு, பலகாரம் என்று ஆள்வருகிறதே! அதை நான் நிறுத்தி விடுவேன்! பாதி நாள் சுந்தருக்கு விருப்பம் போலச் சாப்பிடவே முடியவில்லையே! அது இனி இராமல் பார்த்துக் கொள்வேன்!''

ரேவதிக்குக் கண்கள் கசிந்துவிட்டன! அவளுடைய சின்ன செல்லமகள் என்னவெல்லாம் யோசித்து வைத்திருக்கிறாள்?

மகளின் கன்னத்தை வருடி, ''பாப்பா! திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர்! இதுபோலச் சிறு தொல்லைகளைப் பெரிய விஷயமாய் எடுத்துக் கொண்டு திருமண விஷயத்தில் முடிவெடுக்கக் கூடாதுடா, கண்ணு!'' என்று எடுத்துரைத்தாள்.

மயூரி சற்றே யோசித்தாள். அபூர்வனின் அழகிய முகம் அவளது மனக்கண் முன் தோன்றியது! 'என்னைக் கொஞ்சம் அவருக்கு அறிமுகப்படுத்தி வையேன்' என்று பிரமீளாவும் ப்ரீதியும் கெஞ்சியது நினைவுக்கு வந்தது. லேசாக முறுவலித்து, ''எனக்கே கூடப் பிடித்தம்தான், அம்மா!'' என்று முடித்தாள்.

அதற்குமேல் அந்தத் தாயால் என்ன செய்ய முடியும்?

அபூர்வனுடைய தந்தை வந்து, முறைப்படி தந்தையிடம் பெண் கேட்டார் என்று அறிந்ததும் இந்தச் சந்தோஷச் செய்தியை குணசீலனுடன் பகிர்ந்து கொள்ள மிகவும் ஆசைப்பட்டாள்.

லைப்ரரிக்குச் செல்லும் சாக்கில் அவன் வீட்டுக்கே சென்று பார்த்தாள். அவன் திரும்பிவர இரண்டு நாட்கள் ஆகும் என்று அறிந்த பிறகுதான், குணசீலன் வெளியூர் சென்றிருந்ததே மயூரிக்கு நினைவு வந்தது! அவன் வீட்டுக்கு வந்து, அன்னையிடமும், அவளிடமும் சுந்தரியிடமும் கூடச் சொல்லிக்கொண்டுதான் கிளம்பினான்.



அவளுக்கு இருந்த பரபரப்பில், அதெல்லாம் மறந்துவிட்டதே!

இருதினங்களில், திரும்பிவந்த குணசீலன், தன் வீட்டிற்கே போகாமல், மயூரியின் இல்லத்திற்கு வந்தான். ''ஒரு நல்ல சேதி இருக்கிறது! தெரியுமா?'' என்றான் உற்சாகத்துடன்.

''அதைவிட ரொம்ப நல்ல சேதி நான் வைத்திருக்கிறேன், தெரியுமா?'' என்றாள் மயூரி பெருமையாக.

''என்ன? உன் வகுப்பில் ஏதாவது குட்டி டெஸ்டில் முதல்மார்க் வாங்கிவிட்டாயா?'' என்றான் குணசீலன் கிண்டலாக.

முறைத்துவிட்டு, ''எப்போதும்தான் வாங்குகிறேன்! அதெல்லாம் ஒரு சேதியில் சேர்த்தியா? பாடத்தைக் கற்றுக்கொடுத்து விட்டு குட்டி டெஸ்டில் முதல் மார்க் வாங்குவதை நல்ல சேதி என்றால், அது உங்களுக்குத்தான் கேவலம்!'' என்று உதட்டைப் பிதுக்கினாள் மயூரி!

''நானே? உயிரைக் கொடுத்துக் கற்பித்தாலும், ஏற்கும் மூளை மாணவிக்கு வேண்டாமா? என்னதான் நீர் ஊற்றினாலும், கட்டாந்தரையில் பயிர் வளருமா?'' என்று குணசீலன் தோளைக் குலுக்கவும், மயூரிக்குச் சிரிப்பு வந்தது!

அதை அடக்கிக்கொண்டு, ''என் மூளை கட்டாந்தரைக்குச் சமம் என்கிறீர்களா? இருங்கள், இருங்கள்! என்னை இப்படி மட்டம் தட்டினதற்குத் தண்டனையாக

என் செய்தியை, நான் உங்களுக்குச் சொல்லவே போவதில்லை!'' என்று விறைத்துக் கொண்டாள் மயூரி

''சரக்கு மலிந்தால் சந்தைக்குத்தானே வருகிறது! ஆனாலும், என்ன ஏது, என்று கேளாவிட்டால் உன் மனம் உடைந்து விடுமே என்று கேட்கிறேன்! சொல்லு!''

''ஊகும்! அதெல்லாம் முடியாது!''

''சும்மா சொல்லுங்க மேடம்! அல்லது, நிஜமாகவே உனக்குச் சொல்ல விருப்பம் இல்லையாக்கும் என்று, நான் திரும்பிப் போனாலும் போய்விடுவேன்!''

ஒருகணம் திகைத்துவிட்டு, ''அதெல்லாம் போக மாட்டீர்கள், குணா!'' என்றாள் மயூரி ஒரு நிச்சயத்துடன்.

''ஏன் போகமாட்டேனாம்?''

''பெரிய விஷயம் சொல்லவென்று, வீட்டுக்குக் கூடப் போகாமல், மூட்டை முடிச்சோடு இங்கே வந்திருக்கிறீர்களே, அதைச் சொல்லாமல் போய்விடுவீர்களாக்கும்?!''

''சரி! என் சேதியைச் சொல்லிவிட்டு ஓடிவிடுகிறேன்!''

''அதுவும் மாட்டீர்கள்!''

''ஏனோ?''

''குணா நீங்கள் பண்பாடு உள்ளவர், உங்கள் காரியம் ஆனால் போதும், மற்றவர்கள் எப்படியோ போகட்டும் என்று விட்டு விட்டுப் போக உங்கள் மனம் இடம்தராது!''



''போச்சுடா! சரியானபடி மாட்டிவிட்டாயே! சரி சொல்லு! உன் நல்ல செய்தி என்ன?''

''முதலில் உங்கள் விஷயம் சொல்லுங்கள்! அதைச் சொல்ல அவ்வளவு தூரம் நினைத்துக் கொண்டே வந்திருக்கிறீர்கள்! அதனால், உங்களுக்குத்தான் முதல் உரிமை!''

''பெண்களுக்குத்தான் முதல் உரிமை!''

''அது அந்தக்காலம்! இப்போது, எதிலும் ஆணும் பெண்ணும் சமம்தான்! சொல்லுங்கள், குணா!'' என்று அவள் சற்றுக்குழைவான குரலில் கேட்கவும் குணசீலன் சொன்னான்.

ஏற்கனவே, பல கிரிக்கெட் போட்டிகளில், கிரிக்கெட் வீரர்களைப் பேட்டிகாணும் போது கேமரா மூலம் அதைப் படமெடுத்துக் கொண்டிருந்தான். இந்த முறையும் அந்த வகையில் 'காமிராமேன்' ஆகத்தான் குணசீலன் புதுடெல்லி சென்றது! விளையாட வந்திருந்தவர்களின் காப்டனின் பேட்டி மாலையில் எடுக்கலாம் என்று திட்டமிட்டிருந்தார்கள். ஆனால் வேறோர் இடத்துக்குப் போகவேண்டி இருப்பதால், பேட்டியை அப்போதே எடுக்கமுடியுமா என்று கேட்டார் கிரிக்கெட் வீரர். இங்கோ, பேட்டியாளர் மாலையில்தானே பேட்டி என்று, வேறுவேலை பார்க்க சென்றிருந்தார்.

கிரிக்கெட் வீரர் ஒரு மரியாதையோடு, இப்போது முடியுமா என்று கேட்கும்போது, 'மாலையில்தானே ஒத்துக்கொண்டீர்கள்' என்று தகராறு பண்ண, அவர்களது குழுத்தலைவருக்கு விருப்பம் இல்லை. எனவே, படமெ

டுக்கும் குழுவில் உள்ள ஒருவரைக் கொண்டே பேட்டியை முடித்துவிட எண்ணித் தேடுகையில், 'ஜர்னலிசமும் படித்திருந்த குணசீலன் நினைவு அவருக்கு வந்தது! ஏற்கனவே, பழகும் முறையினால், குணசீலனிடம் அவருக்கு நல்ல அபிப்பிராயம் இருந்தது.

தேவைப்பட்ட இடத்தில் அவ்வப்போது, தானும் உதவி செய்து கொள்ளலாம் என்று எண்ணித்தான், தலைவர் குணசீலனைப் பேட்டி எடுக்கச் சொன்னது! ஆனால் அவன் பேட்டி எடுத்த விதத்தில் எல்லோருமே பேட்டி எடுக்கப்பட்ட வி.ஐ.பி. உட்பட அனைவரும் அசந்துவிட்டனர்.

எரிச்சலூட்டாமல், ஆனால் சுவாரசியமான வகையில் பேட்டி எடுக்கப்பட்டதாகக் கூறி அவனைப் பாராட்டினார். 'இன்னும் கொஞ்சம் புள்ளி விவரங்களிலும் தேர்ச்சி பெற்றுவிட்டால், முழுநேரப் பேட்டியாளனாகவே ஆகிவிடலாம்' என்ற அவர்கூற, குழுத்தலைவரும் அதை ஆமோதித்தார். அத்தோடு நில்லாமல் புள்ளி விவரங்களில் தனித்தேர்ச்சி பெற ஏற்படும் செய்திருக்கிறார்! அடுத்து வெளிநாடு செல்லும் குழுவில், பேட்டி எடுப்பவனாக அவனை அழைத்துச் செல்லப் போகிறார்!

அவனது கனவு, நனவாகும் நாள் விரைந்து நெருங்கிக் கொண்டு இருக்கிறது!

குணசீலன் சொன்ன விஷயம், மயூரியைத் துள்ளிக் குதிக்க வைத்தது. ''குணா, இனி நான் டிவியில் கிரிக்கெட் ஒளிபரப்பு எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டே இருக்கப்போகிறேன்! பேட்டி எடுப்பவர் என்றால் உங்க



ளையும் காட்டுவார்களே! இருங்கள்! அம்மா! நேற்று ஒரு இனிப்பு செய்தார்கள்! கொண்டுவருகிறேன்! பாருங்கள் இப்போது பார்த்து அம்மா வெளியே சென்றிருக்கிறார்களே! வருகிற நேரம்தான். முதலில் நான் 'ஸ்வீட்' எடுத்துவருகிறேன், குணா!'' என்று மகிழ்ச்சியோடு பரபரத்தவண்ணம் உள்ளே ஓடிச்சென்றாள்!

அவள் இனிப்புடன் திரும்பிவந்தபோது, அவளுடைய அன்னையும் திரும்பி வந்திருந்தாள்.

சிற்றுண்டியைக் குணசீலனிடம் கொடுத்துவிட்டுத் தாயாரிடமும் குணசீலனை முந்திக்கொண்டு, அவனது நல்லசேதியைச் சொல்லி ஆர்ப்பரித்தாள்!

ரேவதியும் முறுவலித்து வாழ்த்துச் சொன்னாள்.

''இப்படியே என் ஆசைகள் எல்லாமே நிறைவேற வேண்டும் என்று ஆசி கூறுங்கள், ஆன்ட்டி!'' என்று குணசீலன் புன்னகையோடு வேண்டினான்.

சற்றுயோசித்து, ''அதுதானப்பா என் ஆசையும்! ஆனால், கடவுள் என்ன நினைத்திருக்கிறாரோ?'' என்றாள் ரேவதி.

''என்னம்மா, நீங்கள்? பேட்டி எடுப்பதில் உலகப் புகழ்பெற வேண்டும்; கூடவே கைநிறையச் சம்பாதிக்க வேண்டும் என்றுதானே குணா ஆசைப்படப் போகிறார்! இது நிறைவேற என்ன தடை இருக்கப் போகிறது? நான் சொல்லுகிறேன், குணா! உங்கள் ஆசைகள் எல்லாம் நூற்றுக்கு நூறு அப்படியே நிறைவேறும்! இது நிச்சயம்!'' என்றாள் மயூரி ஆருடம் சொல்வதுபோல.

"சந்தோஷம்!" என்று குணசீலன் சிரிக்க, யோசனையோடு முறுவலித்தபடி ரேவதி எழுந்தாள்.

"சமையல் அறையில் என்ன வேலை நடந்திருக்கிறது. என்று பார்க்கவேண்டும்! நீ இருந்து சாப்பிட்டு விட்டுப் போகலாமில்லையா குணா?" என்றபடி உள்ளே செல்லத் தொடங்கினாள்.

"இல்லை, ஆன்ட்டி! ஊரிலிருந்து வந்து நான் இன்னும் வீட்டுக்கே போகவில்லை! இதை உங்களிடமெல்லாம் சொல்லி விட்டுதான் போகவேண்டும் என்று நேரே இங்கேதான் வந்தேன். போய்க் குளித்துக் கிளம்பி, அப்பாவிடம் சொல்லப் போகவேண்டும் வரட்டுமா" என்று எழுந்தான்.

தலையாட்டிவிட்டு ரேவதி உட்புறம் சென்றுவிட, குனிந்து பையை எடுத்தவன், நினைவு வந்தவனாய், "மயூ, உன் நல்ல சேதியை நீ இன்னும் சொல்லவில்லையே?" என்று கேட்டான்!

மயூரி சொன்னாள்!

கண்டபடி கேலிபண்ணிச் சிரிக்கப்போகிறான்! ஆகா, ஓகோ என்று குதிக்கப் போகிறான் என்று எதிர்பார்த்து தன் திருமணச் சேதியை குணசீலனிடம் சொன்னாள்.

ஆனால், அவள் ஆவலுடன் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக, குணசீலனின் முகம் கறுத்துச் சிறுத்தது!



# 6

மயூரியைப் பொறுத்தவரையில், குணசீலன் அவளுக்கு ஒரு நல்ல நண்பன்; ஆசிரியன்; வழிகாட்டி!

தன் பிரச்சினைகளை அவனிடம் சொல்லித் தீர்வு தேட அவள் தயங்கியதே கிடையாது!

அவன் ஒன்று சொன்னால், அதைப் பின்பற்ற அவள் மறுத்ததும் கிடையாதுதான்.

அவன் என்ன சொன்னாலும், அது அவளது நன்மைக்காகவே இருக்கும் என்பதில் அவளுக்கு எள்ளளவு சந்தேகமும் இருந்ததே கிடையாது!

அவன் தனது நலம் விரும்பி என்பதில் அப்படி ஓர் அசையாத நம்பிக்கை!

அவளது நன்மையையே நாடும் குணசீலன், அவளது திருமணச் செய்தி கேட்டு, மகிழாமல் முகம் கருத்த தன் காரணம் மயூரிக்குக் கொஞ்சமும் புரிபடவே இல்லை!

பொதுவாகக் குணசீலனிடம் எதைப் பேசவும் அவள் தயங்கி ஒதுங்கியது இல்லை! அதே பழக்கத்தில் இப்போதும் அவனது முகச் சுளுக்கத்தின் காரணத்தைக் கேட்டுவிட்டாள்.

சிலவினாடி மவுனத்தின் பின், "நீ ரொம்பவும் சின்னப் பெண், மயூரி! அதற்குள் திருமணம் என்றால் ஜகம்! எனக்குச் சரியாகப் படவில்லை!" என்றான் அவன்.

"ஏனோ? எனக்குப் பதினெட்டு வயது ஆகப் போகிறது தெரியுமா? சட்டப்படி சரியான வயது வரப் போகிறது!"

"சரியான வயதா?" சுள்ளென்று கோபம் வந்தது, குணசீலனுக்கு! "பெண்ணுக்கு உரிய திருமண வயது இருபத்தொன்று என்று எல்லா ஆட்டோ ரிக்ஷாக்களிலும் பின்புறம் எழுதியிருக்கிறார்களே, பார்த்ததில்லை?!... அது சரி! நீ எங்கே அதைப்பார்த்திருக்கப் போகிறாய்? அம்மையார், காரிலேயே பவனிபோகிறவர்கள்! ஆட்டோவில் எங்கே ஏறியிருக்கப் போகிறீர்கள்?! ஏறினால் அல்லவா அது தெரியும்?" என்றான் எகத்தாளமாக!

மயூரியும், அப்படி ஒன்றும் விட்டு விடுகிறவள் அல்ல! "ஆட்டோவில் ஏறினால்தான் ஒன்றுமே தெரியாது! ஆட்டோ ரிக்ஷாவின் உள்ளேயா எழுதி வைத்திருக்கிறார்கள்? வெளியேதானே?" என்று தட்டிப் பேசினாள்.

"ஓஹோ! வெளியே பார்த்துத் தெரிந்து கொண்ட லட்சணம்தான் இதுவாக்கும்?" அவனும் உடனே திருப்பினான்.

சில விநாடி நேர அமைதியின் பின், "ஏன், மயூரி?" என்று கேட்ட போது, குணசீலனின் குரல் மிகவும் தாழ்ந்திருந்தது!



மீண்டும் உற்சாகமுற்று, "நிறையக் காரணங்கள், குணா! முக்கியமாக அம்மாவின் தொல்லை தீரும்! தீர்த்துவிடுவேன்! உங்களுக்கே தெரியும். அத்தையால், அம்மா, அப்பாவிடம் எவ்வளவு திட்டு வாங்குகிறார்கள் என்று! நான் அங்கே போனால், அதை நிறுத்திவிட முடியும் அல்லவா?" என்று தன் காரணங்களை எடுத்துச் சொல்லத் தொடங்கினாள் மயூரி.

"இதை நிறுத்துவதற்குத் திருமணம் ஒன்றுதான் வழியா? கொஞ்சம் முதுகெலும்பு என்று ஒன்று இருப்பதைக் காட்டிக் கொள்வது?"

"அப்பா..."

"அப்பாவிடம் கூடத்தான்!"

"ஐயோ! அது பெரிய களேபரம் ஆகிவிடும்!"

குணசீலன் வெறுமனே தோளைக் குலுக்கவும், "என் காரணம் அதுமட்டும் அல்ல, குணா!" என்று மீண்டும் தொடங்கினாள் அவள். "ஒரு பெண்ணுக்குத் திருமணம் செய்வது என்றால், அது எவ்வளவு பெரிய வேலை தெரியுமா? என் சிநேகிதி மலருக்குத் திருமணம் செய்தார்களே, அந்த ஆள் போதை மருந்து எடுப்பவராம்! குடி, சூது... இப்படி எத்தனை கெட்ட பழக்கங்கள்! அதெல்லாம் இல்லாத ஒருவரைத் தேடிக் கண்டு பிடிப்பது அப்பாவுக்கு எவ்வளவு கஷ்டம்! இப்போது அந்தக் கஷ்டம் அப்பாவுக்கு இல்லை அல்லவா?" என்றாள் அவள்!

ஏதோ சொல்ல வாயெடுத்தவன், முகம் இறுக, ஒருவினாடி மவுனம் காத்தான். பிறகு, ''அப்பாவுக்கு அம்மாவுக்கு நல்லது என்கிறாயே! உனக்கு? உனக்கு எப்படி என்று சொல்லவில்லையே!'' என்று ஓர் அமைதியோடு வினவினான்!

''எனக்கும் நல்லதுதான். அழகு, பணம், அந்தஸ்து... என் சிநேகிதிகள் எல்லோரும், என்னிடம், 'நீ ரொம்ப லக்கிடி' என்றுதான் சொல்லுகிறார்கள்!''

''ஆனாலும், நீ ரொம்பச் சின்னப்பெண் மயூரி! நல்லது கெட்டது அறியும் வயது உனக்கு இன்னமும் ஆகவில்லை!''

"நான் முட்டாள் என்கிறீர்கள் என்ன தைரியம் உங்களுக்கு!'' என்று கோபம் போலக் கேட்டுக் கண்ணால் சிரித்தாள் மயூரி.

''இதைத்தான்'' சிறுவயது என்பது! எந்த வயதிலும் முட்டாளாக இருக்கமுடியும்! ஆனால், வயதிற்கேற்ப வளரும் அறிவு முதிர்ச்சி வேறு! ஒருவயதுச் சிறுமியால் ஒலிம்பிக்கில் ஓட முடியுமா? இந்த வயதில் மண வாழ்வை ஏற்பதும் அப்படித்தான்!'' என்றான் அவன்.

''இன்றைக்கேயா திருமணம் நடந்துவிடப் போகிறது? இரண்டு அப்பாக்களும் பேசியிருக்கிறார்கள்! அவ்வளவுதான். இன்னும் என் படிப்பும், அபூர்வனின் படிப்பும் முடிந்த பிறகுதானே திருமணம்! எப்படியும் இரண்டு ஆண்டுகள் ஆகும் குணா! அதனால் திருமணத்தின்போது நான் ஒன்றும் சின்னப்பெண்ணாக இருக்கமாட்டேன்!'' என்றாள் மயூரி.



''அபூர்வன் பட்டதாரி ஆனபிறகுதான் திருமணம் என்றால், நீ பேரிளம்பெண்ணாகக் கூட ஆகிவிடலாம்!'' என்றான் குணசீலன் ஏளனமாக.

தன்னைமீறிச் சிரித்துவிட்டு, ''அப்படியானால் முப்பது வயதுக்கு மேல்தான் எனக்குத் திருமணம் என்கிறீர்களா, குணா? உங்களுக்குத் துணிச்சல் அதிகம்தான்!'' என்றாள் மயூரி.

''உன்னைவிடவா?''

அவனை ஏறிட்டு நோக்கிவிட்டு, ''கோபமா, குணா?'' என்று வருத்தத்துடன் மயூரி வினவினாள்.

குணசீலன், தோளைக் குலுக்கினான்! ''எனக்கு என்னம்மா கோபம்? இது உங்கள் வாழ்க்கை! அதை உன் அம்மாவுக்காகத் தியாகம் செய்யலாம்! அப்பாவுக்காக அலட்சியம் செய்யலாம்! உன் வாழ்க்கை உன் விருப்பம்! இதில் அபிப்பிராயம் கூற நான் யார்?'' என்றவன் குனிந்து தன் பைகளை எடுத்துக் கொண்டான். ''ஆன்ட்டியிடம் அப்புறமாய் வருவதாகச் சொல்லிவிடு!'' என்று முடித்தவன், மேலே நில்லாமல் விடுவிடு என்று நடந்து சென்றுவிட்டான்!

மூன்று தினங்களாக இருந்த மகிழ்ச்சி, முழுமையாக வடிந்துவிட, மயூரி முகம் வாடி நின்றாள்.

மறுநாள் காலையிலிருந்தே அவளுக்கு லேசான தலைவலி இருந்தது. மெல்ல மெல்ல அது அதிகப்படவும் கடைசி வகுப்புக்கு விடுப்பு எடுத்துக் கொண்டு வீடு திரும்பியவளுக்கு, வாயிலில், குணசீலனின் மொப்பெட்டைப் பார்த்ததும் உற்சாகம் உண்டாயிற்று.

அவசரமாக உள்ளே சென்றபோது, அங்கே அவன் ரேவதியோடு சற்றுத் தணிந்த குரலில் பேசிக்கொண்டிருந்தான்.

குரலில், வருத்தம் இருப்பதாகத் தோன்றவே, மயூரியின் நடைவேகம் மட்டுப்பட, மெல்ல நடந்து சென்றாள்.

''...இப்படி ஆகும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை ஆன்ட்டி! மனதுக்கு ரொம்பவும் கஷ்டமாக இருந்தது!'' என்று சொல்லிக் கொண்டிருந்தான் குணசீலன்!

''என்ன செய்வது? தலைவிதி என்றும் ஒன்று இருக்கிறதே!...'' என்ற ரேவதி வாயிலில் நிழலாடுவதை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தாள்.

மகளைக் கண்டதும், ''என்ன மய்யூ! இவ்வளவு சீக்கிரம் வந்து விட்டாயே!'' என்று உரக்க மகளை வரவேற்றாள்.

மெல்லத்திரும்பி, ''என்னம்மா, வகுப்புக்கு 'டிமிக்கி'யா? ஆசிரியை, படுபோர் அடிப்பார்களா?'' என்று முயன்று கேலியாகப் பேசினான் குணசீலன்.

அவனைவிடச் சின்னவள் முன் தன் கலக்கத்தைக் காட்டிக் கொள்ள அவனுக்கு விருப்பம் இல்லை என்பதை உணர்ந்து அவன் போக்கிலேயே மயூரியும் பேச்சை வளர்த்தாள்.

அன்றைக்குக் குணசீலன் அங்கே அதிகநேரம் தாமதிக்கவில்லை! அவன் விடைபெற்றுச் சென்றபிறகு மயூரி, தாயிடம் மெல்லக் கேட்டாள். ''இப்படி ஆகும் என்று



நினைக்கவே இல்லையே, என்று குணா ரொம்ப வருத்தமாய்ச் சொன்னாரே! என்ன அம்மா, அது? அவருக்கு வேண்டியவர்கள் யாருக்கும் உடம்பு ஏதும் சரியில்லையா? அல்லது... அய்யோ, அம்மா! அங்கிளுக்கு ஒன்றுமில்லையே?'' என்று பதட்டத்துடன் வினவினாள்.

மகளை வெறித்து நோக்கினாள் ரேவதி!

''என்ன அம்மா?''

தலையசைத்து, ''ஒன்றுமில்லை! அவன் உறவில் ஒரு பெண்ணுக்கு... ஒரு துன்பம்! அதுதான் அப்படிப் பேசினான். சரி! நீ வா! முகமெல்லாம் வாடிக் கிடக்கிறதே! பசியா? வா. ஏதாவது சாப்பிடு!'' என்று மகளை அரவணைத்தாள் தாயார்.

ஒருவாறு மனம் அமைதியுற்றுப் பெற்றவள் தோள் மீது சலுகையுடன் சாய்ந்து கொண்டாள் பெண்!

அதன்பின் இரண்டு ஆண்டுகள் வரை, குணசீலனை அந்தப் பகுதியில் யாரும் பார்க்கவே இல்லை. இந்திய அணி செல்லுமிடமெல்லாம் கூடப் போனான் என்றார்கள். உலகின் மற்ற நாட்டு அணிகள் விளையாடும் போதும் வர்ணனைக்கும் பேட்டிக்கும் அவனை அழைத்தார்கள். விளையாட்டுகளைப் பார்க்க வந்த முக்கியஸ்தர்களையும் பேட்டி கண்டான்.

குணசீலனைப் பற்றிக் கேள்விப்பட்ட விவரங்கள் மனதிற்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தபோதும், முன்போல அடிக்கடி அவனைப் பார்க்க முடியவில்லையே என்கிற வருத்தம் மயூரிக்குக் குறையவே இல்லை.

குணசீலன் மயூரியிடம் சொன்னதுபோல, அபூர்வவின் 'அரியர்ஸ்' பட்டியல் பெருகிற்றே தவிர, அவன் உருப்படியாகப் பாஸ் ஆவதாகவே தெரியவில்லை!

பரீட்சை அன்று தலைவலி, காய்ச்சல், நண்பனுக்கு உதவி செய்யப் போனான். கேள்வித்தாள் ரொம்பக் கடினம். இவன் படித்த கேள்விகள் வரவே இல்லை... இப்படி எல்லாச் சமாதானங்களும், சாக்குப் போக்குகளும் தீர்ந்து போய்விட, மகனுக்குப் படிப்பு வரவில்லை என்பதை மனோரஞ்சிதம் ஒருவாறு ஒத்துக்கொள்ளத் தொடங்கினாள்.

''ஆனானப்பட்ட காமராஜர்! அவர் என்ன படிப்பு படித்திருந்தார்? நம்ம அபூக்குட்டியும் அப்படித்தான், தொழில்லேதான் நாட்டம்! நமக்கும் அதுதானே வேண்டும்? ஒரு கல்யாணத்தையும் பண்ணித் தொழிலையும் கையிலே கொடுத்துவிடலாம் என்று பார்க்கிறோம்!'' என்று அண்ணனிடம் வந்து நின்றாள்.

''சீர்செனத்தி என்று நான் என்னண்ணா கேட்டுவிடப் போகிறேன்? உங்களுக்கும் பெண் என்று ஒன்றுதான்! குறைவாகவா செய்யப்போகிறீர்கள்? அண்ணியோ, நீங்களோ ஆண்வேறு, பெண்வேறு என்று பிரித்துப் பார்க்கிறவர்களும் கிடையாது! சுந்தருக்கு என்ன சொத்து மதிப்பு சேருமோ அதே அளவு என் மருமகளுக்குக் கொடுக்காமல் அனுப்ப மாட்டீர்கள்... நகைநட்டு என்று அண்ணி ஏற்கனவே கொஞ்சம் செய்து நினைவிருக்கிறது. வைர நெக்லஸ், வைர வளையல், இருக்குது! கூடவே ஒட்டியாணத்துக்கும் வைர முகப்பு



பண்ணிவிடச் சொல்லுங்கள் அண்ணா! அப்போதுதான் பார்க்க நன்றாக இருக்கும்!... பெரியம்மாவின் ரூபி வைர செட்டை இந்த வயதுக்கு மேலே அண்ணி போட்டால் பார்க்கச் சகிக்காது! அதையும் மயூக்குட்டிக்கே கொடுத்து விடுங்கள்...'' என்று நீளமாய்ப் பட்டியல் போட்டாள்.

''என்னம்மா, உங்களுக்கு ஒன்றுமே இல்லாமல் பிடுங்கிவிடுவார்கள் போல் இருக்கிறதே!'' அடுத்த அறையிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த மயூரி மனம் பதைத்தாள்!

''அத்தை சொல்வதுபோல, இனிமேல் எனக்கு எதற்கு கண்ணு? உன் பாட்டி எனக்குத் தந்ததுபோல, அந்த 'செட்'டை, சுந்தருக்கு வருகிற மனைவிக்குக் கொடுக்கலாம் என்று நினைத்திருந்தேன். இப்போது உனக்குக் கொடுத்துவிட்டு, அவன் மனைவிக்கு வேறு செய்துவிடுகிறேன்!'' என்றாள் ரேவதி சாதாரணமாக!

மயூரிக்கு உள்ளூர ஒரே உறுத்தல்! வழிவழியாய் இந்தக் குடும்பத்து மூத்த மருமகளுக்குக் கொடுக்கப்படுவதைப் போய் இடையில் அவள் அடித்துக் கொண்டு போவதா?

அப்பா, வழக்கம்போலத் தலையாட்டி விடுவார்! அம்மாவும் அப்பாவை மீறப்போவது இல்லை! அவளே போய் ஏதாவது சொன்னாலும், அப்பாவுக்கும் கோபம் வரும்; வரும் கோபத்தை அம்மா மேல்தான் காட்டுவார்!

இருக்கட்டும்! அவளிடம்தானே இருக்கப்போகிறது! திருமணம் ஆனபின், மெல்ல அபூர்வனிடம் எடுத்

துச்சொல்லி, ரூபி செட்டைத் திருப்பிக் கொடுத்து விட வேண்டும்.

திருமணம் ஆனபின் அம்மாவுக்கு உதவியாக, என்னவெல்லாம் செய்வது என்று மயூரி திட்டமிட, அதற்குள் என்னவெல்லாம் பிடுங்க முடியும் என்று மனோரஞ்சிதம் கணக்கிட, ஒருவாறு திருமண நாளும் குறித்தார்கள்.

இன்னமும் சரியாக முப்பதுநாட்களில் திருமணம்! குணசீலன் இங்கிருந்தால் அவனிடம் எவ்வளவோ ஆலோசனைகள் கேட்கலாம், அவனிடம் என்றால், தயக்கமின்றி அவளாலும் கேட்க முடியும்; அவனும் பிகுவின்றி சுபலாபம் பாராமல் சொல்லுவான்!

ஆனால், அவனைத்தான் கண்ணிலேயே காண முடியவில்லையே! அப்படி, அவன் இந்தப்பக்கம் வராமலேயே இருந்துவிடவில்லை! மயூரியின் வீட்டுக்கும் வரத்தான் செய்தான். ஆனால் அவன் வரும் வேளைகளில் வீட்டில் இருக்க மயூரியால் முடியவில்லை! முன் போலக் காத்திருந்து அவளிடமும் உரையாடிவிட்டுப் போக அவனுக்கும் அவகாசம் இல்லை.

பெரிய மனிதனாகி விட்டால் இது ஒரு தொல்லை போல!

எப்படியோ, குணசீலன், தான் விரும்பிய வளர்ச்சியை அடைந்திருக்கிறான்; அதுபோதும் என்று மயூரி தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொள்வாள்.

ஆயினும் ஏக்கம், ஏக்கம்தானே?



குணசீலன் இல்லையே என்று ஏங்கியதற்கு இரண்டு மடங்காக, இன்னொரு நபரின் வருகையால், மயூரி வருந்தும்படி ஆயிற்று.

அந்த இன்னொரு நபர் சௌம்யா!

இரண்டுவருட வெளிநாட்டு வாசம் தந்த மெருகுடன், இருகைகளாலும் சம்பாதிக்கும் பெற்றோரின் பணம் தந்த பளபளப்புடன் பவனிவந்து பார்ப்போர் மனதைக் கிறங்கச் செய்தாள்.

அதில், அதிகம் கிறங்கிப் போனவன் அபூர்வன்!

## 7

சிக்கென்று உடல் அழகைக் காட்டும் உடை!

அதற்குப் பொருத்தமாக ஒரு வைர மாலை அல்லது ஒரு எமரால்ட் பிரேஸ்லேட், பெரிய சஃபயர் மோதிரம்... க்ளிப்... ட்ராப்ஸ்... எல்லாம், இப்படியும் அப்படியுமாக அவள் திரும்பும் போதெல்லாம் ஒளிக்கற்றைகளை வாரி இரைத்தன! அதேபோல ஒரு டயோட்டாவை அவளே ஓட்டிக்கொண்டு வந்து நிற்கவும் அபூர்வன் வாயைப் பிளந்தான்!

அவன் வீட்டிலும், இரண்டு கார்கள் அவற்றுள் ஒன்று மாருதி இருந்தன! ஆனால் அவன் பெற்றோரின் அனுமதி இல்லாமல் எந்தக் காரையும் அவன் எடுக்கமுடியாது!

"இது என் கார்! என் பிறந்த நாளைக்கு, அப்பா அம்மா கொடுத்த பரிசு!" என்று அவள் அறிவித்தபோது, அபூர்வனோடு மயூரிக்கும் கூட மிகுந்த ஆச்சரியம்தான்!

வீட்டிற்கு அழைத்துச் சென்று, அவளது பெரிய அறையில் இருந்த பெரிய டீவி, மியூசிக் சிஸ்டம், வி.சி.ஆர், கூடவே வீடியோ காமிரா போன்ற வசதிகளை எல்லாம் சௌம்யா அவர்களுக்குக் காட்டினாள்.

எல்லாம் வெளிநாட்டுச் சரக்கு!

மயூரி, அபூர்வன் இருவருமே வளமான குடும்பத்தவர்கள்தான் என்றாலும், சௌம்யாவின் வீட்டில் எங்கு நோக்கிலும் செல்வம் இருப்பது பறைசாற்றப்பட்டிருந்தது! அறை உயரத்துக்கும் தொங்கிய வெல்வெட் திரைகள் அங்கங்கே எழிலுற அமர்ந்திருந்த கிரிஸ்டல் வடிவங்கள், உயர்ரக ரத்தினக் கம்பளங்கள்.

"வீடே வித்தியாசமாய்த் தெரிகிறதே!" என்றாள் மயூரி.

"ஆமாம்! பழசு போரடித்தது! இஷ்டம்போல மாற்றிக்கொள் என்று அம்மாவும், அப்பாவும் சொல்லிவிட்டார்கள்..."

"எல்லாம் உங்கள் ஏற்பாடா? பிரமாதமாயிருக்கிறது சௌம்யா!" என்று உண்மையிலேயே பாராட்டினாள் மயூரி. பணம் இருந்தாலும், அதை உரியவாறு செலவழிக்கவும் தெரியவேண்டுமல்லவா?

"என் ஏற்பாடா? சேச்சே! இதிலெல்லாம் யாரேனும் மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொள்வார்களா?



இங்கே பெரிய 'இன்டீரியர் டெக்கரேட்டர்' யார் என்று பார்த்தது ஒன்றுதான் நான் கஷ்டப்பட்டு செய்த வேலை! மற்றதெல்லாம் அவர்கள்தான்!" என்றுரைத்துப் பகபக வென்று சௌம்யா சிரித்தாள்!

இதற்கு என்ன சொல்வது என்று தெரியாமல், மயூரி விழித்தாள்.

அபூர்வன் ஏதாவது உதவிக்கு வருவானா என்று அவனைப் பார்த்தால் இங்குமங்கும் விழித்தபடி நின்றானே தவிர, 'உரையாடலுக்கு உதவியாக அவன் ஒரு வார்த்தைகூடச் சொன்னானில்லை.

"நிறைய செலவாகியிருக்குமே!" என்று மயூரியே தான் மீண்டும் தொடங்க வேண்டியிருந்தது.

"ஊம்! நிறைய்யத்தான் செலவு! ஆனால், 'நர்சிங் ஹோம்' கட்டியதிலிருந்து, வீட்டில் வருமானம் அதிகம் தானே! பலமடங்கு! அம்மா, அப்பா இரண்டுபேரும் இரண்டு கைகளாலும் சம்பாதிக்கும்போது செலவைப் பற்றி ஏன் நினைக்கவேண்டும், மயூரி!" என்று சௌம்யா கேட்டபோது ஆபூர்வனின் கண்கள் அகல விரிந்தன.

"டாக்டர்களுக்கு அவ்வளவு வருமானம் வருமா?" என்று, ஒருவழியாக வாய்திறந்து கேட்டான் அவன்.

"ம்ம்ம்! நன்றாக வரும், அபூ! அதைவிட 'நர்சிங் ஹோமி'ல் வரும்! என் பெற்றோர் மாதிரி ஸ்கேனிங், எக்ஸ்ரே, லேப் மருந்து விற்பனை எல்லாம் சேர்த்து வைத்தால்.... அப்புறம் மூட்டை கட்டித்தானே அள்ளி வரவேண்டும்!" என்று கூறிக் கலீரென நகைத்தாள் சௌம்யா!

''இரண்டு ஆண்டுகளாக லண்டனில்... லண்டனில் தானே படித்தீர்கள் சௌம்யா? என்ன படித்தீர்கள்?'' என்று, முயன்று யோசித்து மயூரி உரையாடலைத் தொடர்ந்தாள்.

''படிப்பா?... ம்... படித்து முடித்துவிட்டேனே! அங்கே உள்ள பள்ளிகளில் நான் படிப்பதற்கு இனிமேல் ஒன்றுமே இல்லை!'' என்று ஒருபுறமாய் இடுப்பை வளைத்து, கைகளை விரித்து அபிநயித்தபடி, சௌம்யா சிரித்தாள்.

'இவள் படிப்பில் சொதப்பி விட்டிருப்பாள் போலத் தெரிகிறதே' என்று எண்ணினாள் மயூரி.

திரும்பிவரும் போது, அதுபற்றி மயூரி குறிப்பிட்ட போது, ''அவள் எடுத்துப் படித்ததில் மேலே படிக்க ஒன்றும் இல்லையோ என்னவோ? சொதப்பினாள் என்று எப்படிச் சொல்வது?'' என்று வாதிட்டான் அபூர்வன். ''ஆனால், அதைச் சௌம்யா எவ்வளவு அழகாகச் சொன்னாள்! அதைக் கவனித்தாயா?'' என்று அவன் தொடர்ந்து கேட்டபோது மயூரிக்கு ஏனோ மனதில் திக்கென்றது!

திருமண நாள் குறிக்கப்பட்ட பிறகு, அபூர்வன் அனேகமாகத் தினமும் மயூரியின் வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருந்தான் எனலாம். தேனிலவுக்கு எங்கே போவது? திருமணத்துக்கு என்ன நிறத்தில், என்ன துணியில் என்ன மாதிரியில் உடை தைப்பது? தொடர்ந்து மாற்று உடை, மற்றும் விருந்துகளுக்குச் செல்லும்போது ஒவ்வொரு தரமும் வேறுபாடாக எப்படி



அணிவது என்று யோசிப்பதும், முடிவுசெய்வதும் மாற்றுவதுமாக கூடச் சேர்ந்து கலந்து ஆலோசிக்க, அவனுக்கு ஓர் ஆள் — அதிகம் எதிர்ப்பேச்சுப் பேசாத ஒருத்தி தேவைப்பட்டாள். வருங்கால மனைவியும் என்கையில் மயூரிதானே அதற்குச் சரியான நபர்?!

இப்படித் தினமுமே மாலை வேளைகளில் வந்து போய்க் கொண்டிருந்த அபூர்வனை நாலைந்து நாட்களாகக் காணவில்லை.

தினமும், அவனது உடைகளையும் அவனது தோற்றத்தை, அவை எப்படி எடுப்பாகக் காட்டக்கூடும் என்பது பற்றியே பேசிப் பேசி, அதுவும் அவன் பேசப்பேச ஒத்து ஊதி ஊதியே போரடித்துப் போயிருந்த மயூரிக்கு, இந்த நாலைந்து நாட்கள், கொஞ்சம் நிம்மதியாகத்தான் இருந்தன!

ஆனால், ஆறாவதுநாள், ''என்னடி அபூர்வன் ஆளையே காணோமே! ஏதேனும் சண்டை கிண்டை போட்டுக் கொண்டீர்களா?'' என்று ரேவதி மகளிடம் யோசனையோடு வினவினாள்.

''சண்டையா? நானாம்மா?'' என்று கேட்டாள் மகள். ''வேறு ஏதாவது வேலையாக இருக்கும்!'' என்றாள் தாய்க்குச் சமாதானமாக.

''அப்படி என்ன வேலையாம்? அவன் வெட்டி முறிப்பது நமக்குத் தெரியாதா?'' என்ற ரேவதி, மகளின் முகம் வாடவும், ''சரிசரி... எப்படியும் ஒருநாள் தொழிலைப் பார்க்கத்தான் போகிறான்! மனைவி, கு...குடும்பம் என்று வந்தால், தானாகப் பொறுப்பும் வந்துவிட்டுப்

போகிறது! தினமும் வருகிற பிள்ளை, ஐந்து நாட்களாக வரவில்லையே என்று விசாரித்தேன் விடு'' என்று விட்டுப் போனாள்.

உள்ளூரச் சின்னதாகத் தோன்றிய உறுத்தல் தோழியின் டெலிஃபோன் பேச்சில் பெரிய உளைச்சல் ஆகிப்போயிற்று ''ஏய், ஜாக்கிரதைடி! உன் அபூர்வனை, ஓர் 'அல்ட்ரா மாடர்ன்' பெண்ணுடன் ஓட்டல் 'இந்துகுஷ்' இல் பார்த்தேன்! இரண்டுபேரும் மட்டமாக வந்திருந்தார்கள்! அவர்கள் பழகியவிதம் கூட அவ்வளவாகச் சரியாகப்படவில்லையடி! ஜாக்கிரதை!'' என்றாள் லோசனி.

வேறு யாரும் இப்படிச் சொல்லியிருந்தால் கூட, மயூரி அவ்வளவாகப் பொருட்படுத்தியிருக்க மாட்டாள். ஆனால், லோசனி இல்லாததைக் கதைகட்டுகிறவள் இல்லை! அவள் அக்கா புதிதாகத் திறக்கப்பட்டிருந்த ஐந்து நட்சத்திர ஓட்டலான 'இந்துகுஷ்' இல் பணிபுரிபவள். இவள் நினைத்தால் அங்கேபோய் ஏதாவது சாப்பிட்டுவிட்டு வருவாள்!

அங்கே அபூர்வன் சென்றிருந்தால், லோசனி அவனைப் பார்த்திருக்க வாய்ப்பு நிறையவே உண்டுதான்!

ஆனால், போயிருப்பானோ?

சற்றுநேரம் மனம் கலங்கிவிட்டு மயூரி, அபூர்வனுக்கு டெலிஃபோன் செய்தாள்.

அபூர்வனே போனை எடுத்தான்.

மயூரியின் குரலைக்கேட்டதும், ''ஓ! நீதானா டெலிஃபோன் செய்தது?'' என்று ஏமாற்றத்துடன் கேட்டான்.



''ஏன்? வேறு யாராவது பண்ணுவார்கள் என்று எதிர்பார்த்தீர்களா?'' என்று, சட்டெனக் கேட்டுவிட்டாள் மயூரி.

''இ... வந்து... ஆமாம்! ஒரு பழைய சிநேகிதன்! பண்ணுவான் என்றுதான் காத்துக்கொண்டே இருந்தேன். அதனால் இப்போது வைத்து விடுகிறாயா? என் சிநேகிதன் தொடர்புகொள்ள முயன்றுகொண்டே இருக்கிறானோ என்னவோ?'' என்று அபூர்வன் தவித்தான்.

''என்ன அத்தான் நீங்கள்? அந்த நண்பர், என்னை விட முக்கியமானவரா? யார் அவர்? பழைய சிநேகிதர் என்றால், எனக்கும் தெரிந்திருக்குமே! அவர் பெயர் என்ன அத்தான்?'' என்று விசாரித்தாள் அவள்.

ஆனால், அவன் சற்றும் எதிர்பாராதவிதமாக, ''ஆமாம்! அதுதான் இப்போது ரொம்ப முக்கியம்!'' என்று வெடித்தான் அவன். ''என்னவோ போலீஸ் ஸ்டேஷனில், குற்றவாளியை விசாரிக்கிற மாதிரிக் கேட்கிறாயே! இதெல்லாம் எனக்குப் பிடிக்காது! தெரியுமில்லை? டெலிஃபோனைக் கீழே வை என்றால் முதலில் அதைச் செய்!'' என்று அபூர்வன் எரிந்து விழவும், மயூரியின் முகம் சுண்டிவிட்டது.

ஒருகணம் தடுமாறிவிட்டு, ''இ....இதோ, வைத்து விடுகிறேன், அத்தான்.... அதற்குமுன், நான் உங்களிடம் தப்பான எண்ணத்தோடு எதுவும் பேசவில்லை என்பதை மட்டும் சொல்லிவிடுகிறேன்! பை!'' என்று சொல்லி, மயூரி, ரிசீவரைக் கீழே வைத்தாள்.

கடைசி வினாடி வரை, அபூர்வன், அவளை மீண்டும் அழைக்கக் கூடும் என்று ரிசீவரைக் காதோடு ஒட்டிப் பிடித்தவாறே குனிந்து அவன் அழையாமலே இருந்து விடவேதான் வைத்தாள்.

அவள் கையில் இருந்த கனம் தீர்ந்தது.

ஆனால், அன்றுவரை அறியாத பளு ஒன்று அவள் நெஞ்சின்மீது ஏறி அமர்ந்து கொண்டது.

இன்றுவரை, அபூர்வன் தன் கோபத்தை மயூரியிடம் காட்டியதே இல்லை எனலாம். கொஞ்சம் சிணுங்குவான். கொஞ்சம் எரிச்சல் படுவான். அது தாய்க்கு ஒரேபிள்ளையாக வளர்ந்ததன் பாதிப்பு. மெல்ல மெல்லச் சரியாகிவிடும் என்று எண்ணுவாள்.

இப்போது சீறியல்லவா விழுகிறான்!

அதன் காரணம், லோசனி சொன்ன விஷயமாக இருக்குமா?

சேச்சே! இராது! சின்ன வயதில் இருந்து, ஒருவருக்கு ஒருவர் என்று போட்ட முடிச்சு! அது அவனுக்கு மட்டும் மறக்குமா என்ன? மறக்குமோ?

கலங்கிய மனதுடன் அவள் வளையவர, மேலும் ஏழுநாட்கள் அபூர்வன் அந்தப்பக்கம் எட்டிப்பார்க்கவே இல்லை!

ரேவதி ஒரு கவனத்துடன் மகளிடம் ஒரு கண் வைத்தபடி இருக்க மகேந்திரன் எதையும் கண்டுகொள்ளாமல் திருமண வேலையையும் தொழிலையும் கவனித்து வந்தார்.



எட்டாவது நாள், கண்ணீரும் கம்பலையுமாக, மனோரஞ்சிதம் வந்து சேர்ந்தாள்! ''அய்யோ! எல்லாம் நடந்து முடிஞ்சு போச்சுதண்ணே! பெத்த வயித்திலே பிரண்டையை வைத்துக் கட்டி விட்டானே! அய்யோம்மா! இனிமே நான் யார் முகத்திலே முழிப்பேன்! என்னைப் பெத்தவளுக்கு மேலாகப் பிரியமாய் என்னை வளர்த்தீர்களே, என் ஆசைப் பெரியம்மா! என் பாசப் பெரியம்மா! நீங்கள் போனபோது என்னையும் கூட்டிப் போயிருக்கக் கூடாதா? இந்தப்பாவம், பழி எனக்கு வந்திருக்காதே! இந்த அவமானம் வேதனை எனக்கு நேர்ந்திராதே! ஏ, பெரியம்மா! வாங்களேன்! என்னைக் கூட்டிக்கொண்டு போயிடுங்களேன்!'' என்று கதறிக்கூப்பாடு போட்டாள்.

''மனோ! என்னம்மா ஆயிற்று! எதற்கு அழுகிறாய்? என்ன நடந்தது என்று என்னிடம் சொல்லு! எதுவானாலும் உனக்கு அண்ணன் நான் இருக்கிறேன் தைரியமாக இரு. ஏன் மனோ, மாப்பிள்ளை பழைய மாதிரி ஏதாவது என்று உருக்கமும் கனிவுமாக மகேந்திரன் விசாரித்தார்.

மனோரஞ்சிதத்துக்குத் திருமணம் ஆனபுதிதில் ஒரு மாதிரிப்பட்ட ஒரு பெண்ணின் வீட்டில் போய்ச் சட்டமாய் உட்கார்ந்து கொண்டவர் செல்வராஜ். நயத்திலும் பயத்திலுமாக அவரை மீட்டு, வீடு கொண்டுவந்து சேர்க்கப் பெரும்பாடு பட வேண்டியிருந்தது. பிறகு, செல்வராஜ் மனைவியிடம் முழுக்க முழுக்க 'சரண்டர்' ஆகிவிட்டது வேறு விஷயம்!

இப்போதும் அப்படித்தானோ என்று எண்ணி மகேந்திரன் கேட்கவும், ஒருகணம் மனோரஞ்சிதம் திணறிப்போனாள். "அ... அதெல்லாம் ஒன்றும் இல்லையண்ணா! அவர் படம்போட்ட தங்கமாய் அல்லவா ஆகி விட்டார்! இது அந்தப் பாவிப்பயல் நான் பெத்த கழுதையல்ல என் முகத்திலே கரியைப் பூசிவிட்டான்!" என்று முகத்தை மூடிக்கொண்டு விசும்பினாள்.

"யார் அபூர்வனா?"

"ஆமாம் அண்ணா! அந்தப் பாவியேதான். அபுக்குட்டி அபுக்குட்டி என்று ஆசையாய்ப் பேசின வாயைப் பெட்ரோல் போட்டுக் கழுவும்படி செய்திட்டானே!" என்று அழுதாள் அவள்.

கிட்டத்தட்டப் பதினைந்து நாட்களாக இந்தப் பக்கம் எட்டிப் பார்த்திராத அபூர்வன்... வயிற்றுக்குள் ஏதோ பிசைய, விழி அகல, முகமெல்லாம் கண்ணாக, உடம்பெல்லாம் காதாக நின்ற மனோரஞ்சிதத்தின் பேச்சைக் கவனித்துக் கேட்டான்.

"முதலில் அவன் என்ன செய்துவிட்டான் என்பதைச் சொல்லி விட்டுத்தான் அழேன்!" என்று எரிந்து விழுந்தார் மகேந்திரன். "மாப்பிள்ளை மாதிரி ஏதாவது செய்திருக்கிறானா? சொல்லு. அவன் எங்கே இருந்தாலும் காதைப்பிடித்து இழுத்துக்கொண்டு வருகிறேன்!" என்றார் ஆத்திரத்துடன்.

"அய்யோ! அது முடியாதே அண்ணா! நான் என்ன செய்யட்டும் இனிமேல் ஒன்றும் முடியாது. அண்ணா! ஒன்றும் செய்ய முடியாதபடி பண்ணித் தொலைத்துவிட்



டானே அந்தப்பாவி!" என்று புலம்பினாள் மனோரஞ்சிதம்.

"ஏன் முடியாது? என்னை யார் என்று நினைத்தான், ராஸ்கல்? போலீசில் பெரிய பதவியில் என் சிநேகிதன் இருக்கிறான், தெரியுமா? ஓசைப்படாமல் இழுத்துவந்து, ஒட்டுமொத்தமாய் இரண்டு தட்டுத் தட்டினால், எல்லாம் சரியாகி விடுகிறது!" என்று வீராப்பு பேசினார்.

அப்படி மிரட்டியும் தட்டியுமா அவளுக்கு ஒரு கணவனைக் கொண்டு வந்தாக வேண்டும்? என்ன அவமானம்!

"அய்யய்யோ! அய்யய்யோ! இதெல்லாம், ஒரு நாள் முன்னாடி தெரிந்திருந்தா செய்திருக்கலாமே! இப்போது காரியம் கைமிஞ்சிப் போய் விட்டதே அண்ணா! கடவுளே! என்னை வெட்டிப் போட்டுவிட்டு அந்தநாய் இந்தவேலை செய்திருக்கப்படாதா?" என்று ஏங்கி அழுதாள் அபூர்வனுடைய அன்னை!

"ச்ச! அந்தக்கழுதை என்ன பண்ணித் தொலைத்தான் என்று நீ இன்னமும் சொல்லவே இல்லை! முதலில் அதைச்சொல்லிவிட்டு அழு! அல்லது, உன் வீட்டுக்குப் போய், அழுது முடித்துவிட்டு, அப்புறமாக வந்து விஷயத்தைச் சொல்லு!" என்று மகேந்திரன் அதட்டவும் மனோரஞ்சிதத்தின் அழுகை ஒரு முடிவுக்கு வந்தது.

அவள் சுற்றிவளைத்துச் சொல்ல முயன்று கொண்டிருந்த சேதியும் வெட்டவெளிச்சத்துக்கு வந்தது.

அபூர்வன், சௌம்யாவைக் கல்யாணம் செய்து கொண்டு விட்டான்!

# 8

அபூர்வன், சௌம்யாவை மணந்துகொண்டு விட்டான்!

இந்த வார்த்தைகளின் பொருள், முழுமையாகப் புரியவே, மயூரிக்கு வெகுநேரம் பிடித்தது!

தந்தையின் கோப முகமும் நெஞ்சில் அடித்துக் கொண்டு அய்யோ அய்யோ என்று அழுத அத்தையின் ஆர்ப்பாட்டமும் எங்கோ தூரத்தில் நடப்பதுபோல, ஒன்றுமே மனதில் பதியவில்லை!

வெறுமையாய்ச் சுழன்ற பார்வையில் கடைசியாக விழுந்த தாயின் முகத்தில் முதலில் இருந்த கரிசனமும் கூடவே ஒரு... ஒரு நிம்மதியும்...

மகளின் பார்வையைச் சந்தித்ததும், மற்றது மறைந்து ரேவதி, கவலையுடன் மயூரியை நெருங்கிவந்து அவளைத் தோளோடு அணைத்துக் கொண்டாள்! ''ஒன்றுமில்லை, கண்ணம்மா! தைரியமாய் இரு!'' என்று மகளின் காதருகே கனிவோடு இயம்பினாள்.

பாம்புச் செவியாய், மனோரஞ்சிதத்தின் காதில் இது விழுந்துவிட, ''ஒன்றுமில்லையா? என்ன அண்ணி



சொல்லுகிறீர்கள்! என் தங்கத்தின் வாழ்க்கையே அழிந்து விட்டதே! இரண்டு ஆண்டுகள். இவன் தான் புருஷன், இவள்தான் மனைவி என்று இருந்துவிட்டு, இப்போது இல்லையென்றால்... ஒரு தப்புதண்டா நடக்கவில்லை என்று யார் நம்புவார்கள்?.... என்று மயூரிக்காக உருகத் தொடங்கினாள்.

ஆனால், உள் கருத்து புரிந்துவிட, முதல்முறையாக, ''அண்ணி!'' என்று ரேவதி, குரல் உயர்த்தி அவளை அடக்க முயன்றாள்.

முதல்தடவையாக, மகேந்திரனும், மனைவியைப் புரிந்து, ''வார்த்தைகளை யோசித்துப் பேசு, மனோரஞ்சிதம்'' என்றார் அதட்டலாக.

கண்ணைக்கசக்கி, ''நான் ஊர்வாயைப் பற்றித் தானே அண்ணா சொன்னேன்! மற்றபடி, மய்யூக்கண்ணு தங்கம் என்று எனக்குத் தெரியாதா? என்பிள்ளைதான் கவலைப்படாதே கண்ணு! யார் உன்னை என்ன சொன்னாலும், என்னிடம் வந்து சொல்லு! நான் அவர்களிடம் போய் உனக்காகச் சாட்சி சொல்லுகிறேன்!

''என் வேலையெல்லாம் விட்டுவிட்டு அவர்கள் வீடு தேடிப் போய்ச் சொல்லுகிறேன்! என் வீடும் குடும்பமும் எக்கேடு கெட்டால் என்ன? பணமும் பொருளும் பண்டமுமாக என் அண்ணன் எனக்கு எவ்வளவு கொடுத்திருப்பார்! அதற்கெல்லாம் பதிலாக, என் அண்ணன் மகளின் நல்ல பெயரையாவது நான் காப்பாற்ற வேண்டாமா?'' என்று புலம்பலோடு புலம்பலாகத் தான் வந்த நோக்கத்தையும் வெளியிட்டாள் மனோரஞ்சிதம்.

இந்தத் திருமணத்தைக் காரணம் காட்டியே அண்ணன் வீட்டிலிருந்து எவ்வளவோ கறந்தாயிற்று. உண்டி வகைகளை விட்டுவிடலாம். ஒருமாதிரிச் சாமான், இனி வகை கூடப் போகிறது என்று ஆகிவிடும்! ஆனால் நிச்சயதார்த்தம் என்று, தட்டில் வைத்துக்கொடுத்த பணம்? அதைத் திருப்பிக் கேட்டுவிட்டால் என்ன செய்வது?

நியாய அநியாயம் பார்க்கிறவர்கள் என்றால் தானாகத் திருப்பிக் கொடுப்பார்கள்!

ஆனால், மனோரஞ்சிதத்திடம் அதை எதிர்பார்ப்பது சாக்கடை நீரில் பன்னீர் வாசத்தைத் தேடுவது போலத்தானே?

அந்தப் பணம் பற்றி, மகேந்திரனோ, அவர் மனைவியோ வாய்திறக்க விடாமல் செய்வதே, மனோரஞ்சிதத்தின் நோக்கம். அதையே மறைமுகமான ஒரு மிரட்டலுடன் அறிவித்தாள்.

அந்தப்பணம் பற்றி நீ மூச்சுவிட்டால், உன் பெண்ணின் பெயரை நான் நாறடித்துவிடுவேன்!

இத்தனை காலம் தின்ற நன்றிகூட இல்லையே என்ற கொதிப்புடன் நோக்கினாள் ரேவதி.

நெற்றி நரம்புகள் புடைத்தன, மகேந்திரனுக்கு! "இப்போது நீ என்னதான் சொல்கிறாய்? என் மகள் உத்தமி ஒரு தப்பு தண்டாவுக்கு அவள் இடம் கொடுத்தது இல்லை என்பது உனக்குத் தெரியுமா இல்லையா?" என்று ஆத்திரமாக வினவினார் அவர்.



"நன்றாகத் தெரியும், அண்ணா! ஆனால், நமக்குத் தெரிந்தது நாலுபேருக்குத் தெரியுமா? இரண்டு வருஷமா, அந்தப்பையன், அந்தப் பொண்ணுவீட்டுக்கு வந்து போகிறானே... ஒன்றுமேயா நடந்திராது என்று தானே எல்லோரும் கேட்பார்கள்..."

ஆமாம்! அப்படித்தான் கேட்பார்கள்! ஏற்கனவே கேட்டிருக்கிறார்கள். 'பக்கத்திலேயே வீடுகள்! இருவர் வீட்டிலும் தடை கிடையாது! பிறகு ஒன்றுமே... இல்லை என்றால் நம்புவதற்கு வேறு ஆள் பாரடி!' என்றும், 'நீ ரொம்ப அதிர்ஷ்டசாலிடி! இப்பேர்பட்ட ஆணழகன் கிடைத்திருக்கிறானே! எதையெல்லாம் கொடுத்துப் பிடித்து வைத்திருக்கிறாய்' என்றும்... சே!

சும்மாவே, நாக்கில் நரம்பில்லாமல் பேசுகிறவர்கள்! இனி, என்னவெல்லாம் பேசுவார்கள்?

என்னவெல்லாம் பேசுவார்கள் என்ற அத்தைக்காரி விளக்கிச் சொன்னாள்! "திகட்டிப் போய் விட்டுவிட்டானோ என்று கூடக் கூசாமல் கூறுவார்கள்!' என்று நாக்கூசாமல் கூறினாள்!

இரு காதுகளையும் பொத்திக்கொண்டு மயூரி உள்ளே ஓடினாள்.

மகளைத் தொடர்ந்து செல்ல ஓர் அடி எடுத்து வைத்த ரேவதி திரும்பி, "அண்ணி, இது சுத்தப்பொய் என்று உங்களுக்கு நிச்சயமாகத் தெரியும்!" என்றாள் குமுறும் குரலில்.

"சத்...தியமாகத் தெரியும், அண்ணி. அய்யோ, அதைத்தானே நான் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு இருக்கிறேன்!" என்றாள் மனோரஞ்சிதம்! "ஆனால், எனக்குத் தெரிந்ததை ஊர் ஒப்புக்கொள்ளுமா என்பதுதான் கேள்வி! இதை நீங்களே போய், வீடு வீடாய்ச் சொன்னாலும் தான் யார் நம்புவார்கள்? பெண்ணைப் பெற்றவர்கள்! வேறு என்ன சொல்ல முடியும்?' என்பார்கள். இதையே நான் சம்பந்தப்பட்ட பையனைப் பெற்ற நான் போய் என் மகனுக்கும் மயூரிக்கும் இடையே தப்பு எதுவும் நடந்தது இல்லை என்று சொன்னேன் என்று வையுங்கள்! அதை யாரால் நம்பாதிருக்க முடியும்?" என்று கேட்டாள்.

'நீ சொன்னாய் என்பதற்காகவே, நான் உண்மையைக்கூட நம்பமாட்டேனே' என்று உள்ளூர எண்ணிய படி கணவனைப் பார்த்தாள் ரேவதி.

மகேந்திரன், யோசனையோடு ஒன்றுவிட்ட தங்கையை உற்று நோக்கினார்! "அனாவசியமாகச் சுற்றி வளைக்காமல் விஷயத்துக்கு வா. மனோரஞ்சிதம்! இதற்காக நீ என்ன எதிர்பார்க்கிறாய்?" என்று நேரடியாகக் கேட்டார்!

ஒரு கணம் அசடுவழிந்துவிட்டு, மனோரஞ்சிதம் தன் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்! கூச்சத்தையும்தான்!

கூச்சநாச்சம் பார்த்தால் குபேரனாவது எப்படி?

நிமிர்ந்து, அண்ணனைப் பார்த்தாள் அவள். "வேறு என்ன அண்ணா, பெரிசாக நான் கேட்டுவிடப் போகிறேன். நீங்கள் நிச்சயத்தின் போது கொடுத்த பணம்



செலவாகிவிட்டது. இன்னும் கூடச் சில செலவுகளுக்கு நான், உங்களைத்தான் நம்பியிருந்தேன் சரி... இன்றைய நிலைமையில், நான் அதையெல்லாம் கேட்கமுடியாது! ஆனால் பழசை நீங்கள் கணக்கு வைக்காமல் விட்டுவிட்டால் சரி!..நான் பேசாமல் ஒதுங்கிப் போய்விடுகிறேன்!" என்றாள் தெளிவாக!

கணவனின் பார்வை தன்னிடம் திரும்புவதை ரேவதி உணர்ந்து கவனத்துடன் உணர்ச்சி துடைத்த முகத்துடன் நின்றாள்.

இந்தத் தங்கைக்காக, மனைவியைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி வாட்டிய சம்பவங்கள், மகேந்திரனுக்கு நினைவுவந்தனவோ என்னவோ? தலையை ஒருதரம் உலுக்கிவிட்டுக் கொண்டு, மனோரஞ்சிதத்திடம் திரும்பினார் அவர். "சரி" என்றார் சுருக்கமாக.

ஒன்றுவிட்ட தங்கையின் முகத்தில் மலர்ச்சியையும் உடனே ஒரு கணக்கிடும் பாவனை தொடர்வதையும் கண்டவர், தொடர்ந்து, "ஆனால் அத்தோடு எல்லாவற்றையும் நிறுத்திக் கொண்டுவிட வேண்டும்! இனி நீ இங்கே வருவது கூட, அவ்வளவாக நன்றாயிராது என்று நினைக்கிறேன்!" என்றார் ஒருமாதிரிக்குரலில்.

என் வீட்டுக்கு நீ வராதே என்று ஒருவர் சொல்லும் போது, யாருக்கும் மனம் குன்றத்தான் செய்யும்! மனோரஞ்சிதம் அதை உடனே சமாளித்து, "மெய்தான் அண்ணா! என்னைப் பார்த்தாலே மயூரிக் கண்ணுக்கு அபூர்வன் நினைவுவந்து வேதனையாகி விடுமே! என் கண்மணி கஷ்டப்பட நான் விடுவேனா? எப்படியோ,

"எங்களை எல்லாம் மறந்து, வேறே ஒருத்தனைக் கட்டிக்கிட்டு, அவள் சுகம்...மாக வாழ்ந்தால் சரி!" என்று நீண்டதாக ஒரு பெருமூச்சு விட்டான்.

நல்ல கறவைமாடு, கைவிட்டுப் போகிறதே என்ற வருத்தமும் அந்தப் பெருமூச்சில் கலந்திருந்தது.

உடனேயே வேறொன்றை நினைக்கவும் அவன் முகம் பிரகாசமடைந்தது.

"சரிண்ணா! அப்பதான் வரு...கிகிளம்புகிறேன்!" என்று எழுந்தாள். இரண்டு எட்டு எடுத்து வைத்து விட்டுத் "தாழிலே நாளைக்கு ராத்திரி வரவேற்பு வைத்திருக் கிறார்களாம் ஒன்றைப்பிள்ளையைப் பெற்றுவிட்டு, நான் போகாமல் இருக்கமுடியாது. நீங்களும் மனசு இடம் கொடுத்தால் வந்து, நாலுபேர் மதிக்க, ஏதாவது பண்ணி விட்டுப் போங்கள். அப்படி வராவிட்டாலும், நான் மட்டும் ஒருநாளும் உங்களைத் தப்பாக நினைக்கவே மாட்டேன், அண்ணா!" என்று மொழிந்துவிட்டு, அதற்கு மேல் நில்லாமல், விரைந்து சென்றுவிட்டாள்.

மகேந்திரன் நிற்க இயலாதவர்போல, ஒரு சோர்வுடன் கைநீட்டி சோபாவைப் பிடித்தபடி, இரண்டெட்டு நடந்துவந்து அமர்ந்தார்.

ரேவதி சற்றுத் தடுமாறினாள்.

வேதனையும் தவிப்புமாக உள்ளே ஓடிச்சென்று மகளைப் பார்ப்பதா? அல்லது, ஒருநாளும் அறியாவண்ணம் ஓய்ந்து அமர்ந்திருக்கும் கணவனைக் கவனிப்பதா?



சிறு போராட்டத்தின்பின்; காலம் காலமாக தலைமுறை தலைமுறையாக உள்ளத்தில் ஊறி வந்திருக்கும் இந்தியப் பண்பாடு தலைதூக்கக் கணவனிடம் சென்று, அவர் அருகே அமர்ந்தாள்.

கணவனின் தோளைத்தொட்டு, "பாருங்கள், இப்படி உடைந்து போகாதீர்கள்! கஷ்டமாகத்தான் இருக்கும்! மகள் திருமணம் நின்று விட்டது ஒருபக்கம்! பிரியமான தங்கையைப் பிரிய நேர்ந்தது வேறு..." என்றவளைத் தலைதூக்கித் திரும்பிப் பார்த்தார் மகேந்திரன்.

"இதெல்லாமா எனக்குப் பெரிய வருத்தம் ரேவதி? அபூர்வனோடு மயூரி கல்யாணம் நின்று போனால் என்ன? இந்த உலகத்தில் அபூர்வன் மட்டும்தானா ஆண்பிள்ளை? சொல்லப்போனால், இவனது பச்சோந்திப் புத்தி, காலம் கடக்குமுன் - திருமணம் நடக்குமுன்பே தெரியவந்ததே! அதுவே நமக்கும் நம் மகளுக்கும் நல்லதுதான்! அதேபோல மனோரஞ்சிதம் எப்படிப்பட்டவள் என்பதும், இப்போதேனும் தெரிய வந்ததே என்று ஒரு நிம்மதிதான். இவ்வளவுநாள் இழந்த பொருள், ஒரு "புத்தி கொள்முதல்" என்று வைத்துக் கொள்ளலாம்! ஆனால்..."

"என்னப்பா, ஆனால்?"

"நான் உனக்குச் செய்த அநியாயம்?!"

ரேவதி, திகைப்புடன் நோக்கிவிட்டுப் பார்வையைத் தரையில் பதித்தாள்.

"இவளுக்காக என்றும், இவள் பேச்சைக் கேட்டும், உன்னை எவ்வளவு உதாசீனப்படுத்தியிருப்பேன்? எப்படித்தான், சகித்தாயோ! இவள் ஒருவார்த்தை ஒரு மாதிரி சொல்லுமுன் எனக்கு உடல் ஆடிவிட்டது! உன்னை, உன் வீட்டை, உன் ஊரை...என்னவெல்லாம் பேசியிருக்கிறேன்! இதுவே வேறு ஒருத்தி என்றால், என்னைவிட்டு என்றைக்கோ பிரிந்திருப்பாள்! அல்லது வீட்டை, ரணகளம் ஆக்கியிருப்பாள்! நீ அத்தனையும் சகித்து இப்போதும் என்னைத் தேற்ற வந்திருக்கிறாயே! அதிலும், உன் உயிருக்கு உயிரான மகள் அழுதுகொண்டு இருப்பதையும் ஒதுக்கிவிட்டு..."

"அவள் சின்னப்பெண்! சீக்கிரம் மனம் தேறிவிடுவாள்!"

"அதுமட்டுமல்ல! உனக்கு முதலில் இருந்தே அபூர்வனை மாப்பிள்ளையாக்கிக் கொள்ள விருப்பம் இல்லை! என் பிடிவாதத்திற்காகப் பணிந்து ஒத்துக் கொண்டாய்! பெற்ற மகள் வாழ்வில்கூட, உனக்கு ஓர் உரிமையும் இல்லாமல் பண்ணிவிட்டேன்! அதற்கான தண்டனைதான் இது! இல்லையா, ரேவதி? எத்தனையோ தப்புகளுக்கு இனி ஒரு நிவர்த்தியும் செய்ய வழியில்லை! ஆனால், இந்த விஷயத்தில், இனி, உன் வார்த்தைக்குத்தான் மதிப்பு! நீ, யாரை மருமகனாக்க வேண்டும் என்று நினைக்கிறாய் சொல்லு! இந்த முகூர்த்தத்திலேயே, திருமணத்தை நடத்தி விடுகிறேன்!" என்றார் அவர்!



ரேவதியின் மனதில் ஏதோ எண்ணங்கள் தோன்றின. ஆனால், நடைமுறையில் உள்ள சிக்கல்கள் அவளை வாய்திறக்க முடியாமல் செய்தன. கூடவே இன்னொரு சந்தேகமும் தோன்றிவிட, "மயூப்பா, நீங்கள் ஒன்றும், இதை கவுரவப் பிரச்சினையாகக் கருதி, அதே நாளில் திருமணத்தை நடத்த நினைக்கவில்லையே?" என்று கேட்டுவிட்டு, நாக்கைக் கடித்துக் கொண்டாள்!

ஏதோ, இளகின நேரத்தில் பேசியதைச் சாதகமாக நினைத்துப் பேசிவிட்டு, வாங்கிக் கட்டிக் கொள்ளப் போகிறாளா?

ஆனால், நல்லகாலமாக, மகேந்திரன், மீண்டும் 'வேதாளம் முருங்க மரத்தில் ஏறிய கதை' போல எதுவும் சொல்லிவிடவில்லை! மாறாக, "நாளைக்குத் தாஜில் வரவேற்பு! நமக்குத் தெரிந்த அத்தனைபேருக்கும் அழைப்பு போயிருக்கும்! இப்போது போகிற மானம், இன்னமும் பதினைந்து நாட்களில் மயூரிக்குத் திருமணத்தை நடத்தி விடுவதால் திரும்பிவருமா? அப்படியெல்லாம் இல்லை, ரேவதி! மய்யூ மனதிற்கு, அபூர்வனுக்குப் பதிலாக வேறு ஒருவனைச் சீக்கிரமாகக் கொடுத்தால் நல்லதோ என்று நினைத்தேன்!" என்றார் வருத்தமான குரலில்.

உள்ளூர அமைதியுற்று, "எனக்கென்னவோ அவசரப்பட வேண்டாம் என்று தோன்றுகிறது, மய்யூப்பா! சின்ன வயதிலிருந்து, அபூர்வன்தான் புருஷன் என்று வளர்ந்துவிட்டாள். இந்த மாற்றத்தை முதலில் ஏற்றுப் பழகட்டும்! அதன்பிறகு மற்றொரு வாழ்வு அமைப்பது

பற்றி யோசிக்கலாம். அவசரப்பட்டு எதையாவது செய்தால், இதை மறக்கவும் முடியாமல், அடுத்ததை ஏற்கவும் முடியாமல், பாவம் மயூரி, திண்டாடிப் போய் விடக் கூடும்...'' என்றாள் ரேவதி.

''வேணுமானால் மய்யூவையே கூப்பிட்டுக் கேட்போமே!''

''கேட்போம்! ஆனால் சிலநாட்களாவது கழிந்த பிறகு கேட்போம்! பொதுவாகவே, உணர்ச்சிவசப்பட்ட நிலையில் எடுக்கும் முடிவு அவ்வளவாகச் சரியானதாய் இராது என்கிறார்கள். கொஞ்சம் பொறுத்திருந்து பார்க்கலாமே?'' என்றாள் மனைவி, சற்றுக் கெஞ்சலாக.

மனைவியின் முகத்தைப் பார்த்து, ''இப்படிக் கெஞ்சியெல்லாம் என்னிடம் நீ, இனி எதையும் கேட்க வேண்டாம், ரதி! உனக்குச் சரியென்று பட்டதைச் செய்! செய்துவிட்டே என்னிடம் சொல்லலாம்! உனக்கே சந்தேகமாய் இருந்தால் மட்டும் நாம் இருவருமாய் கலந்து ஆலோசிக்கலாம்!'' என்று தழைந்த குரலில் கூறினார், மகேந்திரன்!

எந்தக் கெடுதலிலும், ஒரு நல்லதும் இருக்கும் என்று சொல்வது உண்மைதான் போலும், என்று எண்ணினாள் ரேவதி! மற்றபடி திருமணமான ஒரே மாதத்தில் மறந்துபோன 'ரதி' என்ற அழைப்பு கூட மகேந்திரனுக்கு நினைவுவந்திருக்குமா? ஆனால், கணவனின் மனம் மாறுவதற்காகக்கூட, மகளுக்கு, இவ்வளவு வேதனை நேர்ந்திருக்க வேண்டாமே என்று மறுகியது அந்தத் தாயின் உள்ளம்!''



அடுத்த ஐந்து நாட்கள், எப்படிக் கழிந்தன என்றே அந்தவீட்டில் உள்ள மூவருக்கும் புரியாத நிலை! நல்லவேளையாகத் தொழில் கல்வி பயில்வதற்காக, வெளியூரில், ஹாஸ்டலில் தங்கிப் படித்ததால், சுந்தர் இந்தத் துன்பத்திலிருந்து தப்பித்தான். மற்றபடி, டெலிஃபோனிலும், நேரிலுமாகத் துக்கம் விசாரித்தவர்களுக்குப் பதில் சொல்லி, எல்லோருக்குமே அலுத்துப் போயிற்று! வெறுத்தும் போயிற்று!

பெரியவர்களாவது சமாளித்துக் கொண்டார்கள். ஏதோ, பையன் புத்தி இப்போதே தெரிந்ததினால், மகள் தப்பினாள் என்று உண்மையையே சொல்லிவிட முடிந்தது! மீண்டும் மீண்டும் சொன்னதில் அவர்களுக்குமே, இந்தத் திருமணம் நின்றுபோனதே பரவாயில்லை என்றும் தோன்றத் தொடங்கியது.

ஆனால், மயூரிதான் பெரும்பாடு பட்டுப் போனாள்.

ஏற்கனவே, அவள் வயதுப்பெண்கள் பலரின் பொறாமையை அவள் பெற்றிருந்தாள். அவளது நல்ல குணத்தினாலேயே, அவளிடம் உயிராய் இருந்தவர்களும் உண்டு!

இப்போது, மயூரியால், பொறாமைக்காரிகளின் குத்தலையும் தாங்க முடியவில்லை! அதைவிடவும், உண்மையாக அன்புள்ள தோழிகளின் பரிவில்தான் மிகவும் குன்றிக் குறுகிப்போனாள்!

கடைசியாக ஒருநாள், லோசனி வந்து, அவள் அக்கா வேலை செய்யும் ஓட்டலுக்கு, அபூர்வனும் செளம்யாவும் வந்து குதியாட்டம் போட்டதைச் சொல்லி விட்டு, "இவ்வளவு தூரத்துக்கு வளரவிட்டு விட்டாயே, மயூரி! நான் முதலில் எச்சரித்தபோதே, உன் அப்பாவி டம் சொல்லி நடவடிக்கை எடுத்திருக்கலாமே! அபூர்வன் அருகில் நின்று கொண்டு, அந்த செளம்யா நெளிப்பதை யும், போஸ் கொடுப்பதையும் பார்த்தபோது எனக்கு எப்படிப் பற்றிக் கொண்டு வந்தது, தெரியுமா? எங்கள் மயூரியின் இடம்! போடீ! என்று கத்தலாமா என்று வந்தது!" என்றாள் வருத்தமும் கோபமுமாக.

இந்தக் கோபமும் வருத்தமும் தன்னிடம் உள்ள அன்பால் வந்தது என்று அறிந்திருந்த மயூரிக்கு வேதனை இன்னமும் அதிகம் ஆயிற்று. தன்னால் அல்லவோ இவளுக்கும் இந்தத் துன்பம் என்று மறுகினாள். தாயின் கவனமும் பரிவும், தந்தையின் கனிவும், வேலையாட்களின் கரிசனமும் கூட வேதனையாகவே இருந்தன! எல்லாமே, அவளுக்காக அவர்கள் படும் துன்பத்தின் வெளிப்பாடுதானே?

இதிலிருந்து யாருக்கும் மீட்சியே இல்லையா என்று அவள் உள்ளூர நொந்து ஓய்ந்திருந்த வேளையில் அங்கே குணசீலன் வந்தான்.



# 9

கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாகக் குணசீலனை, மயூரி சரியாகச் சந்தித்ததே இல்லை எனலாம். அவன், சென்னையில் இருக்கும் நேரமே மிகவும் குறைவாகி இந்தியாவுக்குள்ளும், வெளிநாடுகளிலும் சுற்றிக் கொண்டே இருந்தான்.

'குணா கால் சக்கரம் கட்டி வைத்திருக்கிறது', என்று ரேவதி சிறு வருத்தமும் பெருமையுமாகக் கூறுவது உண்டு.

அவனை, அடிக்கடி பார்க்க முடியவில்லையே என்பதில் வருத்தம்! அவன் விரும்பியபடி நிறைய சம்பாதிக்கிறான் என்பதில் பெருமை!

அவ்வப்போது, தந்தையைப் பார்க்க வருவதை ஒரு கடமையாக குணசீலன் கொண்டிருந்தான். அப்போது, ரேவதியைப் பாராமல் போவதில்லை என்றாலும், அவன் ரேவதி வீடுதேடி வந்து, முன்போலத் தங்கியிருந்து பேச வாய்ப்பு இல்லாமலே போயிற்று.

கிடைத்த ஐந்து, பத்து நிமிடங்களில் ரேவதி வீட்டுக்கு ஓடிவந்து பார்த்துவிட்டுப் போனதில் பெரும்பாலும் வீட்டில் இருக்கும் ரேவதி தவிர, மற்றவர்களுக்குக் குணசீலனின் தரிசனம் கூடக் கிட்டாமலே போய்க் கொண்டிருந்தது.

அப்பப்போது, அவனைப் பார்க்கவே முடியவில்லையே என்பது உறுத்தினாலும்கூட, திருமணத்தைப் பற்றிய திட்டங்கள், அபூர்வனுடன் பேசுதல், தோழிகளின் கேலி, கிண்டல், கல்லூரிப் படிப்பு என்று மயூரிக்குப் பொழுது, நில்லாமல் ஓடிக் கொண்டே இருந்தது.

இப்போதுதான் - இந்த ஐந்து நாட்களில்தான், மயூரி குணசீலனின் வருகையைப் பெரிதும் நாடினாள்! அவனிடம், அவளது வேதனையை வெளிப்படையாகச் சொல்லலாம்! ஒன்றும் புரியாமல் குனியமாக இருக்கும் சூழ்நிலையை மாற்றுவது எப்படி என்று ஆலோசனை கேட்கலாம். எப்படியும், அவனிடம் சொன்னாலே பாதித் துன்பம், தீர்ந்து போகும். ஆனால் அவன் எங்கிருக்கிறானோ? இப்போதைக்கு இந்தப்பக்கம் வருவானோ? மாட்டானோ?

நெஞ்சில் இருப்பதை எல்லாம், குணசீலனிடம், கொட்ட வேண்டும் என்று எண்ணி, அவன் வரவுக்காக ஏங்கிக் கொண்டிருந்த மயூரிக்கு அவனை நேரில் கண்டதும், கண்கள் அருவியாகக் கொட்டினவே தவிர, வாயில், வார்த்தை வரமறுத்தது.

ஆம்! மயூரியின் மவுனப் பிரார்த்தனைகளுக்குப் பலன் கிடைத்தாற்போலக் குணசீலன் திடுமென வந்து நின்றபோது, மயூரியால், முதலில், தன் கண்களை, நம்பக்கூட முடியவில்லை!

அவன் கடைசியாகச் சந்தித்தபோது, எப்படி அவனது வீடுகூடச் செல்லாமல் இங்கே வந்தானோ, அதே போலத்தான் அன்றும் வந்திருந்தான்.



அன்றைக்கு வெறும் டீஷர்ட்! இன்று, அவனது நிலை உயர்ந்ததன் அடையாளமாகவோ, இப்போதைய அவனது இயல்பான உடையே அதுதானோ குணசீலன், முழுசூட்டில் வந்திருந்தான். வெகுஇயல்பாக அவனோடு பொருந்தியிருந்த 'கோட்' அவனது கம்பீரத்தை மிகைப் படுத்துவது போலத் தோன்றியது.

கண்டவுடன் சிரிக்கும் அவனது கண்களில், ஒரு கவனம்! கூடவே, காணப்பட்ட கனிவுதான், மயூரியை நிலையிழக்கச் செய்தது போலும்!

''குணா!'' என்றவளுக்கு மேலே ஒன்றுமே பேசமுடியாமல், தொண்டை அடைத்தது. உதடுதுடித்து, விழிகளில் மழை இறங்கியது!

''ஷ்! மய்யூ!'' என்று கைகள் உயர, அவளை நோக்கி ஓர் எட்டு எடுத்து வைத்தவன் சட்டென நின்றான்.

முகம் இறுக ஒருகணம் தாமதித்தவன், பாக்கெட்டினுள் கைவிட்டு, ஒரு வெண்ணிறக் கைக்குட்டையை எடுத்தான்.

கையை நீட்டி, மயூரியின் கண்களைக் கைக்குட்டையால், கனிவுடன் ஒத்தி எடுத்துவிட்டு, ''வேண்டாம், மயூரி. உலகத்தில் யாரும், இந்தக் கண்ணீருக்குத் தகுதியானவர் அல்ல! அதிலும், அபூ... இல்லை! வேண்டாம்மா! இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு வந்திருக்கிறேனே! இப்படியா வரவேற்புக் கொடுப்பது? ம்? மயில் தோகை விரித்து ஆடும் போதுதான் பேரழகு! எங்கள் மயூரி சிரிக்கும் போது அப்படி என்பேன்! இப்போது,

இந்த அழுதமுகம்.... ஊகூம்! ப்ளீஸ் மய்யூ! எனக்காக... இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, உன்னைக்காண விரைந்தோடி வந்திருக்கும் உன் குணாவுக்காக அழுகையை நிறுத்து...'' என்று அவன் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே, அழுகையும் சிரிப்பும் கலந்த ஓர் ஒலி, மயூரியின் தொண்டையிலிருந்து எழுந்தது.

உதட்டோரம் வளைய, ''இரண்டு, ஆண்டுகள் சாவகாசமாய் இருந்துவிட்டு இப்போது, 'விரைந்தோடி' வந்தீர்களாக்கும்! என்ன கதை இது?'' என்று முறுவலிக்க முயன்றாள் அவள். ''சொன்னால், நம்பும்படியாகச் சொல்ல வேண்டும்?''

''கொஞ்சம் கற்றுக்கொடுங்கள், டீச்சர்! அப்புறமாய், எவ்வளவு பிரமாதமாய், நம்பும்படியாகவே பொய் சொல்லுகிறேன் என்று'' என்று பாவனையுடன் உரைத்து, அவளைச் சிரிக்கவே வைத்தான். ''நூற்றுக்கு நூறு மார்க் வாங்குவேனாக்கும்!''

மயூரி மெல்லருவியாய் நகைக்கவும் குணசீலனின் முகமும் மலர்ந்தது.

தோட்டத்தில் உலவிவிட்டுத் திரும்பிவந்து, மாடிப் படி ஏறிக் கொண்டிருந்த மகேந்திரன் பாதிப்படியில் திகைப்புடன் நின்றார்! ஐந்து நாட்களுக்குப் பிறகு, மயூரி முதல்முறையாகச் சிரிக்கிறாள்! மெல்லத்தான் என்றாலும், சிரிக்கிறாளே! இனி மகள் சிரிக்கவே மாட்டாளோ என்று அவர் கலங்கிப் போயிருந்தார்!

யோசனையோடு மேலே படியேறினார் அவர்.



மயூரியை மேலும் சிரிக்க வைக்க முயன்றான் குணசீலன்! ''ஆனால், இதில் நூற்றுக்கு நூறு மார்க் போடுவது. ரொம்பக் கஷ்டம்! இல்லையா, மயூரி?'' என்று கேட்டான்.

''ஏனோ? என்ன கஷ்டம்? ஒருவேளை உங்கள் திறமையில் உங்களுக்கே சந்தேகம் வந்துவிட்டதா?'' என்று லேசாக முறுவலித்தாள் மயூரி.

''என் திறமையில், எனக்கே சந்தேகமா? ஊகூம்! நூற்றுக்கு நூறு சதவீதம் நம்பிக்கை உண்டு! நான் முழுமையாக நம்பும்படியாகப் பொய் சொல்லும்போது, அது உண்மையா, உண்மைபோலச் சொல்லப்பட்ட பொய்யா என்று எப்படிக் கண்டுபிடிப்பாயாம்? கண்டு பிடித்துவிட்டால், அது நூற்றுக்கு நூறு மார்க் வாங்கும் தகுதி உடையது அல்ல! கண்டுபிடிக்காவிட்டால், மார்க்கே கிடைக்காது! எப்...படியும் எனக்குத் தோல்வி தானா? ஹூ‌ஹும்!'' என்று நீண்டதாக ஒரு மூச்சுவிட்டான் குணசீலன்.

குணசீலனைக் கண்ட குதூகலமோ, அன்றி, ஐந்தாறு நாட்களாக அடைபட்டிருந்த சலிப்போ, மயூரி நன்றாகவே நகைத்தாள்!

ஆனால், சிரிப்பு முடியும்போதே அவள் முகம் மாறிவிட்டது. குணசீலனை யோசனையுடன் நோக்கி, ''சொல்லுங்கள், குணா, இப்போது, நீங்கள், இங்கே எப்படி வந்தீர்கள்?'' என்று கேட்டாள்.

அவளுள் ஒரு சிறு தவிப்பு! மகளைத் தேற்றும் வகையறியாமல், தாயார்தான் குணசீலனை வரவழைத்தி

குப்பாளோ? குணா, இப்போது அவளது துறையில் ஓரளவு முக்கியமான புள்ளி! முன்னேறிக் கொண்டிருக்கும் அவன், அவளுக்காக, அவளது வாய்ப்புகளைக் கெடுத்துக் கொண்டு...சே! அவளால், எத்தனை பேருக்குக் கஷ்டம்!

பெருமளவு உண்மையும் அதுதான். அவன் இருக்கும் இடம் தேடி, ரேவதிதான் குணசீலனுக்கு டெலி∴போன் செய்து விஷயத்தைச் சொன்னாள். கூடவே, 'வேலைகளைக் கெடுத்துக் கொண்டு வரக்கூடாது; கிடைக்கும் முதல் இடைவெளியில் வா' என்றும் கூறினாள். ஆனால், கிடைப்பது ஓரிரு நாட்களே ஆனாலும், ஓர் எட்டு வந்து மகளைப் பார்த்து விட்டுச் செல்லுமாறும் வேண்டியிருந்தாள்.

கட்டாயம் அவனே பார்த்தாக வேண்டிய அடுத்த மூன்றுநாள் வேலையை முடித்துக்கொண்டு, குணசீலனும் கிளம்பி வந்துவிட்டான்.

ஆனால், தன்னால், எல்லோருக்கும் தொல்லை என்று மறுகிக் கொண்டு இருப்பவளிடம் இதை எப்படிச் சொல்லுவது?

''இடையில் ஒருவாரம் மொத்தமாய் ஓய்வு கிடைத்தது! அப்பாவைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்! ஏன் கேட்கிறாய்?'' என்று வெகு இயல்பாய் விசாரித்தான் அவன்.

சந்தேகமாய் நோக்கி, ''ஆனால், அபூவைப் பற்றி எப்படித் தெரியும்? நான்... நீங்கள் நேரே, இங்கே வந்திருக்கிறீர்களே?'' என்று மேலும் வினவினாள் அவள்.



''அதென்ன உலகமகா ரகசியமா, மயூ? விமான நிலையத்திலிருந்து டெலி∴போன் செய்து பேசினேன். விஷயம் கேள்விப்பட்டதும், மற்றதெல்லாம் பிறகு, என்று, இங்கு ஓடிவந்து விட்டேன்! அதாவது 'விரைந்தோடி!'' என்று முறுவலித்தான்.

அவனோடு சேர்ந்து முறுவலிக்க முயன்றவளின் உதடுகள் துடித்தன. குணசீலன் ஏறிட்டு நோக்கி, ''எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறதே, குணா!'' என்றவளின் குரலும் நடுங்கியது!

சிலகணநேரம் அசையாமல் நின்றிருந்துவிட்டு, ''இங்கே வா, மயூரி. உட்கார்!'' என்று சோ∴பாவைக் காட்டினான்.

அவள் உட்கார்ந்ததும், தானும் அமர்ந்து, அவள்புறமாய்த் திரும்பி, ''இப்போது சொல்லு! மனதில் இருப்பதை எல்லாம் சொல்லு. என்ன என்ன கஷ்டம்... அபூர்வனின் செயல் பெரிய வேதனைதான்! ஆனால், அதுபோக மற்றபடி உன் மனதைத் துன்புறுத்துவது என்னென்ன என்பதையும் சொல்லு!'' என்று கனிவுடன், ஆனால், சற்று வற்புறுத்தலாகக் கேட்டான்.

இந்தக் கேள்வியே, மயூரியைத் தளரச் செய்தது எனலாம். எல்லோரும் - பெற்றவர்கள் உட்பட, அபூர்வனைத் திட்டினார்கள். திருமணத்துக்கு முன்பே அவனது சுயரூபம் தெரிந்து அவள் தப்பியது குறித்து ஆறுதல் அடைந்தார்கள்! இனி ஒரு நல்ல வாழ்வு அமையும் என்று ஆருடம் சொன்னார்கள்.

ஆனால், அபூர்வனின் துரோகத்தினால் மட்டு மின்றி, மற்ற வகையிலும் அவள் வேதனைப்பட்டாள் என்பதைப் புரிந்து கொள்ளவில்லை. பொறாமை, பரிவு, பாசம் எல்லாமே அவளை வருத்தின என்பதும் யாருக் கும் தெரியவில்லை!

இந்த ஒரு கோணத்தில் சிந்தித்துக் குணசீலன் கேட்கவும் மனதில் அடைத்துக் கொண்டு இருந்ததெல் லாம், ஒவ்வொன்றாக வெளியேறின!

ப்ரீதி கும்பலின் எக்களிப்பு, லோசனி போன்றோ ரின் வருத்தம், பெற்றோரின் கண்ணாடிப் பாத்திரத்தைக் கையாள்வது போன்ற கவனமும் கனிவும்.

"எல்லாமே வலிக்கிறது, குணா! சொல்லாமல் கொள்ளாமல் எங்காவது ஓடிவிடலாமா என்றுகூட, ஒரோர் சமயம் தோன்றுகிறது! அம்மா, அப்பாவை அப்படி வேறு வருத்தப்படுத்துவதா என்றுதான், பல் லைக் கடித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறேன்!" என்று முடித்தாள் மயூரி.

"ரொம்பவும் பலமாகக் கடித்துவிடாதே! ஒன்றி ரண்டு உதிர்ந்து விட்டால்கூடப் பார்க்கச் சகிக்காது!" என்றான்.

"குணா?!?" என்றாள் அவள், ஆவலாக.

உடனே முகம் வாடி, "உறவு, நட்பு என்று யார் வீட்டுக்குப் போனாலும், இதே கதைதானே நடக்கும், குணா?" என்றாள் நம்பிக்கையற்று.



"ஒரு சின்னத் திருத்தம், சேர்த்துக் கொள்! உன் உறவு, நட்பு என்று சென்றால்தானே அப்படி!"

"புரியவில்லையே?"

"புரியவைக்கிறேன்! அதற்குமுன் உன் பெற்றோரி டம் பேசிவிட்டு வருகிறேன்! ஆனால், அதுவரை, இந்த முகம் வாடக்கூடாது" என்று எழுந்து சென்றான் குண சீலன்.

சற்றுநேரத்தில் திரும்பிவந்து, "பெட்டி அடுக்கிக் கொண்டு கிளம்பு, மயூ. ஒன்றிரண்டு நாட்களுக்கல்ல! மாதக்கணக்கில் தங்குவதற்கு! சீக்கிரம்! நீ சீக்கிரமாகத் தயார் ஆனால், இன்றைக்கே கூடக் கிளம்பிவிடலாம்! சீக்கிரம்! சீக்கிரம்!!!" என்று விரட்டினான்.

"இன்றைக்கேவா? மெய்யாகவே, இன்றைக்கே கிளம்பிவிடலாமா?" என்று மயூரி ஆர்வத்துடன் வினவி னாள்.

அவளது கண்களில் பழைய ஒளி தோன்றுவதைத் திருப்தியுடன் நோக்கி, "மெய்யாகவே இன்றைக்கே தான்! ஆனால், நீ கிளம்பத் தாமதம் ஆக்கினால் நாளைக் குத்தான்!" என்றான் குணசீலன்.

"ஆனால்... எங்கே போகிறோம் குணா? அம்மா... முக்கியமாக அப்பா ஒத்துக் கொண்டாரா?..."

"அம்மா, அப்பா இரண்டுபேரும் சம்மதித்தா யிற்று... அம்மா, உன் கூடவே - நம்கூடவே வந்து, அங்கே உள்ள வசதியெல்லாம் பார்த்து உன்னைவிட்டு விட்டுத் திரும்புவார்கள்! ஆனால் நீ இப்படிச் சும்மா

நின்று கேள்விக்கணைகளைத் தொடுத்துக் கொண்டு இருப்பதைப் பார்த்தால், உனக்குத்தான் கிளம்ப விருப்பம் இல்லையோ என்று தோன்றுகிறது?'' என்றான் அவன் கேலிக்குரலில்.

''எனக்கா கிளம்ப விருப்பம் இல்லை? இதோ பாருங்கள்!'' என்று மயூரி வேகமாக எழும்போதே, கையில் சிறிதும் பெரிதுமாக இரண்டு பெட்டிகளுடன் ரேவதி வந்தாள். ''என்ன மய்யூ, இன்னும் பெட்டி அடுக்கத் தொடங்கவில்லை? நான் ரெடி!'' என்றபடி.

''இரண்டு பெட்டிகளா? அதிலும் பெரிது ஒன்று! பெட்டி இருக்கிற அளவைப் பார்த்தால், மயூரியோடு, நீங்களும் அங்கே 'டேரா' போடப்போவது போலல்லவா தெரிகிறது! என் பெரியம்மா தாங்கமாட்டார்கள், ஆன்ட்டி!'' என்று கவலைகாட்டினான் குணசீலன்!

''ஆ...மாம்! நான்வந்து, சிந்துபாத் கதைக்கிழவனைப் போல, உன் பெரியம்மாவின் தலையில் ஏறி உட்கார்ந்து கொள்ளப்போகிறேன், அவர்களுக்குக் கனம் தாங்க முடியாமல் போய்விடும்! அப்படியா? போடா போக்கிரி! இதில் சின்னது மட்டும்தான்டா என்னது! பெரிய பெட்டியில், மய்யூவின் துணிகள்தான் இருக்கின்றன. கொஞ்சம் இலகுவாய் அணியக்கூடிய மாதிரியில், சுரிதார், சேலை எல்லாம் எடுத்துவைத்தேன்!'' என்று இலகுவாகப் பேசிய தாயை, மயூரி ஆச்சரியத்துடன் நோக்கினாள்!

இந்த அம்மா, குணசீலனிடம் எவ்வளவு உரிமையோடு பேசுகிறாள்! இப்படிக் கலகலப்பாய், அபூர்வனோடு ஒருதரம் கூடப் பேசியதில்லையே!



அபூர்வனின் நினைவில், மயூரியின் முகம் கசங்கத் தொடங்கும் போதே குணசீலனின் பதில் கேட்டது. ''என்னது? சேலையா?!'' என்று புருவங்களை உச்சி மேட்டுக்கு உயர்த்தினான், அவன். ''பெரியம்மாவின் வீடு, கொஞ்சம் பழைய மாடல் ஆன்ட்டி! அடிக்கொரு புதையல் எடுப்பதையெல்லாம் அது தாங்காது!'' என்றான் வருத்தமாக.

''புதையலா? யார் புதைய...'' என்று ரேவதி பேசுகையில் சட்டென மயூரி குறுக்கிட்டாள். ''அம்மா நிஜப் புதையல் இல்லம்மா! சேலை கட்டினால், நான் தடுக்கித் தடுக்கி விழுவேனாம்! என்மேல் எவ்வளவு நம்பிக்கை பாருங்கள்!'' என்று குறைப்படும்போதே, அபூர்வனும் இந்த மாதிரி ரேவதியையும் இழுத்துவைத்து இலகுவாகப் பேசியது இல்லை என்பது அவளுக்கு நினைவுவந்தது!

ஏன், மணந்து கொள்வதாக இருந்த மயூரியிடம் கூட, அவன் இப்படிக் கலந்து பேசிச் சிரித்தது இல்லையே!

''நம்பிக்கை கொள்ள எவ்வளவோ ஆசைதான்! ஆனால், நடப்பு வேறுமாதிரி இருக்கும்போது, அதிகப்படியாய் எதிர்பார்த்து ஏமாறுவது அசட்டுத்தனம் இல்லையா?'' என்ற குணசீலனின் பேச்சு, அவளை மீண்டும் நிகழ்காலத்துக்கு இழுத்து வந்தது.

''என்னது? என்னது? நடப்பா? நான் எப்போது...'' என்று ரோஷத்துடன் தொடங்கியவள், தாயிடம் திரும்பி, ''அம்...ம்மா! என்ன நீங்கள்? இதை எல்லாமா தண்டோரா போடுவது?'' என்று சிணுங்கினாள்!

குணசீலன் சிரிக்க, "இல்லைடாக் கண்ணு! அன்றைக்குப் பேச்சு வாக்கில் ஏதோ... அதுவும், அன்றைக்குத்தான் நீயும் சேலை தட்டி விழுந்ததாகச் சொல்லியிருந்தாயா? உன்னைப்பற்றி இவன் கேட்டதும் வாயில் வந்துவிட்டது!" என்று சமாதானம் சொன்னாள் தாய்!

"வருவதே அரிது! அப்படி வந்தாலும் தங்குவது ஐந்தே நிமிடங்கள் இதிலும் என்னைப்பற்றிய வம்பா? ச்சே! இந்த உலகம் ரொம்பவும் மோசமாய்ப் போய்விட்டதப்பா!" பெரிதாக வருத்தப்பட்டுக் கொண்டாள் மயூரி.

"ஆன்ட்டி! மயூரி இந்த உலகத்தைச் சேர்ந்தவளா, இல்லையா?" என்று குணசீலன் சந்தேகம் கேட்டான்.

"ஏன் கேட்கிறாய், குணா?"

"இல்லை... உலகம் மோசமாய் அதுவும், ரொம்பவும் மோசமாய்ப் போய்விட்டது என்கிறாளே! அவள் உட்படத்தானா இல்லையா என்று யோசித்தேன்" என்று, குணசீலன் சிரியாமல் சொல்ல, எல்லோரும் சிரித்தனர்.

அதுசமயம், வந்த மகேந்திரன், என்னவென்று கேட்க, அவருக்கு விவரம் சொல்லி மீண்டும், அங்கே ஒரு மென்சிரிப்பு பரவியது.

நிம்மதி படர்ந்த முகத்துடன், குணசீலனின் அருகே வந்து, "உன்னை நம்பித்தானப்பா, மயூரியை உன் பெரியன்னை வீட்டுக்கு அனுப்புகிறேன்! அங்கே அவள் மகிழ்ச்சியோடு... இந்த வேதனை மறையும்படி பார்த்துக்கொள்!" என்றார்.



மனைவியிடமும், "குணசீலன் சொல்வது சரியாக இருக்கும் என்று நீ கூறுவதை வைத்துதான் இந்த ஏற்பாடு! அங்கே, உனக்குச் சிறு உறுத்தல் தோன்றினாலும், மயூரியைக் கூட்டிவந்துவிடு!" என்று சொல்லி அனுப்பினார்.

ஒருவாறாக, மயூரியின் சென்னை வாசத்துக்கு அப்போதைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது!

அன்றுவரை, அவன் அறிந்திராதவிதமாய், மயூரியின் வாழ்க்கை புதுப்பாதையில் செல்லலாயிற்று.

# 10

குணசீலனுடைய பெரியன்னை பெரியப்பாவுடைய மனைவி, ஓர் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியை. கல்வித் தகுதியில் நிறையப் பட்டங்கள் பெற்றவர். தனக்கென்று பிள்ளைகள் பிறவாது போகவே, பள்ளிப் பிள்ளைகள் எல்லோரையுமே, சொந்தப் பிள்ளைகளாக எண்ணிப் பணிபுரிந்தவர்.

குமுதினியின் பணிகளையும், கல்வித்திறமையையும் கவுரவிக்கும் விதமாக, ஒரு பெரிய கல்வி நிறுவனம் ஒன்று, அதன் மாணவர்களுக்கான பாடப்புத்தகங்களை உருவாக்கித்தருமாறு அவரிடம் கேட்டது! அதற்காக ஒரு தொகையும் தர முன்வந்தது.

குணசீலனுடன் கலந்து ஆலோசித்துவிட்டு, அந்தப் பணியைக் குமுதினி ஒத்துக்கொண்டார்.

ஏற்கனவே, குமுதினி, எழுதி வடிவமைத்துக் கொடுத்திருந்த நான்கு புத்தகங்களும் கல்வி நிறுவனத்தாரால் பாராட்டுதலுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இப்போது அடுத்த 'செட்' புத்தகங்கள், சற்றுப் பெரிய வகுப்புக்கு என்பதால், அவருக்கு உதவி தேவைப்படுகிறது.

''கொஞ்சம் புத்தியுள்ள பெண்ணாக யாராவது இருந்தால் சொல்லு! என்று சமீபத்தில்தான் என்னிடம் சொன்னார்கள். 'பெண்' என்பது சரிதான்! ஆனால், அதற்கு முந்திய அடைமொழி பற்றித்தான் கொஞ்சம் சந்தே...கமாக இருக்கிறது, ஆன்ட்டி...'' என்று கவலைப்படுவது போலக் குணசீலன் இழுத்தான்.

காரிலேயே கிளம்பிவந்து கொண்டிருந்தவர்கள், இடையில் உணவுக்கு நிறுத்தியபோது, மயூரியின் எதிர்கொள்ளப் போகும் பணிபற்றி விளக்கிக் கொண்டிருந்தான்.

இந்தநேரத்தில் என்ன செய்துகொண்டு இருக்க வேண்டியவள், இப்போது எங்கே போய்கொண்டிருக்கிறோம் என்று எண்ணி முகம் வாடிக் கொண்டிருந்த மயூரி, குணசீலனின் சீண்டலில் திமிர்ந்தாள். ''புத்தியிருப்பவர்களை அறிந்துகொள்ள, அவரவருக்கும் கொஞ்சம் புத்தி இருக்க வேண்டுமே! அது, இல்லாதவர்களுக்கு இதுபோலச் சந்தேகம் வருவது இயல்புதான்!'' என்றாள் ரோஷமாக.



குணசீலன் லேசாகச் சிரிக்கவும், ''ச்சு! எல்லாம் சும்மா!'' என்றாள் ''நீங்கள் ரொம்ப மோசம், குணா!''

முறுவல் மாறாமல், ''மோசமோ, இல்லையோ! அது எனக்குத் தெரியாதும்மா! ஆனால், நான் சொன்னது எல்லாமே 'சும்மா' அல்ல! பெரியம்மா, புத்தகங்கள் எழுதுவது நிஜம்! அந்த வேலையில் நீ உதவி செய்யப் போவதும் நிஜம்தான்!'' என்றான் குணசீலன்.

சற்றுயோசித்து, ''இது எனக்குப் பழக்கம் இல்லாத வேலை, குணா! நான் அவர்களுக்கு உதவியாய் இருப்பேனோ அன்றி உபத்திரவம் ஆகிவிடுவேனோ என்று பயமாக இருக்கிறது. அவர்களுக்கு நான் பயன்பட மாட்டேன் என்று என்னை வேண்டாம் என்று சொல்லி விட்டால்? நினைக்கவே பயமாக இருக்கிறது, குணா!'' என்றாள் மயூரி.

''யாரோ, இப்போதுதான் தன்னைத்தானே புத்திசாலி என்று பறைசாற்றிக் கொண்டார்கள்! புத்திசாலி பேசுகிற பேச்சா இது?'' என்று கடிந்து கொண்டான் அவன். ''ஒரு கிளிப்பிள்ளை கூடச் சொன்னதைச் சொல்கிறது! பெரியம்மா சொல்வதை அப்படியே எழுதிக் கொடுக்கப் போகிறாய்! இது உன்னால் முடியாததா? தன்னம்பிக்கை வேண்டும், மயூரி! உனக்கே, உன்னிடம் நம்பிக்கை இல்லாவிட்டால், மற்றவர்கள் உன்னை எப்படி நம்புவார்கள்?''

சிலகணங்கள் மவுனமாக இருந்துவிட்டு, ''நீங்கள் சொல்வது, சரிதான், குணா! இப்போதெல்லாம் சட்டென்று எனக்கு மனது கலங்கி விடுகிறது! சிறுவயதில்

இருந்து 'கணவன்' என்று கருதிவந்த ஒருவரை இவ்வளவு எளிதாக இன்னொருத்தியிடம் இழந்தேன் என்றால்... என்னிடம்தான் ஏதோ தவறு என்று தோன்றிவிடுகிறது. அத்தை வந்து சொல்லும்வரை, எனக்குச் சந்தேகமே வரவில்லையே! நான் எவ்வளவு பெரிய முட்டாளாக இருக்க வேண்டும்! புத்திசாலித்தனம் இல்லை; முயற்சி இல்லை; என்னுடையதைக் காப்பாற்றிக் கொள்ளும் திறமை இல்லை... அதனால்தான் அபூர்வனுக்கே என்னைப் பிடிக்காமல் போய் விட்டது...'' என்றவள் தன்னைமீறிக் கண்ணீருகுத்து விட்டு, அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அவள் கண்களைத் துடைத்துக் கொண்டிருந்த போது, விநாடி நேரம், ரேவதியும் குணசீலனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''அபூர்வன் ஒரு சபல புத்திக்காரன்! உனக்குக் கொஞ்சமும் தகுதியற்றவன்! முதலில், அவனை நினைத்து அழுவதை நிறுத்து! அடுத்து, அவனை நினைப்பதையே நிறுத்து!'' என்றான் குணசீலன், சற்றுக் கடுமையான குரலில்.

பரிதாபகரமாய் அவளைநோக்கி, ''அபூர்வனை என்னால் எப்படி மறக்க முடியும், குணா?'' என்று வேதனையோடு வினவினாள், மயூரி.

''மறக்கமுடியாதா? நல்லது! இப்போது சென்னைக்கே திரும்பிப் போவோம்! அபூர்வனின் காலைப் பிடித்து, உன்னையும், இரண்டாம் தாரமாக மணந்து கொள்ளச் சொல்லு!''



''சீ!''

''அருவருப்பாய் இருக்கிறதல்லவா? பின்னே, ஏன் அவனையே நினைத்துக் கொண்டு இருக்கிறாய்? மனதைப் பிடிவாதமாய் வேறு பக்கம் திருப்பு! வாழ்வில் முதல் தடவையாகச் சம்பளத்துக்கு வேலை செய்யப் போகிறாயே! அதை நினை! அவ்வளவு தூரம் எண்ணிப் பார்க்கத் தோன்றவில்லையா? சுற்றிலும் பார்! சாலையின் இருமருங்கிலும் வளர்ந்திருக்கும் மரங்களின் கிளைகள் ஒன்றோடொன்று பின்னி, சாலைக்கு மேல் ஒரு பசிய வானத்தையே படைத்திருக்கின்றனவே! எவ்வளவு அழகு! எத்தனைவகைப் பறவைகளின் இனிய ஒலிகள்! வயலுக்கு நீர் வரும் வாய்க்காலின் அருகே வெண்ணிற நாரைகள் ஒருகால் மடக்கித் தவம் இருப்பதைப் பார்த்தாயா?...''

அவன் பேச்சில் ஈடுபட்டவளாய்ச் சுற்றிலும் பார்த்த மயூரி, திடீரென்று, ''குணா, அதோபாருங்கள், மீன்கொத்தி! நீலச்சிறகுகள் பளபளக்க எவ்வளவு அழகாகப் பறக்கிறது, பாருங்கள்! குணா, மீன்கொத்தி பறக்கும் போது பார்த்தால் அதிருஷ்டம் என்கிறார்களே?'' என்றாள், குரலில் தெம்புடன்.

''ஆமாம்! வெள்ளைக்காரர்களின் நம்பிக்கை அது! ஒருவேளை, உனக்கும், இந்தப்பயணத்தின் முடிவில் பெரிய நன்மைதான் காத்திருக்கிறதோ, என்னவோ?'' என்று குணசீலனும் அவளை ஒட்டிப் பேசி, உற்சாகப் படுத்தினான்.

குணசீலனை ஒருதரம் ஏறிட்டுப் பார்த்துவிட்டு, ''இப்படிப் பேசுகிறேன் என்று கோபப்படக்கூடாது. குணா! இந்த ஒருதரம் சொல்லி விடுகிறேன்! இந்தப் பயணத்தின் முடிவில் எனக்கு நல்லது காத்திருக்கிறது என்றீர்களே! அது சரியாகத்தான் இருக்கும். இன்றைய நிலைமையைவிட மோசமானதாய் எதுவும் இருக்க முடியாது என்பதாலேயே அது நல்லதாகத்தான் இருக்கும்! ஆனால்..'' என்று நிறுத்திவிட்டு மீண்டும் ஒருதரம் அவன் முகத்தை ஆராய்ந்தாள்.

''என்ன சொல்லு! தைரியமாகச் சொல்லு!'' என்று ஊக்கினான் அவன்.

''என்னவோ, நிலைமையை எதிர்கொள்ளத் தைரியமற்றுப் பயந்து ஓடிவந்துவிட்டது போலத் தோன்றுகிறது! கோழை என்று எல்லோரும் சொல்ல மாட்டார்களா?''

''சொல்லட்டுமே! அவர்கள் அங்கே சொல்வது, உனக்குத் திருச்சி வரை வந்து கேட்கவா போகிறது? அல்லது கேட்டுவிடுமா? உன் காதின் வல்லமை உனக்குத்தான் தெரியும்!''

தன்னைமீறிச் சிரித்துவிட்டு, ''அடுத்து, அம்மா?'' என்றாள் அவள்!

''ஆன்ட்டிக்கு என்ன?''

''சுந்தரின் பிரிவுக்கே அழுதுகரைந்தார்கள். இப்போது நானும் இல்லாமல் எப்படி சமாளிப்பார்கள்?'' என்றாள் அவள் கண்ணீர்க் குரலில்!



தலையைத் திருப்பிக் கண்ணீரைச் சுண்டி எறிந்தாள் ரேவதி.

சிறு அமைதியின்பின், ''இந்தப் பொம்மைகளோடு இது ஒரு தொல்லை'' என்றான் சலிப்புற்ற குரலில் குணசீலன்.

''எ...என்ன பொம்மை!''

''கோபுரத்து பொம்மைகளைச் சொன்னேன். கோபுரம் விழுந்து விடாமல் தாங்கள்தான், காப்பாற்றுவது போல நினைத்துக் கொள்வது! நீயும், அப்படித்தான் என்று காட்டுகிறாய்!''

''என்ன சொல்கிறீர்கள்? என்னைப் பிரிந்தால் அம்மா வருத்தப்பட மாட்டார்கள் என்கிறீர்களா?'' என்றாள் அவள் சற்று ஆத்திரமுற்று!

''அழுவார்கள்! ஆனால் அழுதுகொண்டேயா இருப்பார்கள்? அதுவும், உன் நன்மைக்காகவே இந்தப் பிரிவு என்பது தெரியும் போதுமா? சுந்தரின் படிப்பு முக்கியம்; அதற்காக நேர்ந்திருக்கும் பிரிவுக்காக வருத்தப்படக்கூடாது' என்று அவர்கள் தன்னைத்தானே தேற்றிக் கொள்ளவில்லையா? இப்போதுமட்டும் ஏன் மாட்டார்கள்? அப்படி என்ன சுந்தரைவிட நீ அவர்களுக்கு உயர்வு?''

உதட்டைக் கடித்துக் கொண்டு அவள் பேசாதிருக்கவும், 'நெஞ்சைத் தொட்டுச் சொல்லு மயூரி, இன்றைய நிலையில், உன்னைப் பார்த்து மருகுவதைவிட, இது எவ்வளவோ மேல் அல்லவா?'' என்று கேட்டான் குணசீலன்.

முறைத்துப் பார்த்துவிட்டு, ''காயத்தில் கத்திவிட்டுத் திருக உங்களால் எப்படி முடிகிறது குணா?'' என்றாள் மயூரி!

''கத்திவிட்டுத் திருகுவதன் நோக்கத்தை எண்ணிப் பார்' எப்படி முடிகிறது என்பது புரிந்துவிடும்! மருத்துவர் புண்ணைக் கீறுவது புண்ணை ஆறவைக்கத்தானே?''

''இது ஆறாத புண்!''.

''இது கதை! செத்தாலே மறந்து போகிறார்கள்!...'' என்று குணசீலன் அலட்சியமாகக் கூறவும், ''குணா!'' என்று மயூரி கத்திவிட்டாள். ''வேண்டாம் குணா! அந்த வார்த்தை சொல்லாதீர்கள்! அபூர்வன், எங்கே இருந்தாலும் நன்றாக இருக்கட்டும்!'' என்று, பெருந்தன்மையோடு வேண்டிக் கொண்டாள்.

''தியாக 'சிகரம்!'' என்றான் அவன் அதற்கும்! ''சென்னையில், அவன் நன்றாக இருப்பதாகத்தான் கேள்வி! இப்பேர்ப்பட்ட பரந்த மனம் உள்ளவள், அதற்கு ஏன் அழுகிறாயாம்?'' என்று இடக்காகக் கேட்டான்!

இதற்கு என்ன பதில் சொல்வது? அவனை ஏமாற்றினான் என்பதற்காக, அபூர்வன் அழிந்துபோய்விட வேண்டும் என்று நினைக்க முடியுமா? அவன் கஷ்டப்பட்டால் அதுவும் அவளுக்கு வேதனைதானே? இதைச் சொன்னால் குணா ஒத்துக் கொள்ள மாட்டான்!

அவன் ஒத்துக்கொள்ளும்படியாக எந்தப்பதிலும் தோன்றாமல், ''அம்மா... பாருங்கம்மா!'' என்று பெற்றவளைத் துணைக்கழைத்தாள் மயூரி.



சாப்பிட்ட பாத்திரங்கள், பொருட்களை ஒதுக்கியபடி ரேவதி, இந்தப் பேச்சுவார்த்தையை மவுனமாகக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

இப்போதும், அவர்களது உரையாடலில் கலந்து கொள்ள விரும்பாதவள் போன்று, ''மய்யூ, இந்தப் பாத்திரங்களை, அந்த வாய்க்கால் தண்ணீரில் கழுவிவிட்டு வாம்மா! முதல் தடவையாகப் போகும்போதே, அழுக்கும், பற்றுமாகப் பாத்திரங்களைக் கொண்டுபோகக் கூடாது! போகும்போது, இந்தப் பேப்பர்த்தட்டுகளை, அந்தப் புதர் ஓரமாய்ப் போட்டுவிட்டுப் போ!'' என்று அனுப்பினாள்.

அவள் நீரில் பாத்திரங்களை அலசத் தொடங்கியதும், ''சொல்லுங்கள், ஆன்ட்டி! உங்கள் மகளை அதிகம் வருத்திவிட்டேனா?'' என்று கேட்டான் குணசீலன்.

லேசாக முறுவலித்துவிட்டு, ''வருத்தப்படுத்தியதாகச் சொல்ல முடியாது. ஆனால், அவசரப்படுகிறாய் என்று தோன்றியது! முதலில், அவள் கொஞ்சம் மீண்டு வரட்டும்...'' என்றாள் ரேவதி.

''அதற்காகத்தான் ஆன்ட்டி! இனிமேல், இங்கே அவள் தனியாக இருக்கப் போகிறாள். சும்மா, அபூர்வன் ஜபம் பண்ணத் தொடங்கினாள் என்று வையுங்கள்! அப்புறம், அவளைத் திருத்தவே முடியாது! பெரிய மீராவாகத் தன்னை எண்ணிக் கொண்டு விடுவாள்! அதற்காகத்தான்... கொஞ்சம் வேறு விஷயங்களையும் நினைக்க வைப்பதற்காகத்தான் இப்படிப் பேசினேன். இந்தப் பேச்சு மறக்க முடியாதல்லவா? பேச்சு ஞாபகம்

வரும்போது, நம் நினைவும் வரும் அல்லவா!'' என்று விளக்கினான், அவன்.

''வரட்டும்!'' என்றாள் ரேவதி. ஆசீர்வதிப்பது போல சிரித்துவிட்டு, ''உங்களையும் சேர்த்துதான் சொன்னேன் ஆன்ட்டி!'' என்று ''மயூரிக்கு உதவி செய்யப் போகிறேன்!'' என்று, அவளிடம் சென்றான் குணசீலன்.

அங்கே அவன் வயல்வெளியைக் காட்டி மயூரியிடம் ஏதோ சொல்வதையும், மயூரி சிரிப்பதையும், இருவருமாக, வாய்க்கால் நீரினூடே சற்றுதூரம் நடந்துவிட்டுத் திரும்புவதையும் ரேவதி, திருப்தியுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மயூரியும் ரேவதியும் எதிர்பார்த்தவிதமாய்ச் சற்று குண்டாய் அருகிவிட்ட நரைமுடியுடன் இல்லாமல், தன் அறுபது வயதுக்குக் குமுதினி சற்று இளமையாகவே தெரிந்தார்.

தலைமுடி நரைத்திருந்தது. ஆனால் வெண்பஞ்சுக் குவியல்போல அல்லாமல், 'பெப்பர் அன்ட் சால்ட்' என்பார்களே, அதுபோல அரைகுறையாக நரைத்த கூந்தல். அதை அலட்சியமாகக் கோடாலி முடி போட்டிருந்த விதம் அவருக்குப் பொருத்தமாகவே இருந்தது.

பொருத்தமாயிருப்பது தெரிந்துதான் இதே கூந்தல் அலங்காரத்தையே கையாள்வதாகப் பிறகு ஒரு தரம், குமுதினி, மயூரியிடம் சொன்னார்.

அழகுபார்த்து என்பதைவிட, வசதிபார்த்து, வீட்டுச் சாமான்களை வைத்திருந்தார்.



''இது பழைய கால வீடும்மா! முற்றம், சுற்றுக்கட்டுத் தாழ்வாரம், தாழ்வாரத்தை ஒட்டி அறைகள் என்று எல்லாம் பெரிய அளவு அறைகள். எனக்கு எழுத்து வேலைக்கு ஓர் அறை! படுத்து உறங்க ஓர் அறை, உட்கார்ந்து டி.வி. பார்க்கத் தாழ்வாரம்! தாழ்வாரத்தின் ஒரு மூலையில் சமையல் அறை. படுக்கை அறையை ஒட்டி எனக்கு ஒரு குளியல் அறை கட்டினேன். அதை அடுத்து உனக்கும் அதேபோலப் படுக்கை அறையும், குளியல் அறையும் ஏற்பாடு செய்துவிடுகிறேன்...'' என்று குமுதினி கூறவும் மயூரிக்கு வியப்பாய் இருந்தது.

வேலைக்கு வருகிறவளுக்காகக் குளியல் அறை கட்டிக் கொடுப்பார்களா?

''என்னால் வீண் செலவு!'' என்றாள் தயக்கத்துடன்.

''எனக்கென்ன செலவு! எல்லாம்...'' என்றவருக்கு இருமல் வந்துவிட, ''புத்தக நிறுவனம் கொடுக்கிறது! பெரியம்மாவுக்கு உடன்தங்க ஓர் உதவி ஆளுக்கும் சேர்த்து வசதிகள் செய்து கொடுக்கிறார்கள்!'' என்று வாக்கியத்தையும், விஷயத்தையும் சொல்லிமுடித்தான் அவன்.

ஒரே ஒருநாள் தங்கியிருந்துவிட்டு, ரேவதியும் குணசீலனும் கிளம்பியபோது, கூடப்போய்க் காரில் ஏறிக்கொள்ள வேண்டும் போல, மயூரியின் மனம் துடித்தது.

ஆனால், சென்னைச் சூழ்நிலை. அடுப்பு நெருப்பாயிற்றே!

கண்ணீர் விட்டால், குணசீலன் அதற்கு ஏதாவது 'சொட்டு' சொல்வானோ என்ற பயத்தில் அதை அடக்கிக் கொண்டு, உள்ளடக்கிய நீரில் விழிகள் பளபளக்க, விடைகொடுத்தாள் மயூரி.

# 11

குமுதினி வீட்டு வாழ்க்கை, மயூரிக்கு மெல்ல மெல்லப் பிடித்துப் போயிற்று!

முதலில் அங்கிருந்த அமைதி. திருச்சியிலிருந்து பதினைந்து கிலோ மீட்டர் தூரத்தில் இருந்த அந்த ஊருக்கு, இன்னமும், மாநகரத்தின் பரபரப்பு வந்து சேரவில்லை! ஆற்றுப்பாசனம்! குமுதினியின் வீட்டிலிருந்து, சற்றுதூரம் நடந்து சென்றால், பெரிய கால்வாய் ஒன்றில் எப்போதும் நீர் ஓடுவதைக் காணலாம். காலத்திற்குத் தக்கபடி, அதிகம், குறைவு என்று இருக்குமே தவிர, நீர் எப்போதும் இருந்தது. தண்ணீர் இருந்தால் சூழலும் பசுமையாகத்தானே இருக்கும்?

வரும் வழியில் குணசீலன் காட்டிய இயற்கைஎழில் இங்கே எப்போதும் இருந்தது.

காலையில் எழுந்தால், இந்தமரம் செடிகளூடே சற்றுதூரம் நடப்பது குமுதினியின் வழக்கம். ''நீயும்



நடம்மா! உடம்புக்கு நல்லது!'' என்று அவர்கூற, மயூரியும் மகிழ்ச்சியோடு இணைந்து கொண்டாள்.

செல்லும்போதே, 'இது அந்த மூலிகை; இது கண்ணுக்கு நல்லது! இந்த முடக்கத்தான் செடி வாதத்தை அடியோடு எடுத்துவிடும்; குட்டி சூரியகாந்திப்பூ மாதிரி பூத்திருக்கிறதே, இந்தச் செடியின் இலையைச் சாறு எடுத்து காயம்பட்ட இடத்தில் தடவினால், உடனே புண் ஆறிவிடும். காயம்பட்ட தழும்புகூட இராது...' இப்படிச் சொல்லிக் கொண்டே வருவார்.

ஆங்கிலப் புத்தகம் எழுதுகிறவர், மூலிகை பற்றி இவ்வளவு அறிந்திருக்கிறாரே, என்ற வியப்பு மயூரிக்கு! ஒருநாள், கேட்டபோது, சக ஆசிரியை - தாவர இயல் அவரது பாடம் - பயிற்றுவித்தது, என்றார் பெருமையுடன்!

''குணா தவிர உங்கள் உறவு...'' என்று ஒருநாள் மயூரி வினவியபோது, அவர் தன் கதையைச் சொன்னார். திருமணம் ஆகி, வெகுவிரைவிலேயே, அவருடைய கணவர் - குணசீலனின் பெரியப்பா மறைந்துவிட்டாராம். தாயற்ற குமுதினிக்குப் பிறந்த வீடு அவ்வளவாகச் சரி கிடையாது!

அங்கே செல்லவேண்டாம் என்று, குணசீலனுடைய பெற்றோர் குமுதினியை அவர்களுடனேயே இருக்கும்படி ஏற்பாடு செய்தார்களாம். அப்போது அவர்கள் செய்த நல்ல காரியம், குமுதினியை மேலே படிக்க வைத்ததாம்.

இந்த நிலையில்தான் சிவசங்கரனுடைய மனைவி கருவுற்றது! குழந்தையின் வரவை எல்லோருமே ஆவலாக எதிர்பார்த்தனர். குழந்தை நல்லபடியாகத்தான் பிறந்தது. ஆனால்...

தொடர்ந்து, கூடவே இருக்கும்படி, சிவசங்கரன் கேட்கத்தான் செய்தார். ஆனால், ஊர்வாயை எண்ணிக் குமுதினிக்குத்தான் அச்சம். அத்தோடு, குணசீலனுடைய தாய் வயிற்றுப் பாட்டியும், பேரனைப் பார்த்துக் கொள்ள என்று இங்கே வந்து சேர்ந்தார்கள்.

அந்தச் சமயத்தில் குமுதினிக்கு ஆசிரியையாக வேலை கிடைத்தது. அதிலும், வெளியூரில் வேலை கிடைத்தது ஓர் அதிருஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்! அப்படியே ஒதுங்கிவிட்டார்.

முதலில் இரண்டு பள்ளிகளில் வேலை மாறினார். ஆனால், கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளாக - ஓய்வு பெறும் வரை அதே பெண்கள் பள்ளிதான்! வெறும் ஆசிரியையாகச் சேர்ந்து, 'டிப்பார்ட்மென்டு'க்குத் தலைமை பெற்று, உதவித்தலைமை ஆசிரியை, தலைமை ஆசிரியை என்று வளர்ந்து, தலைமை ஆசிரியை ஆகவே எட்டு ஆண்டுகள் இருந்துவிட்டார்!

ஒருநாள், காலை உலாவல் முடிந்து திரும்பி வரும்போது, குமுதினி, தன் கதையைச் சொல்லிமுடித்தார்.

சற்றுநேரம் பேசாதிருந்துவிட்டு, ''குணசீலன்?'' என்று மயூரி கேட்டாள்.



''ஏன்? குணாவுக்கு என்ன?''

''குணா எப்படி வளர்ந்தார்? என்று கேட்டேன் ஆன்ட்டி!''

''ஓ! அதைக் கேட்கிறாயா? அதுவும் சரிதான். இந்தக் கிழவியின் கதையில் உனக்கு எப்படி சுவாரசியம் வரும்! நான் பார், உனக்கு வேண்டியதைச் சொல்லாமல்...''

''அய்யோ! அப்படியில்லை ஆன்ட்டி! அவர் அம்மா முதலிலேயே இறந்துவிட்டதாகச் சொன்னீர்களே, அம்மா இல்லாமலே எப்படி வளர்ந்தாரோ என்று தோன்றியது. அவர் பாட்டி கூடவந்து இருந்ததாகச் சொன்னீர்கள், இல்லை?''

''ஆமாம்மா! குணாவுக்கு ஐந்து வயது ஆகும்வரை கூடவே இருந்தார்கள்! பிறகு அப்பாவும் பிள்ளையும் தான். பள்ளிநாட்களில், பள்ளி விடுதியில் இருப்பான். லீவுக்குச் சிலசமயம் என் வீட்டுக்கு வருவான்!... குணா அம்மா ரொம்ப ஒட்டுதலாக இருப்பாள். இவனுக்கும் அந்தக்குணம் உண்டு. முடிந்தவரை, அவ்வப்போது வந்து என்னைப் பார்த்துவிட்டுப் போவான். பெரியப்பாவுடைய மனைவிதான், ரத்த சம்பந்தம் இல்லைதானே, என்று அவன் என்னை ஒதுக்கிவிடவில்லை! எனக்கும், உறவென்று வேறு யார்? நாலில், எட்டில் அவன் வந்து போவது நன்றாக இருக்கும்!... உன் அம்மா நன்றாகச் சமைப்பார்களாமே! நல்ல நல்ல பலகாரங்கள் எல்லாம் அவனுக்குச் செய்து கொடுப்பாளாமே! 'மயூரியுடைய

அம்மா' என்று அடிக்கடி பேசுவான். உன்னைப் பற்றிக் கூடச் சொல்லுவான்..."

ஏனோ மயூரியின் இதயம் வேகமாகத் துடித்தது. சமாளித்துக் கொண்டு, "எ...என்ன சொல்லுவார், ஆன்ட்டி?" என்று அவள் கேட்குமுன், குமுதினியின் கவனம் வேறுபுறம் சென்றுவிட்டது. "அந்தச் சீச்சீ இந்தப் பழம் புளிக்கும் கதைக்கு ஒரு முடிவு சொன்னாயே, மயூரி. அந்த நரி, ஒரு ஏணி எடுத்து வந்து பழத்தைப் பறித்ததாக. அந்த முடிவு நன்றாய் இருக்கிறது. முயற்சியைத் தளரவிடக்கூடாது என்று நல்ல படிப்பினை தருகிறது. ஆனால், தலைப்பை மாற்ற வேண்டும். வெறுமனே திராட்சையும் நரியும் என்று போட்டுவிடலாமா...".

குணசீலன் தன்னைப்பற்றி, அவனுடைய பெரியன்னையிடம் என்ன சொன்னான் என்று அவளுக்குத் தெரியாமலே போயிற்று. ஏனோ, இவளால் மீண்டும் அந்தப் பேச்சை எடுத்துக் குமுதினியிடம் கேட்கவும் முடியவில்லை. அந்த அம்மாளும் தானாக அவளிடம் சொல்லவும் இல்லை.

குமுதினியின் உணவு எளிமையானது. காலையிலும் மாலையிலும், கிராமத்துப் பகுதியில் இருந்து இரு பெண்கள் வருவார்கள். முத்து, செல்வி என்று பெயர். முன்தினமே குமுதினி சொல்லியனுப்பும் காய்கறிகளோடு வந்து சமையல் செய்து, சுற்றுவேலை முடித்துவிட்டுப் போவார்கள்.



பேச்சும் சிரிப்புமாக அவர்கள் இருவரும் வேலை செய்வதைப் பார்க்கும்போது, தானும் அதுபோலச் செய்ய வேண்டும் என்று மயூரிக்கு ஆசைவரும்.

அம்மியில் வரட்டுவரட்டு என்று மிளகாய் அரைப்பதைப் பார்த்துத் தானும் ஒருநாள் அரைத்துவிட்டு, நாள்முழுவதும் கை காந்துகிறதென்று தேங்காய் எண்ணெய் தடவிக்கொண்டு அலைந்தாள். பாதி மசாலா தரையோடு போனதைப்பார்த்து, எல்லோருக்குமே சிரிப்பு வந்தது.

கிணற்றில் நீர் சேந்தியதும் அப்படித்தான்.

சம்பவங்களின் புதுமையில், சங்கடங்கள் மறந்து போய்விட, சந்தோஷம் மட்டுமே நினைவிருந்தது.

புத்தகவேலை என்று, மயூரி செய்வதற்கு அதிகம் இல்லை. கூடக் கொஞ்சம் முயன்றால், குமுதினியே செய்து முடித்து விடக்கூடியதுதான். ஒருவேளை, குறிப்பிட்ட கால வரையறைக்குள் வேலையை முடிக்க வேண்டும் என்று, தன்னை அமர்த்தியிருக்கிறார்களோ என்று கூட மயூரி எண்ணுவாள்.

ஆனால், இதுபற்றியெல்லாம், குமுதினியிடம் தெளிவாகப் பேச முடியாது! ஒவ்வொரு சமயங்களில் வெகு இலகுவாக குமுதினி உரையாடினாலும், சிலசமயங்களில், மயூரியின் குரல் காதில் விழுந்ததாகவே தோன்றாது! வயதாகிவிட்டதாலோ, வேறு எதையாவது தீவிரமாய்ச் சிந்தித்துக் கொண்டு இருப்பதாலும் தன் பேச்சைக் கவனித்திருக்க மாட்டார் என்று மயூரி எண்ணிக் கொள்வாள்.

மூன்று நாட்களுக்கு ஒருமுறை ரேவதியின் கடிதம் வந்தது!

குணசீலனிடமிருந்து, வெளிநாட்டு போஸ்ட் கார்டு ஒன்று மட்டும் கிடைத்தது.

முதலில் அவளைக் கூட்டிவந்துவிட்டு விட்டுப் போய், இரு வாரங்கள் சென்றபின்னரே, குணசீலன் மீண்டும் தன் பெரியன்னையின் இல்லத்துக்கு வந்தான்!

கார் வருவதை ஆவலாகக் கவனித்த மயூரிக்குக் காரிலிருந்து இறங்கியவனைக் கண்டதும், ஓர் உற்சாகம்! ''ஆயிரம், லட்சம், மில்லியன் வெல்கம்!'' என்று அவள் குதூகலிக்கவும், ''பரவாயில்லையே! இப்படி ஒரு வரவேற்பு கிடைக்குமானால், இரண்டு நாளைக்கு ஒரு தரம் வரலாம் போல இருக்கிறதே!'' என்று சிரித்தான் அவன்.

''அப்படியெல்லாம் பண்ணிவிடாதே குணா! அபூர்வமாகக் கிடைக்கும் சரக்குக்குத்தான் மதிப்பு அதிகம். அதுவே, எப்போதும் கிடைத்தால் சலித்துவிடும்!'' என்றார் குமுதினி.

''குணாவின் வருகைக்கு எங்கள் வீட்டில் எப்போதும் மதிப்பு அதிகம்தான், ஆன்ட்டி! வேண்டுமானால், குணாவையே கேட்டுப் பாருங்கள்!'' என்றாள் மயூரி.

''அப்படியா?'' என்று சற்று ஐயத்துடன் வினவினார் குமுதினி! ''பிறகு ஏன்...'' என்று தொடங்கிய பெரியன்னையின் பேச்சில் இடைபுகுந்து, ''வீட்டுக்குள் போய் பேசுவோமே, பெரியம்மா! மயூரி, இந்த மூட்டை உன்



அம்மா அனுப்பியது! முறுக்கு, அதிரசம், மைசூர்ப் பாகு... நொறுக்குத்தீனி இல்லாமல் மகள் மெலிந்துவிடுவாளாம்! ஆளைப் பார்த்தால்... பத்து நாளைக்குள் இப்படி என்றால், ஒரு நாலுமாதம் தாங்குமா? அதற்கு மேல் என்றால், உன் வீட்டு வாசல் கதவைப் பெரிதாக்கினால்தான் உன்னால் உள்ளே நுழைய முடியும்!'' என்று கலகலத்தபடி பெட்டி, கூடைகளை எடுத்துக் கொடுத்தான்.

முதல் வாய்ப்பில், உள்ளே ஓடிச்சென்று, அங்கிருந்த பழைய கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்ட மயூரிக்கு ஆச்சரியமாகத் தான் இருந்தது.

மனதில் உள்ளூர ஒரு வருத்தம் நிலைத்து நின்றது! இரவின், தனிமையில் கண்ணீர் பெருக்காமல் உறங்கியது இல்லை! அப்படியும், முகத்தில் இந்தப் பளபளப்பும் செழுமையும் எப்படி வந்தது?

ஒரு சில நாட்களுக்கு முன்புகூடக் கண்ணாடியில் முகத்தைப் பார்க்கப் பிடிக்காமல் திரும்பிச் சென்றாளே! இப்போது இந்தப் பூரிப்பு ஏன்? குணாவின் வருகைக்காகவா?

இருக்கும்! அம்மா அப்பா தம்பியைப் பற்றி சேதி நேரடியாகக் கிடைக்கும் அல்லவா? அம்மாவின் கடிதங்களில் அவளை வருத்தக்கூடிய செய்திகள், வடிகட்டப்பட்டு அவளுக்கு உவப்பானவை மட்டும்தான் இருக்கின்றன!

ஒருவேளை... அபூர்வனைப் பற்றி விவரம் ஏதாவது குணா சொல்லக்கூடுமோ என்கிற எதிர்பார்ப்பாகக் கூட இருக்கலாம்!

''என்ன? அல்லும்பகலும், அனவரதமும் சுயதரிசனம்தானா? டி.வி. கீவி என்று மற்ற முகங்களையும் கொஞ்சம் பார்ப்பது? ஒருவேளை தப்பித்தவறி, அதில் என் முக விலாசத்தைப் பார்த்து விட நேருமோ என்கிற பயத்தில் டி.வி 'ஆன்' பண்ணுவதே இல்லையா? என் முகம் என்ன அவ்வளவு பயங்கரமாகவா இருக்கிறது?''

''அச்ச... என்னையும் பேச விடுகிறீர்களா, குணா! பொதுவாக இங்கே நாங்கள் டி.வி. வைப்பது இல்லை!''

''அதுதான் ஏன் என்று கேட்கிறேன்!''

''செல்வியும், முத்துவும் டிவியை விட்டு நகர மாட்டார்கள்!...''

''நினைத்தேன்! என் முக வசீகரத்தைப் பார்த்தால், அப்புறம் அதை விட்டு நகர்ந்து போக யாரால் முடியும்? அதுவும் பெண்கள்?''

''மகாபாரதத்தில், தற்பெருமை பேசுவது, தற்கொலைக்குச் சமம் என்று வியாசர் சொல்லுகிறார்.''

''அப்படியா? அப்படி அவர் சொல்லி, நான் கேட்டதில்லை! அப்படியே அவர் சொல்லியிருந்தாலும், தற்பெருமையைத் தானே, சொல்லுகிறார்! தன்னடக்கத்தோடு நான் கூறும் உண்மையான வாக்குமூலத்தை அல்லவே!''



சிரிப்பை அடக்கிக்கொண்டு, ''அதை நான் சொல்ல வேண்டும்!'' என்றாள் மயூரி.

''அதெப்படி முடியும்? என்னைப் பற்றி நான்தானே சொல்ல முடியும்?'' என்றான் குணசீலன்.

''ம்கூம்! அப்படியா விஷயம்? சற்றுமுன் என்னைப் பற்றிச் சொன்னீர்களே! அது எப்படியாம்'' என்று மடக்கினாள் மயூரி.

''உன்னைப் பற்றி எனக்குத் தெரிந்ததால் சொன்னேன்! என்னைப் பற்றி உனக்குத் தெரியாதே!''

''எல்லாம் தெரியும்?''

''என்ன தெரியும்? சொல்லு! நீ சிரிக்கும் போது உன் உதட்டோரம் எத்தனை மில்லி மீட்டர் தள்ளிக் குழிவிழும் என்று எனக்குத் தெரியும்! உனக்கு என்னைப் பற்றி என்ன தெரியும்? பாலர் பாடம் நிலையில் நிற்பாய்!'' என்றான் அவன் ஏளனமாக.

''ஓகோ! இப்படியெல்லாம் விதண்டாவாதம் செய்து செய்துதான், டிவி பேட்டி எடுப்பதில் பெரிய ஆள் ஆனீர்கள் என்பது இப்போதல்லவா தெரிகிறது!'' என்று ஒரு போடு போட்டுவிட்டு, ''ஆன்ட்டி தனியாக வேலை செய்து கொண்டிருப்பார்கள்! போகிறேன்!'' என்று ஓடி விட்டாள் அவள்.

ரேவதி, மகேந்திரன், லீவுக்கு வந்திருக்கும் சுந்தர் வேலைக்காரப் பெண் கப்பு என்கிற கற்பகம்... என்று எல்லோரைப் பற்றிய விவரங்களையும் குணசீலன் மயூரிக்கு விரிவாக எடுத்துச் சொன்னான்!

ஆனால், அபூர்வனைப் பற்றிய செய்திக்காக ஆவ லும் பயமுமாகக் காதைத் நீட்டிக் கொண்டு காத்திருந்த மயூரிக்குக் கிடைத்தது ஏமாற்றம் தான். வேண்டும் என்று விட்டானோ, அல்லது, அபூர்வனை, அவன் பெரிதாக நினைக்கவில்லையோ, அந்த ஒருவனையும் அவன் சம்பந்தப்பட்டவர்களையும் குணசீலன், மறந்தும் குறிப் பிட்டானில்லை!

பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டுக் கடைசி யாக, குமுதினி புத்தக வேலையில் குறிப்பெழுதப் போவதாகச் சென்றுவிட, இளையவர்கள் இருவரும் வாய்க்கால் கரை ஓரமாகக் காலாற நடந்து கொண்டிருக் கையில், மயூரி கேட்டாள்! ''அபூர்வனைப் பற்றி ஒன் றுமே சொல்லவில்லையே, குணா?'' என்று.

கணநேர மவுனத்தின்பின், பதிலாகக் குணசீலனிட மிருந்து, ஒரு கேள்வி வந்தது. ''அவனைப் பற்றி என்ன சொல்ல வேண்டும்?''

குணசீலனுக்குக் கோபம் இருப்பது நியாயம்தான். அத்தனை பேருக்குமே அபூர்வனிடம் ஆத்திரம் இருப் பது மிகவும் நியாயமேதான். ஆனால், அதற்காக அபூர்வ னைப்பற்றி ஒன்றுமே தெரியாமல் - தெரிந்துகொள்ள வாய்ப்பிருக்கும்போதும் தெரிந்து கொள்ளாமல், அவ ளால் எப்படிச் சும்மா இருக்க முடியும்?

''வந்து... அவர் எப்படி இருக்கிறார் என்று...''

''அவன் எப்படி இருந்தால் உனக்கு மகிழ்ச்சி?'' என்று கன்னெனக் கேட்டான் அவன். ''அவன் சௌம்யா



வோடு சந்தோ...ஷமாக இருக்கிறான் என்றால், அது உனக்கு மகிழ்ச்சி தராது! இல்லை, அவனுக்கும் அவளுக் கும் ஒத்துப்போகவில்லை! எப்போதும் வீட்டில் அதிர் வெடி வெடிக்கிறார்கள் என்றால், அது கொஞ்சம் பிடிக் குமோ?''

'அபூர்வன் கஷ்டப்பட்டால் எனக்குப் பிடிக்குமா? என்னைப் பற்றி என்ன நினைத்தீர்கள், குணா?'' என்று சற்றுக் கோபமாகக் கேட்டாள் அவள்.

''என்ன நினைக்க முடியும்? பிய்ந்த பழம் செருப் பைப் போலத் தூக்கி எறிந்துவிட்டுப் போனவனைப் பற்றி இன்னமும் நினைத்து மருகிக் கொண்டிருக்கிற முட்டாள் என்றுதான்! வேறென்ன?'' என்றான் அவன் உதாசீனக் குரலில்.

''ஒருவர் எப்படி இருக்கிறார் என்று கேட்டால், அவரை நினைத்து உருகுவதாக அர்த்தமா?'' என்று, பதிலுக்குச் சீறினாள் மயூரி.

அவன் தோளைக் குலுக்கிவிட்டு, வீடுநோக்கி நடக் கத் தொடங்கினான்.

உடன்நடந்தபடி, ''தயவுபண்ணிக் கோபப்படாதீர் கள், குணா! கொஞ்சம் யோசியுங்கள்! என்னால் அபூர் வனை எப்படி அடியோடு மறக்க முடியும்?'' என்று மெலிந்த குரலில் கேட்டாள் மயூரி.

மீண்டும் ஒரு தோள் குலுக்கல்தான். அவளுக்குப் பதிலாகக் கிடைத்தது.

சற்றுநேரம் மவுனத்தில் கழியவும், சட்டெனக் கைநீட்டி குணசீலனின் கையைப் பற்றி நிறுத்தி, "என் மேல் உங்களுக்குக் கோபமா, குணா?" என்று வருத்தத்துடன் வினவினாள்.

ஆம், இல்லை, என்று எதுவும் கூறாமல், "உன்மேல் கோபப்பட்டு என்ன பிரயோசனம்?" என்றான் அவன்.

"பின்னே பேசவே இல்லையே!"

"நான் வேறு யோசித்துக் கொண்டிருந்தேன். அங்கே ஒரு தீவிரவாதி. சவூதி 'பின்லேடன்' இல்லை? அந்த ஆள்மாதிரி ஒருவன். அவனைப் பேட்டி எடுக்கப் போகிறாயா என்று என்னைக் கேட்கிறார்கள்! போகலாமா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டு இருக்கிறேன்!" என்றான் அவன்.

"பத்திரிகைக்காரர்களுக்கு என்று சில பாதுகாப்பு ஏற்பாடுகள் உண்டல்லவா?"

"உண்டுதான்! ஆனால், அதை அந்தத் தீவிரவாதியும் மதித்து நடந்தால்தானே? தூதரகங்களுக்கு என்று தனியான பாதுகாப்பு விதிகள் உண்டுதான். ஆனால் மூன்று இடங்களில் குண்டு வைக்கவில்லை?"

அவன் கையை இறுகப்பற்றி, "நீங்கள் போகாதீர்கள், குணா!" என்றாள் மயூரி, குரல்நடுங்க!

"யோசிக்க, அவகாசம் கேட்கப்போகிறேன்!" என்றான் குணசீலன்.



# 12

மேலும் இரண்டுமூன்று தரம் குணசீலன் வந்த போது, மயூரி, அபூர்வனைப் பற்றி எதுவும் கேட்கவில்லை!

கேட்பானேன்? குணாவிடம் குட்டுவாங்குவானேன்? இருக்கும் சந்தோஷத்தையும் கெடுத்துக் கொள்வானேன்?

அவனுக்குத் தெரியவேண்டிய விஷயம் ஏதாவது இருந்தால், அதை அவனே சொல்லுவான்!

மற்றபடி, அனாவசியமாய் வாய்கொடுத்து, வீண் வம்பை, விலைக்கு வாங்க வேண்டாம்.

இப்படியெல்லாம் யோசித்தே, அபூர்வன் பற்றிய பேச்சை, மயூரியே தவிர்த்துவிட்டாள்.

இடையில் ஒருதரம் ரேவதியும், மகேந்திரனும் மகளைப் பார்க்க வந்தார்கள்.

விருந்துபசாரம் என்று குமுதினியைச் சிரமப்படவைக்கக்கூடாது என்று எண்ணி, மயூரிக்குத் திருச்சியில் சில துணிமணிகள் வாங்கிவிட்டு, அப்படியே மலைக்கோட்டை, ஸ்ரீரங்கம், திருவானைக்கோவில் என்று கோயில்களை எல்லாம் பார்த்துவிட்டு வருவதாகக்கூறி, அவளை அழைத்துச் சென்றார்கள். சென்று இரண்டு

நாட்கள் ஹோட்டலில் தங்கியிருந்து விட்டு மீண்டும் கூட்டிவந்து விட்டுவிட்டுப் போனார்கள்.

தாயிடம் அபூர்வனைப் பற்றிக் கேட்கலாமா என்று மயூரி ஒருதரம் நினைத்தாள். ஆனால், தந்தையும் தாயும் இப்போது பேசிக் கொள்ளும் பாணி, பழகும்விதம் எல்லாம் பெருமகிழ்ச்சியைத் தரவே, அந்த இதமான சூழ்நிலையைக் கெடுத்துக் கொள்ள மனமற்றுச் சும்மா இருந்துவிட்டாள்.

அம்மாவுடன் தனியாக உரையாட முடிந்தால், கேட்டுக் கொள்ளலாம் என்று இருந்தவள், அப்படிக் கிடைத்த சந்தர்ப்பத்தில், சுந்தரின் குரல் மாறியது, கற்பகத்துக்குத் திருமணம் ஆனது என்று மற்ற பேச்சினிடையே இதை மறந்தே போனாள்.

அடுத்த இரு தடவைகள், குணசீலன் வந்தபோது தங்கியிருந்த நேரம் மிகக்குறைவு! 'ஃப்ளையிங் விசிட்' என்பார்களே! அதுபோல, வந்து அரைமணி நேரம் மட்டுமே இருந்துவிட்டு, 'சிங்கப்பூர் போகிறேன்' 'சிட்னி போகிறேன்' என்று பறந்தான்.

இரண்டாவது தடவை அதேபோலச் செய்யவும், ''இங்கே வந்தேன் என்று பேர் பண்ணுவதற்காக வந்தீர்களா? அப்படி ஒன்றும் அவசியம் இல்லை!'' என்று மயூரி எரிச்சல்பட்டாள்.

மறுமுறை வரும்போது கூடுதல் நாட்கள் தங்குவதாக வாக்களித்துச் சென்ற குணசீலன், மெய்யாகவே, அடுத்தமுறை வந்தபோது, மூன்று முழுநாட்கள் அங்கே தங்கினான்.



அவனோடு பேசுவதும், மூவருமாக அல்லது அவர்கள் இருவருமாகச் சீட்டு, ஸ்க்ராபிள் என்று ஏதாவது விளையாடுவதும், மரங்களூடே நடப்பதுமாக இரண்டு நாட்கள் இறக்கை கட்டிப் பறந்தன.

மூன்றாம் நாள் மாலையில், டீயும் ரேவதி அனுப்பிய ரிப்பன் பக்கோடாவுமாக உட்கார்ந்திருந்தபோது, திடுமெனக் குமுதினி கேட்டார்! ''குணா, நீ எப்போது எனக்குக் கல்யாணச் சாப்பாடு போடப் போகிறாய்?''

திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள் மயூரி. ''குணாவுக்குக் கல்யாணமா?''

அவள் அதிர்ந்து போய்ப் பார்த்தபோது, குணசீலன், தாடையைத் தடவிக்கொண்டு இருந்தான்.

மயூரியின் பார்வையைச் சந்தித்ததும், கண்சிமிட்டிச் சிரித்துவிட்டு, ''நான் மட்டும் திருமணம் செய்வது என்றால் எப்போதோ செய்திருக்கலாம், பெரியம்மா! ஆனால், திருமணம் பண்ணிக் கொள்ள, ஒரு பெண்ணும் வேண்டுமாமே!'' என்றான் சோகமாக.

''குணா!'' என்று குமுதினி அதட்டினார்.

''பெண் ரெடியாகட்டும் பெரியம்மா! உடனே பண்ணிக் கொள்கிறேன்!'' என்றான் அவன்.

''பெண்... ரெடியாக வேண்டுமா? ரொம்பவும் கதை விடாதே, பையா? ஏதாவது சொல்லி, இங்கே சமாளித்துவிட்டு, அந்த ரோசாலியா கோசாலியா அவள் மாதிரி ஏதாவது அவதாரத்தைக் கூட்டிவந்து விடாதேப்பா!'' என்று எச்சரித்தாள் குமுதினி.

பரபரப்புற்று, "யார் ஆன்ட்டி, அந்த ரோசாலி?'' என்று மயூரி வினவினாள்.

''அதெல்லாம் யாரும் இல்லை, மயூரி!'' என்றான் குணசீலன், அவசரமாக.

''யாரும் இல்லையா? அப்படியானால், அன்றைக்கு டிவியில், உன் தோளிலேயே தொங்கிக் கொண்டு வந்தாளே, அது யார் குணா?''

மற்ற இருவரும் ஆச்சரியமாகப் பார்க்க, ''நீ வாக்கிங் போயிருந்தாய் மயூரி! சும்மா டிவியைப் போட்டேனா, பிள்ளை நடப்பதைக் காட்டினார்கள். பார்த்துக் கொண்டிருந்தால், அந்தக் கண்ணராவி'' என்று குமுதினி முகத்தைச் சுளித்தார்.

''அங்கெல்லாம் தனி ஆளாக இருந்தால், இப்படித் தான் யாராவதுகூடச் சுற்றுவார்கள்! அதற்கு அர்த்தமே கிடையாது, பெரியம்மா!'' என்று சமாதானம் சொன்னான் அவன்.

"தனி ஆளாய் இருந்தால்தானே? திருமணத்தை முடித்துக் கொண்டு மனைவியோடு போயேன்! யார் வேண்டாம் என்றார்கள்?''

வெறுமனே முறுவலித்தான் அவன்!

''ஆமாம்! எப்போதும் இப்படிச் சிரித்துச் சிரித்தே மழுப்பிவிடு! சொல்லிச் சொல்லி அலுத்துப் போயிற்று. ஒருவேளை... 'இந்தக் காலத்துப் பிள்ளைகள் கிழவிகள் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்க மாட்டார்கள்;



இளவட்டங்கள் பேச்சு மட்டும் தான் அவர்கள் கருத்தை எட்டும் என்று படித்தேன். ஆண்டுக்கணக்காய் நான் சொல்லி ஒரு பயனையும் காணோம்! இப்போது நீ சொல்லும்மா! கேட்கிறானா என்று பார்ப்போம்!'' என்றார் குமுதினி.

''நான் எப்படி ஆன்ட்டி... அவர் திருமண விஷயத்தில் போய் நான் என்ன பேசுவது?''

''நான் இப்போது என்ன அப்படி பெரியதாகச் சொன்னேன்? உன் காதிலுமா இந்தக் கிழவியின் பேச்சு விழவில்லை? இங்கே இருக்கும் அடுத்த இளவட்டம் நீதான்! அதனால்தான் உன்னைச் சொல்லச் சொன்னேன்! சும்மா நூலைக்கட்டி மலையை இழுக்க முயற்சிப்போம்! வந்தால் மலை! இல்லாவிட்டால், நட்டம் ஒரு நூல் தானே? எனக்காக, இந்த ஓர் உதவி நீ செய்யக் கூடாதா?'' என்று அவளை வற்புறுத்தினார் குமுதினி.

கடைசியாக, அவள் சரி என்று ஒத்துக்கொள்ளும் வரை குமுதினி விடவே இல்லை.

'உறவான பெரியவர், உங்கள் வார்த்தையையே இந்த விஷயத்தில் நான் ஏற்கவில்லை? இந்தச் சின்னப் பெண் பேச்சுக்கா மதிப்புக் கொடுக்கப் போகிறேன்? விடுங்கள், பெரியம்மா' என்று இதுபோல ஏதாவது சொல்லிக் குணா, இந்தப் பொறுப்பிலிருந்து தன்னை மீட்பான் என்று மயூரி கெஞ்சுதலாக அவனைப் பார்த்தாள்.

ஆனால், அவன் வெறுமனே ஒரு புன்னகையோடு பொம்மை போல அமர்ந்திருந்தானே தவிர, ஒரு வார்த்தை அவள் சார்பாய்ப் பேசவில்லை.

குணசீலனிடம் எதைச் சொல்லவும், பொதுவாக, மயூரிக்குத் தயக்கம் ஏற்பட்டது கிடையாதுதான்! ஆனாலும், ஏனோ, அவனது திருமணம் பற்றி அவனிடம் பேச - ஒரு பெண்ணை மணந்து கொள் என்று அவனிடம் சொல்ல அவளுக்குப் பிடிக்கவே இல்லை.

இப்போது குமுதினியிடம், ஒத்துக் கொண்டாயிற்று. குணசீலனிடம் என்ன மாதிரி வார்த்தைகளை அமைத்துக் கேட்பது என்று மயூரி யோசிக்க முயன்றாள்.

அவள் வெகுதீவிரமாக யோசித்துக் கொண்டு இருந்த போதே, ''சரிம்மா! இனி நான் என் குறிப்புகளைப் பார்க்கப் போகிறேன். நீங்கள் இருவரும், சற்றுதூரம் காலாற நடந்துவிட்டு வாருங்கள்!'' என்று இளைஞர்கள் இருவரையும் கிளப்பி அனுப்பினாள்.

பின்னோடு, 'கேட்டுவிடு' என்பது போல மயூரிக்குச் சைகையும் செய்தார்.

இவ்வளவுதூரம் பிடித்தமில்லாத ஒரு வேலையை, இதுவரை நான் செய்ததே இல்லை என்ற உள்ளூர நினைத்ததைக் காட்டிக் கொள்ளாமல், குமுதினியிடம் மயூரி தலையாட்டினாள்.

ஒன்றும் பேசாமலே வெகுதூரம் சென்றபின், ''இன்று என்ன பேசா மடந்தை ஆகிவிட்டாயா? அல்லது



மவுன விரதமா?'' என்று கேலியாகக் குணசீலன் கேட்டான்.

அவளது தவிப்பு, அவனுக்குச் சிரிப்பாய் இருக்கிறதாக்கும்?

எரிச்சல் அடங்குமுன், சூட்டோடு சூடாக, ''உங்கள் பெரியம்மா சொன்னதைக் கேட்டீர்கள்தானே? பேசாமல் திருமணம் செய்து கொள்ள வேண்டியதுதானே?'' என்று மயூரி சிடுசிடுத்தாள்.

''எல்லோரும் கல்யாணம் செய்துகொள்; கல்யாணம் செய்துகொள் என்கிறீர்களே தவிர, யாரை என்று சொல்லமாட்டேன் என்கிறீர்களே? பெண் இல்லாமல் திருமணம் செய்வது எப்படி? அந்த ரோசாலியைக் கட்டிக்கொள்ளலாம் என்று பார்த்தால், பெரியம்மா கூடவே கூடாது என்கிறார்கள்! பெண் இல்லாமல், நான் என்னதான் செய்வது, சொல்லு!''

''பெண்ணுக்கென்ன பஞ்சம்? நீங்கள் இப்போது டி.வி, புகழ் வேறு பெற்றுவிட்டீர்கள். தலையசைத்தால் தானாகவந்து வரிசையில் நின்றுவிட்டுப் போகிறார்கள்!''

''அப்படி வரிசையில் வந்து நிற்கிறவர்களில் யாரை வேண்டுமானாலும் மணந்து கொள்ளவா? குணம், குலம் ஒன்றும் பார்க்க வேண்டாமா? அப்படிப் பார்த்து நாம் தேர்ந்தெடுக்கிற பெண் என்னை விரும்ப வேண்டாமா?''

''ஏன்? உங்களை விரும்புவதற்கென்ன? எல்லாம் விரும்புவார்கள்! எல்லோருமே விரும்புவார்கள்!'' என்று அடித்துச் சொன்னாள் அவள்.

''மெய்யாகச் சொல்கிறாயா? அல்லது, என் மனம் கஷ்டப்படக்கூடாது என்று சொல்கிறாயா?'' என்று அவன் ரொம்பவும் சந்தேகப்பட்டான்.

''சத்தியமாய்ச் சொல்கிறேன், குணா! நீங்கள் எந்தப் பெண்ணைத் தேர்ந்தெடுத்தாலும் அவள் உங்களை மனப்பூர்வமாக மணந்து கொள்வாள்!'' என்று குளுரைத்தாள் மயூரி.

''அப்படியானால் நீயே என்னை மணந்து கொள்ளேன்!'' என்று நேரடியாகக் குணசீலன் கேட்டுவிட்டான்.

பிரமிப்புடன் அவனை நோக்கினாள் அவள்! ''என்ன குணா... இது... இது என்ன பேச்சு?'' என்றாள் தடுமாற்றத்துடன்.

''ஏன்? என் பேச்சில் தப்பென்ன? என்னவோ, எனக்காக, எல்லா...ப் பெண்களும் 'க்யூ'வில் நிற்பார்கள் என்றாயே! ஏன்? நீ பெண்களில் சேர்த்தியில்லையா?''

''குணா... அது அப்படியில்லை...''

''எது எப்படி இல்லை? என்னைப் பற்றி அறிந்தவள், நீயே முன் வரவில்லை; வேறு யாருக்கு என்னைப் பிடிக்கப்போகிறது? ஏதோ, சிறு வயதில் இருந்து பழகிய தோஷம், என் முகத்தைப் பார்த்துப் பேசுகிறாய்! மற்றபடி நான் என்ன வெள்ளையாக இருக்கிறேனா, அழகுதான் இருக்கிறதா? பெண்களுக்குக் கண்நிறைந்த கணவன் தானே பிடிக்குமாம்? அந்த வகையில் நான் 'சீரோ' அல்லவா?...''



''திறுத்துங்கள் குணா?'' என்றாள் மயூரி. ''உங்களை எவ்வளவு தன்னம்பிக்கை உள்ளவர் என்று நினைத்தேன்! எல்லாம் மேல்பூச்சு தானா? உள்ளே உங்களுக்கு இவ்வளவு தாழ்வுமனப்பான்மையா? நம்பவே முடியவில்லையே!''

''மெய்யாகவே... எனக்கு... நான் ஒன்றும் குறைந்தவன் இல்லை என்கிறாயா? பத்துக்கு மூன்று தேறும் போல உனக்குத் தோன்றுகிறதா?''

''பத்துக்கு மூன்றா? பத்துக்குப் பத்து; நூறு சதவீதமே நான் கொடுப்பேன்!''

''எப்படி?''

''எப்படி என்றால்?'' நின்று அவனைத் திரும்பிப் பார்த்தாள் மயூரி. ''முதலில் உங்கள் உயரம். நெட்டைக் கொக்கு மாதிரி இல்லாமல், எல்லோரும் சற்று அண்ணாந்தே பார்க்கக்கூடிய உங்கள் உயரமே உங்களுக்குப் பெருமதிப்பை ஈட்டித்தரும்! அதற்கேற்ற உருவம்! அடுத்து, அடர்ந்த சிகை! அறிவைக்காட்டும் அகன்ற நெற்றி, லேசாக ஏறி இறங்கும் கம்பீரமான புருவங்கள்! கூர்விழிகள்! நேர் நாசி! உறுதியான முகவாய்! செதுக்கினாற்போல உதடுகள்! வாவ்! இத்தனை நாள் உங்களை யாரும் கொத்திக் கொண்டு போகாமல் இருந்ததே பேரதிசயம், குணா!'' என்று அடுக்கிக் கொண்டே போனவள், திடுமெனத் திகைத்தாள்.

குணசீலன் இப்பேர்ப்பட்ட ஆணழகன் என்று அவள் நினைத்ததே இல்லையே! ஆண்மையும், கம்பீர

மும்... பழைய கால அரசவம்சத்தில் வந்தவன் போன்ற தோற்றமும்... திகைத்து நின்றவள், குணசீலன் பேசத் தொடங்கவும் சுய உணர்வுக்கு வந்தாள்.

"நீ சொல்வதெல்லாம் மெய்தானா, மயூரி?" என்று அவளையே பார்த்து வினவினான், குணசீலன்.

"சத்தியம், குணா!"

'அப்படியானால்... நீயே என்னை மணந்து கொள்வதுதானே?" என்று, பட்டும்படாதது போன்ற குரலில் அவன் கேட்டான்.

இது கேலியா, நிஜமா?

சற்றுத் திணறிவிட்டு, "நீங்கள் மெய்யாகத்தான் கேட்கிறீர்களா, குணா?" என்று மயூரி கேட்டாள்.

"சத்தியம், மயூ!" என்ற திருப்பிப் படித்தான் அவன். "அறியாத ஒருத்தியை மணந்து எப்போது அவள் உச்சிமுடியைப் பிடித்து உலுக்குவாளோ என்று அஞ்சிக்கொண்டு இருப்பதைவிட, இதுமேலல்லவா? ரேவதி ஆன்ட்டிக்கும் பிடிக்கும். ஆனால், முடிவு நீதானே சொல்ல வேண்டும்!"

பார்வைக்கு அழகன்! பழகுவதற்கு இனியவன்! ஆனால்... ஒரு பெருமூச்சுடன் மயூரி நடையைத் தொடரத் திரும்பினாள்.

"என்ன? சத்தத்தையே காணோம்? மவுனம் சம்மதம் என்கிறார்களே! அதுபோல எடுத்துக் கொள்ளலாமா?



குறையோடு அவனை நோக்கினாள் அவள்! "வேறு ஒருவனை நினைத்திருப்பவளிடம் போய் இப்படியெல்லாம் பேசுகிறீர்களே! உங்களை, என்னவென்று சொல்வது?" என்றாள் வருத்தத்துடன்.

"வேறு பெண்ணை மணந்தவனை நினைத்து உருகுகிறவளைவிட, ஒருபடி உயர்வாகவே சொல்லலாம்!" என்று பட்டெனப் பதில் கொடுத்தான் அவன்.

குணசீலனின் குத்தல் வலித்துவிட, "நான் ஒன்றும்..." என்று தொடங்கிய மயூரி மீண்டும் திகைத்தாள்!

முன்னிலும் அதிகமாக!

குணசீலனின் குத்தலுக்குப் பதிலாக, மயூரியின் வாயில் வரத் தொடங்கியது உண்மை! அப்பட்டமான நிஜம்! ஆனால், இது எப்படி நேர முடியும்?

அபூர்வனை, மயூரி நினைத்துப் பார்த்து எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டனவே! நினைப்பதே நின்றுவிட்டபிறகு, அவனை எண்ணி உருகுவது ஏது?

இனி வாழ்நாள் முழுவதும், அபூர்வனை எண்ணி வடிக்கும் கண்ணீர்தான் தனக்கு நிலையான சொத்து என்று நினைத்திருந்தவளுக்கு இன்றைய நிலை, பெரும் பிரமிப்பை ஏற்படுத்தியது!

குணா கோபப்படுவானோ, என்று அபூர்வனைப் பற்றிப் பேசாமல் இருந்தவள், அதுவே பழக்கமாகி, நினைப்பதையும் நிறுத்தி விட்டாளா?

கண்ணுக்குத் தெரியாத ஒன்று, கருத்தை விட்டுப் போய்விடும் என்பது மெய்தானா? அப்படியானால், மீண்டும் கண்ணில் படத் தொடங்கினால் கருத்திலும் அது புகுந்துவிடுமா?

இந்தக் கேள்விக்குக் காலம்தான் பதில் சொல்ல முடியும்!

''என்ன, மீண்டும் மவுனத்தில் ஆழ்ந்துவிட்டாய்?'' என்று குணசீலன் வினவினான்.

தன் குழப்பத்தை இவனிடம் சொல்லலாமா என்று ஒருகணம் சிந்தித்த மயூரி, உடனேயே மாறாக முடிவெடுத்தாள்.

குணசீலனுக்குச் சும்மாவே, அபூர்வன்மேல் கோபம்! இப்போது இது முழுமையான மெய்யோ, சும்மா சொன்னதோ, மணக்க வேறு கேட்டிருக்கிறான்! இப்போது அந்தப் பேச்சேடுத்தால் சரியான விளக்கம் வரும் என்று எதிர்பார்க்க முடியாது!

குணா, தன் பதிலுக்குக் காத்திருப்பதை உணர்ந்து, ''நான்... யோ... யோசித்துக் கொண்டு இருந்தேன், குணா!'' என்றாள் அவள்.

''ரொம்ப நல்ல காரியம்! அதைக் கொஞ்சம் அடிக்கடி செய்தாய் என்றால் நல்லது. வேலை கொடுக்காமலே இருந்தால் மூளை துருப்பிடித்துப் போய்விடும் பார்!'' என்றான் குணசீலன் புன்னகை மலர.



பழைய குணசீலன் திரும்பிவிட்ட ஆறுதலில், ''ஆமாம் ஆமாம்! அதுசரிதான். உங்கள் சட்டைக்காலரில் பின்புறம் என்னது வைத்தாலும் துருக்கறை போக மாட்டேன் என்கிறது என்று செல்வி சொன்னாள்! அந்தக் கறை எப்படி வந்தது என்பது, இப்போதுதானே புரிகிறது!'' என்றுரைத்து அவள் சிரிக்க, அவனும் உடன் இணைந்து நகைத்தான்.

அதற்குமேல் 'சீரியஸ்' பேச்சு எதையும் குணசீலன் அந்த முறை பேசவில்லை!

மறுநாள், குணசீலன் கிளம்பும்வரை, மயூரிக்கு, உள்ளூர உதைப்புதான். முந்திய நாள் போல ஏதாவது பேசினால் என்ன பதில் சொல்வது என்று உள்ளூர ஒரு படபடப்பு இருந்துகொண்டே இருந்தது!

ஒற்றைவிரலை நீட்டி, அவளது கன்னத்தை நிமிண்டி, ''நல்ல பெண்ணாக இரு!'' என்றது தவிர, அவன் வேறு எதுவும் பேசாமல் போனபோது, ஒருபுறம் அப்பாடி என்று ஆறுதலாக இருந்தபோதும், உள்ளூர ஏதோ ஓர் ஏமாற்றத்தையும் மயூரி உணர்ந்தாள்!

ஏன்?

குணசீலனோடு அவளுக்கு இருந்தது ஒரு நல்ல தோழமை! திருமணம் அது இது என்று மேலே தீவிரமாகப் பேசி அந்த இனிய நட்புணர்வு கெட்டுவிடாமல் குணா காத்தது குறித்து அவளுக்கு மகிழ்ச்சியாகத்தானே இருக்க வேண்டும்?

அதுவும், 'திருமணம்' என்கிற வார்த்தையே கசப்பாக இருக்கும் இந்த நேரத்தில்!

எதிர்பார்ப்பு இல்லாமல் ஏமாற்றம் தோன்றாது! அவளுக்கே தெரியாமல், அவள்மனம் அப்படி எதை எதிர்பார்த்தது?

யோசிக்க வேண்டும்! இதுபற்றி நன்றாகச் சிந்தித்து விடை காணவேண்டும்.

யோசிக்க வேண்டும்; நன்றாகச் சிந்திக்க வேண்டும் என்று முடிவு செய்த மயூரிக்கு, அதற்கான வாய்ப்போ, அவசரமோ கிடைக்கவே இல்லை!

ஏனெனில், குணசீலன் கிளம்பிச் சென்ற சில மணி நேரத்திலேயே அவளுக்குக் 'கூரியரி'ல் ஒரு கடிதம் வந்தது.

அந்தக்கடிதத்தில், "சௌம்யா போய்விட்டாள். பெரும் இக்கட்டில், திக்கற்று நிற்கிறேன்! உதவுவதற்கு உன்னைத்தவிர எனக்கு வேறு நாதி இல்லை! உடனே வா!" என்று அபூர்வன் எழுதியிருந்தான்.

கணமும் தாமதியாமல், மயூரி கிளம்பிவிட்டாள்!

## 13

**மயூரி** கிளம்புவது, குமுதினிக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை!



அதுவும், அபூர்வன் அழைத்தான் என்று கிளம்புவது, அவருக்கு அடியோடு பிடிக்கவில்லை.

ஆனால், இதில் தலையிட்டு எதுவும் சொல்லவும் அவரால் முடியவில்லை.

மயூரியின் விஷயங்கள், அவருக்குப் பெரும்பாலும் தெரியும்தான்! ஆயினும், அதில் தலையிட்டு இப்படி, அப்படி என்று அபிப்பிராயமோ, இதைச் செய், அதைச் செய் என்று ஆலோசனையோ அவர் ஏதும் சொன்னதில்லை!

பொதுவாக, அவரவர் நிலைமை அவரவருக்குத்தான் தெரியும்! இதில் அடுத்தவர் என்ன தலையிடுவது என்று ஒதுங்கிவிடுவதுதான் அவரது இயல்பு!

குணசீலன் மட்டும் இதில் கொஞ்சம் விதிவிலக்கு!

உற்றம், சுற்றம் என்று யாரும் இல்லாத தனி வாழ்வில், அவனாக அவ்வப்போது வந்து, உறவு கொண்டாடி விட்டுப் போவான்! கணவரின் சாயலில் இருந்த அந்தப்பிள்ளை மீது மட்டும் அவருக்கு ஒரு பற்று உண்டு.

அவன் கேட்டான் என்றுதான், மயூரியை உடன் வைத்துக் கொள்ள, அவர் ஒப்பியதும்.

மகனின் மனப்போக்கு புரியத் தொடங்கியதும், மயூரியிடமும் அவருக்கு அக்கனவு ஏற்பட்டது.

ஆனால், அதற்குமேல், அவள் காரியங்களில் மூக்கை நுழைக்க அவர் எண்ணவில்லை.

இப்போது, குணசீலன் இல்லாத நேரத்தில், மயூரி கிளம்புவது அவருக்குப் பிடிக்காத போதும், ஒரேயடியாக அவளைத் தடை செய்யவும் அவரால் முடியவில்லை.

மயூரி, அவரிடம் அனுமதி கேட்கத்தான் செய்தாள். கூரியரில் வந்த கடிதத்தைக் காட்டி, ''இப்படி அழைக்கும் போது போகாமல் இருக்க முடியாது ஆன்ட்டி! என்ன ஆயிற்று என்று போய்ப்பார்த்தாக வேண்டும்! அதனால் லீவு வேண்டும்!'' என்று அவரிடம் பணிபுரிபவளாக விடுமுறை கேட்டாள்.

'போகாதே' என்று சொல்ல முடியாமல், ''திரும்பி வருவாயல்லவா?'' என்று குமுதினி விசாரித்தாள்.

''கட்டாயம்!'' என்றாள் மயூரி. ''எடுத்த வேலை முடியாமல் எப்படித் திரும்புவேன், ஆன்ட்டி? ஆனால், இப்போது என்ன விஷயம், எத்தனை நாட்கள் லீவு தேவைப்படும் என்பதெல்லாம் சொல்ல முடியவில்லை! முடிந்த அளவு விரைவில் திரும்பி வருகிறேன்'' என்று விடைபெற்றுச் சென்றாள்.

''சரி... பரவாயில்லை! அங்கே, உன் அம்மாவைப் பார்த்தமாதிரியும் இருக்கும்!'' என்றாள் குமுதினி.

பெற்றவள் இருக்கும் இடத்துக்குத்தானே போகிறாள் என்று ஓர் ஆறுதல் அவருக்கு!

ஆனால், தொழில் விவகாரங்களை மானேஜரிடம் ஒப்படைத்து விட்டு, ரேவதியும், மகேந்திரனும், ஊர்த்



திருவிழாவுக்குச் சென்றிருப்பதும், அங்கே, சிதிலமடைந்து வரும் பழைய வீட்டைச் செப்பனிட்டு விட்டு இரண்டு வாரம் கழித்துத்தான் திரும்பப் போகிறார்கள் என்பதும், அப்போது மயூரிக்குக்கூடத் தெரியாது. ஊரிலிருந்து ரேவதி, மகளுக்கு விவரம் தெரிவித்து எழுதிய கடிதம், அப்போதுதான் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தது.

ஆனால், சென்னை சென்று விவரம் அறிந்தபோது, பெற்றோரைக் காணமுடியவில்லையே என்கிற ஏக்கம் தவிர, மயூரி அதைப் பெரிதாக எண்ணவும் இல்லை. எண்ணத்தேவையும் இருக்கவில்லை! ஏனெனில், அபூர்வன் வீடும் உறவினர் இல்லம்தானே?

அங்கே, அபூர்வனின் வீடு இருந்த நிலை, வேறு எதையுமே யாரையும் எண்ணவிடவும் இல்லை!

காலில் நீளமாகக் கட்டும், அங்கங்கே உடம்பில் சிராய்ப்புகளும், வீக்கமும், பிளாஸ்திரிகளுமாக, மனோரஞ்சிதம் கட்டிலில் 'அப்பா, அம்மா' என்று முக்கி முனகிக் கொண்டு இருந்தாள்.

அபூர்வனுடைய தந்தை செல்வராஜ், தலைநரைத்து, அரை ஆளாய்க் கையில் கட்டுடன், கழுத்திலிருந்து தொட்டில்கட்டித் தொங்கப் போட்டுக் கொண்டிருந்தார்.

இதெல்லாமே அதிர்ச்சிதரும் விஷயங்கள்தான்!

ஆனால் அபூர்வனின் தோற்றம்தான், மயூரிக்குப் பெரும் அதிர்ச்சியளித்தது.

தான் அழகன் என்பதை அறிந்தவன் அபூர்வன். அதை அடுத்தவரும் அறியும் வண்ணம்தான், அவனது நடை, உடை, பாவனை அனைத்தும் இருக்கும்! வீட்டை விட்டு வெளியே காலடி எடுத்து வைப்பதானால், சலவை செய்து, அயர்ன் பண்ணிய உடைதான். புருவங்கள் ட்ரிம் பண்ணி, நகம் வெட்டுவது எல்லாம் பார்லரில்தான். அவன் வருகிறான் என்றால் ஏதாவது நல்ல 'பர்ஃபூம்' முன்னதாக வந்து கட்டியம் கூறும். தலைமுடி, ஒன்றுகூட இடம் பிசகி இராது!

அப்படிப்பட்டவனே, கலைந்த தலையும், கசங்கிய உடையும், மெலிந்த உடலும், சிவந்த கண்களுமாகத் தோற்றம் அளிக்கவும், மயூரி பதறிப்போனாள்.

சௌம்யா போய்விட்டாள் என்று எழுதியிருந்தானே! ஒருவேளை...

ஆனால், அத்தை, மாமாவுக்கு என்ன ஆயிற்று? ஏதாவது கார் விபத்தில் இவர்களுக்கு அடிபட்டு, சௌம்யா...

மேலே நினைக்கக்கூட அஞ்சியவளாய், ''என்ன ஆயிற்று, அத்தான்?'' என்று மயூரி மெல்லிய குரலில் வினவினாள்.

அதற்குள் அவளது குரல் கேட்டுக் கண்திறந்து பார்த்த மனோரஞ்சிதம், கதறித் தீர்த்துவிட்டாள்.

''என் தங்கமே! என் கண்ணே! வந்தாயாம்மா? இந்தப் பாவிகள் முகத்தில் விழிக்கவும் உனக்கு மனம்



வந்ததே! அய்யோ! உனக்குச் செய்த துரோகம்... அநியாயம்... பாவம் எல்லாம் ஒட்டு மொத்தமாய் வந்து விடிந்திருக்கிறது பார்த்தாயா, கண்ணு...'' என்று ஓங்கி அழுதாள். ''பார் கண்ணு! கால் ஒடிந்து போயிற்று! மண்டை உடைந்து ஒரே ரத்தம்! மாமா கையைப் பார்த்தாயா? என்னைப் பிடிக்க வந்து, அவருக்கும் கை உடைந்துவிட்டது! பாதகி! படுபாவி! உச்சிப்படியிலே இருந்து ஒரே தள்ளு தள்ளிவிட்டு விட்டாளே!...'' என்று புலம்பிக் கண்ணீர் வடித்தாள்.

நினைத்ததுபோல விபத்து அல்ல என்று புரிந்தது. ஆனால் யார் தள்ளியது? ''யார் அத்தை? யார் உங்களைத் தள்ளியது?'' என்று மனோரஞ்சிதத்தின் கரத்தில் அடிபடாத இடத்தை மெல்ல வருடிவிட்டபடி மயூரி கனிவுடன் வினவினாள்.

மனோரஞ்சிதத்தின் முகத்தில் கோபம் கொந்தளித்தது! ''வேறு யார்? அந்தப் பிசாசுதான்! இந்த மடப்பயல் பெண்டாட்டி என்று கொண்டு வந்து வைத்தானே, அந்தக் கடன்காரிதான்! பெண்ணா அவள்? பேய்! ரத்தக்காட்டேரி! அவளையெல்லாம்... அந்தக் காலம்மாதிரிச் சுண்ணாம்புக் காளவாயிலே வைத்து நீற்றவேண்டும்!'' என்றாள் கொதிப்புடன். ''பாவி! என்னை இந்தக்கதி ஆக்கிவிட்டாளே! அவள் நாசமாத்தான் போவாள்!'' என்று சாபமிட்டாள்.

ஆக, சௌம்யாவுக்கு இப்போதைக்கு பெரிதாக ஒன்றும் இல்லை!

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, ''சௌம்யா எங்கே அத்தை?'' என்று மயூரி விசாரித்தாள்.

''எந்தக் குப்பைத் தொட்டியிலே மேய்ந்துகொண்டு இருக்கிறாளோ!'' என்றாள் மனோரஞ்சிதம் உதாசீனமாக! ''விடுதலைக் கடிதாசி எழுதி வைத்துவிட்டு வெளியே போய்விட்டாள்! நான் காளிகா தேவியாம்! இவன் கையால் ஆகாதவனாம்! அது 'கரெக்ட்!' இவன் கையால் ஆகாதவனேதான்! என்னமோ, ஒரு அடங்காப் பிடாரியைக் கட்டிவிட்டான்! சரி, நாலு அறை அறைந்து, அவளை அடக்கிவைக்கத் தெரியவில்லையே! அவள் எழுதின மாதிரி, நீ கையால் ஆகாதவனேதான்!'' என்று பொறுமித் தீர்த்தாள்!

தன்னைச் சொன்னதும் அபூர்வனும் ஆத்திரம் அடைந்தான். ''ஆ..மாம்! அறைபோட்டால் அவள் அடங்கிவிடுவாளாக்கும்! ஒரே ஓர் அறை வைத்தீர்கள்! என்ன கதியாய்க் கிடக்கிறீர்கள்?! நாலு அறை வைத்தால், எமலோகப் பிராப்திதான்! அதென்னமோ, நானாகப் போய் அந்தப் பிடாரியை மணந்துவந்த மாதிரிச் சொல்கிறீர்கள்! டாக்டர்கள் வீட்டில், பணமழை கொட்டுகிறது. ஒரே பெண்! அவளை இங்கே கொண்டு வந்துவிட்டால், அவ்வளவு பணமும் நமக்கு என்று நீங்களும் தானே சொன்னீர்கள்? இப்போது என்னமோ, நானாய்ப் போய் அவளைக் கல்யாணம் செய்தமாதிரிப் பேசுகிறீர்களே!''



தாயும் பிள்ளையும் தங்களை மறந்து ஒருவரை ஒருவர் திட்டிக் கொண்டிருக்கக் கொஞ்சம் சுயநிலையோடு இருந்தவர் செல்வராஜ்தான். ''அச்சச்சா இரண்டு பேருமாய் என்ன உளறிக்கொண்டு இருக்கிறீர்கள்? அதெல்லாம் பழைய கதை! நடந்து முடிந்தது! கனவாக - கெட்ட கனவாக மறக்க வேண்டியது! இப்போதுதான் மயூரி, நம் வீட்டு மகாலட்சுமி வந்துவிட்டாளே! எல்லாம் நன்றாகிவிடும்! அதைப்பற்றிப் பேசுங்கள்!'' என்று மறைமுகமாய், மனைவிக்கும் மகனுக்கும் அறிவுறுத்தினார்.

சட்டெனப் புரிந்துகொண்டு, ''ஆமாம், அபூக்குட்டி! உன் அப்பா சொல்வது சரிதான். ஏதோ, அவளாக, விடுதலைப் பத்திரம் எழுதிவைத்து விட்டுப் போய்விட்டாள்; பீடை ஒழிந்தது! இனிமேல் அந்தச் சனியன் பேச்சு நமக்கு எதற்கு? மய்யூக்கண்ணா, இங்கே என் பக்க...கத்தில், என் கட்டிலிலேயே உட்கார் கண்ணு! உன்னைப் பார்த்து எத்த...தனை காலம் ஆயிற்று! வேலைவேறே செய்கிறாயாமே! அப்படியா? ஒன்றும் வேண்டாம், தங்கம்! ஏதோ செய்த தப்புக்கு, வேண்டிய மட்டும் பட்டுவிட்டேன்! இனிமேல், எனக்கு எல்லாம் நீதான் என் ராஜாத்தி!'' என்ற மனோரஞ்சிதம் பொலபொலவென்று கண்ணீர் உகுத்துவிட்டாள்.

உருகிப்போய், ''ஷ்...என்ன அத்தை இது, சின்னப் பிள்ளைபோல! தைரியமாய் இருங்கள்! இதோ, நான் தான் வந்துவிட்டேனில்லையா? கவலைப்படாதீர்கள்'' என்று தேற்றினாள் மயூரி.

பிறகு, மனோரஞ்சிதத்திற்கு என்ன உணவு, என்ன மருந்து, செல்வராஜுக்கு என்ன சாப்பாடு என்றெல்லாம் விசாரித்தாள்.

அதன்பிறகுதான், அந்தவீட்டில், பலநாட்களாகச் சரிவரச் சமையல் செய்வதே கிடையாது என்பது மயூரிக்குத் தெரியவந்தது.

பொதுவாக, அந்தவீட்டில் எல்லோருமே நல்ல வக்கணையாகச் சாப்பிடுகிறவர்கள்! சமையல்காரியை வறுத்தெடுத்து விடுவாள் மனோரஞ்சிதம். ஆறுமாதம் ஒரே சமையல் ஆள்நின்றால் அதிசயம். அதனாலேயே, தங்கள் வீட்டில் வந்து பிராய்கிறாள் அத்தை என்றுகூட மயூரி எண்ணியது உண்டு. ரேவதியின் சமையல் உலகப் பிரசித்தம்!

முன்பே அப்படி!

இப்போது சௌம்யா அடித்த கூத்தில், ஓர் ஆள், ஒரு வாரம் கூட நிலைக்கவில்லை. கடைசியாக, நகரில் இருந்த அத்தனை வேலை தேடித்தரும் நிறுவனங்களும், 'இனி எங்களால் முடியாது' என்று கைவிரித்து விட்டார்களாம்! சமையல் ஆள் மட்டுமல்ல! எல்லா வேலையாட்களுமே நின்றுவிட்டிருந்தனர்!

"இப்போது எல்லோருமே பாதிப்பட்டினிம்மா!" என்று செல்வராஜ் வருத்தப்பட்டார்.

"ஏன் மாமா, இப்போதுதான் நல்லநல்ல ஓட்டல்கள் இருக்கின்றனவே! ஓ...கோ அத்தைக்குப் பத்தியமா, மாமா?" என்று மயூரி வினவினாள்.



"அம்மாவுக்குச் சும்மாவே ஓட்டல் உணவு பிடிக்காது! அத்தோடு மயூரி, அடிக்கடி ஓட்டலில் சாப்பிட எங்களில் யாருக்குமே பிடிக்கவில்லை! நான் கூட மெலிந்துவிட்டேன் பார்!" என்று அபூர்வன் வருத்தப்பட்டபோது, மயூரிக்குக் கண்களில் நீர் துளிர்த்தது.

"மய்பூக்கண்ணு! நீதான் அம்மாகிட்டே எல்லாம் படித்தாயே! ஒரு ரசம் வைத்து, ஒரு தேங்காய்த்துவையல் அரைத்துத் தருகிறாயாடா?..."

மயூரி செய்து கொடுத்தாள். கூடவே ஒரு கட்டிப் பருப்பும் சேர்த்து வைத்துவிட்டு, வெங்காயம், பச்சை மிளகாய், தேங்காய்ப்பூ போட்டு ஆம்லெட்டும் செய்து வைக்க, 'அமிர்தம்' என்று மூவரும் உண்டனர்.

மேலும் ஒரு வாரம் லீவு வேண்டிக் குமுதினிக்கு எழுதிவிட்டு, அந்த ஒருவாரத்தில் அத்தைவீட்டை மயூரி, ஓர் ஒழுங்குக்குக் கொண்டுவந்தாள்.

மஞ்சள் கயிறு மின்ன வந்த கற்பகத்திடம் சொல்லி, அவளுடைய உறவினளான பழைய செல்வியையும், அவள் மூலம் மற்ற பழைய ஆட்களையும் வரவழைத்து, வேலைக்கு அமர்த்தினாள்.

பிறகே, அந்தவீட்டில் உட்கார்ந்து பேச நேரம் கிடைத்தது!

சௌம்யா பற்றிக் கதைகதையாகச் சொன்னார்கள்.

தினம் நைட்கிளப் போகவேண்டுமாம்! குடிப்பதற்கு பர்மிட் வைத்திருந்தாள். இரவில் கட்டாயம் தாகசாந்தி

செய்ய வேண்டும்! லண்டனில் பழகிய பழக்கமாம்! தினமும் மாட்டுக்கறி, பன்றிக்கறி வேண்டும்!

''அதைத் தப்பு சொல்ல முடியுமா, அத்தை? இங்கே நாம் சிக்கன், மட்டன் சாப்பிடவில்லையா? அங்கே அது! சீனாவில் பாம்பு, பல்லி சாப்பிடுவார்களாம்! அதற்காக அவர்களைக் குறைத்துப் பேச முடியுமா?'' என்றாள் மயூரி.

''அபுக்குட்டியும் அப்படித்தான் சொன்னான். அதனால், சரி போகட்டும் என்று நாங்கள் விட்டுவிட்டோம்! ஆனால், சமையல்காரர்கள் யாரும் அதைத் தொடமுடியாது என்றுவிட்டார்களே!''

''நினைத்தநேரம், தூங்குவாள்! நினைத்தநேரம் எழுந்திருப்பாள்! மாமியார், மாமனார் என்ற ஒரு பயம், மரியாதை ஒன்றுமே கிடையாது. அவளுக்குத்தான் இல்லை என்றால், அவள் பெற்றோர் அவளுக்கும் மேலே! மகள் வீட்டுக்கு வருகிறோம் என்பதே இல்லாமல், வெறும் கையை வீசிக்கொண்டு வந்துவிடுவார்கள். இவள் நொணநொண்ண என்பாள். உடனேவந்து, அவள் கேட்டது செய்யவில்லையாமே என்பார்கள்!பட்டிக்காட்டுத்தனமாக இராதீர்கள்! நல்லபடியாக நடந்து கொள்ளுங்கள் என்று எங்களுக்கு ஆர்டர் போட்டுவிட்டுப் போவார்கள். வாய் திறக்க முடியாது. அவளுக்குக் கிரெடிட் கார்டு இருக்கிறதாம்! தினமும் எதையாவது வாங்கிக் கொண்டு வருவாள்! நீதானே புருஷன்! பில்லுக்குப் பணம் கட்டு என்று அபூர்வனை விரட்டுவாள்!



''சரி, பெண்ணைக் கொடுத்திருக்கிறோம், சீர், செனத்தி, ரொக்கம், வரதட்சணை கூடும்! எல்லாம் பெண்ணிடம் கொடுப்பார்களாம்! உங்களிடம் ஏன் தரவேண்டும்? இப்படிக் கேட்கிறீர்கள் என்று போலீசில் சொன்னால், பிடித்து உள்ளே போட்டுவிடுவான் என்று நம்மையே மிரட்டுகிறார்கள்!...''

நிச்சயத்தட்டில் வைத்த ரொக்கப்பணத்தைத் திருப்பிக் கேட்டால் மகளின் பெயரை நாறடித்து விடுவேன் என்று மனோரஞ்சிதம் சொல்லாமல் சொல்லி மிரட்டியது நினைவுவரவும், இவர்களுக்கு ஏற்ற தண்டனைதான் என்று மயூரி, மனதினுள் எண்ணினாள்.

அதையே மனோரஞ்சிதமும் எண்ணினாற்போல, ''எல்லாம் எனக்கு வேண்டும், தங்கம்! அண்ணி, என்னிடம் ஒரு வார்த்தை அதிரப் பேசியிருப்பார்களா? பணத்திற்கு ஆசைப்பட்டு, 'தங்கச்சி, தங்கச்சி' என்று அருமையாய் நடத்திய அண்ணனுக்கும், சொந்த நாத்தனாருக்கும் மேலாகச் செய்த அண்ணிக்கும் துரோகம் செய்தேனே! அதற்கு, நான் பட்டுத்தானே ஆகவேண்டும்!'' என்று கண்ணீர் உகுக்கவும், மயூரிக்கு மனம் இளகிவிட்டது.

''விடுங்கள் அத்தை! அதெல்லாம் முடிந்த கதை! அதைப்போய் நினைத்து, நேரத்தை வீணடிக்கிறீர்களே!'' என்று தேறுதலாக மொழிந்து விட்டு, ''அத்தை, இன்று, செல்வி, பச்சைத் துவரையும் உருளைக்கிழங்கும் போட்டு ஒரு கூட்டு பண்ணியிருந்தாளே! பிரமாதம் இல்லை?'' என்று மயூரி பேச்சை மாற்ற முயன்றாள்.

அதுபுரிந்து "என்னவோ கண்ணு! நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்பார்கள்! அதுபோல, உன் அருமை, உன் அப்பா அம்மா பெருமை எல்லாம் எனக்குத் தெரிவதற்காகவே இப்படி ஒன்று நடந்திருக்கிறது என்று தோன்றுகிறது! அம்மா, அப்பா திரும்பி வந்ததும், எங்களுக்காக, நீதான் கண்ணு அவர்களிடம் பேசி, எங்களைச் சேர்த்து வைக்க வேணும் அம்மா!" என்றுரைத்து, மீண்டும் கண்ணால் நீர்வடித்தாள் மனோரஞ்சிதம்! "அவர்கள் இருவருக்கும், என்மேல் ரொம்பக் கோபம் இருக்கும்!"

"அம்மாவும் அப்பாவும் அப்படி எல்லாம் கோபத்தைப் பிடித்து வைத்துக் கொள்கிறவர்கள் இல்லை அத்தை. இப்போது உங்களுக்கு அடிபட்டது தெரிந்தால் ஓடோடி வந்து விடுவார்கள்!" என்றாள் மயூரி ஆறுதலாக.

"பின்னே? என் தங்கம், உன்னைப் பெற்றவர்கள் ஆயிற்றே! அத்தனை நடந்தும், அபுக்குட்டி அழைத்ததும் நீ ஓடோடி வந்துவிடவில்லையா? வந்து எல்லா உதவியும் பண்ணவில்லையா? அதுபோல அண்ணன், அண்ணியும் என்னை மன்னித்து விடுவார்கள்!" என்றாள் மனோரஞ்சிதம், நம்பிக்கையோடு.

"உறவு என்பது எதற்கு அத்தை? ஒருவருக்கொருவர் தேவைப்படும்போது உதவுவதற்காகத்தானே?" என்றாள் மயூரி.



"உன்னைப் போன்றவர்கள் உதவுவார்கள்! சௌம்யா போன்றவர்கள் உதைப்பார்கள்!" என்றாள் மனோரஞ்சிதம் வெறுப்புடன்.

"அத்தை?"

"ஆமாம்மா! நான் ஒன்றும் ரொம்ப நல்லவள் இல்லைதான்! ஆனால் செல்விமாதிரி, என்னிடம் நிலைத்திருந்தவர்களும் உண்டுதான்! ஆனால், எல்லா வேலைக்காரர்களும் நின்றுவிட்டது ஏன் தெரியுமா? அந்த டாக்டர் பொண்ணுக்குக் கோபத்தை அடக்கத்தெரியாது! கோபம் வந்தால், கண்மண் தெரியாமல் கையில் இருப்பதை வைத்து விளாசிவிடுவாள். இந்தக் காலத்தில் அடியும் உதையும் வாங்கிக் கொண்டு யார் வேலை செய்வார்கள்? திட்டுவது வேறு? இந்தமாதிரி வார்த்தை எல்லாம் எங்கேதான் படித்தாளோ!... என்னமோ லண்டனில் போய்ப் படித்ததாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். தெருப்பொறுக்கிகளோடு அலைந்திருப்பாள் என்று நினைக்கிறேன்."

'இவளுக்காகத்தானே, தேதி நிச்சயித்துப் பத்திரிகை கொடுக்கத் தொடங்கிவிட்ட திருமணத்தை நிறுத்தினீர்கள்' என்று எண்ணாதிருக்க மயூரியால் முடியவில்லை! ஆனால், மலர்ப்படுக்கை என்று எண்ணி, முள்ளில் விழுந்து புண்ணாகிக் கிடக்கும் இவர்களிடம் அவளுக்கு இரக்கம்தான் மேலோங்கியது. மனம், உடல் இரண்டுமே புண்ணாகிவிட்டதே!

"சரி சரி! விடுங்கள் அத்தை! அவளைப் பார்த்து, நல்லவார்த்தை சொல்லி, அழைத்துவா..."

"அய்யய்யோ!" பேயைக் கண்டவள்போல மனோரஞ்சிதம் அலறினாள்! மனோரஞ்சிதம் மட்டுமல்ல! "முருகா!" என்றார் செல்வராஜ். "அந்தப்பேச்சே வேண்டாம்!" என்றான் அபூர்வன்.

"அதற்கில்லை, அத்தை... திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்று சொல்வார்களே..."

"இருக்கலாம், அம்மா! ஆனால் அவளே, அதைத் தூக்கி எறிந்து விட்டுப் போய்விட்டாளே! இங்கே எழுதி வைத்து மட்டுமல்ல! அவள் வீட்டுக்குப்போய் - இப்போது, மருத்துவமனை மாடியிலேயே ஒரு தளம் முழுவதும் ஏசி பண்ணி வசிக்கிறார்களே, அங்கேபோய், அவளுடைய பெற்றோர் சாட்சியாக, வக்கீல் மூலம் விடுதலைப்பத்திரம் எழுதி அனுப்பி இருக்கிறாள்! அபூர்வனின் கையெழுத்துக்காகவும் ஒரு பத்திரம் அனுப்பியிருந்தார்கள். இவனும் கையெழுத்துப் போட்டு அனுப்பி விட்டான்! அதனால் இது உடைந்த மண்பாண்டம்! இனி ஒட்டுவதற்கு இல்லை!" என்றார் செல்வராஜ்.

"ஒட்டுவதற்கு முயற்சி செய்யப்போவதும் இல்லை! சௌம்யா, ஒரு தேள், மய்யூ! எந்நேரமும் கொட்டிக் கொண்டு இருக்கிற தேள்! உன்னிடம் சொல்வதற்கென்ன? என்ன, இப்படிச் செலவு செய்கிறாய் என்று அதட்டிக் கேட்டேன் என்று கையில் இருந்த பவுடர் டப்பாவை என்மேல் வீசி எறிந்ததில், என் தலையில் காயம் பட்டுவிட்டது! அவள் மாதிரியே நடந்தால்தான் அடங்குவாள் என்று அம்மா முயற்சி பண்ணப் போக,



அடித்து இழுத்து வந்து, மாடிப்படியில் உருட்டிவிட்டு... சரியானபடி பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் அடைபட்டுக் கிடக்க வேண்டியவள் அவள்! அவளை, மீண்டும் இந்த வீட்டுக்குள் நுழைய விடுவதா? ஒரு நாளும் முடியாது!" என்றான் அபூர்வன் முகம்சிவக்க.

ஆச்சரியத்துடன் அவனைப்பார்த்தாள் மயூரி. பொதுவாக அபூர்வன் அதிகம் பேசுகிறவன் அல்ல. இது செய், அது செய் என்பான். செய்யத் தயங்கினால், குறைப்படுவான்! அவனது ஆடைகள், தோற்றம் பற்றி அலசி ஆராய்வான்! டி.வி, சினிமா, ஃபாஷன் ஷோ பற்றி உற்சாகமாய் உரையாடுவான். மற்றபடி, வேறு பேச்சு... அதிலும், இப்படித் தீர்மானமாக ஒன்றை அவன் சொல்லி மயூரி கேட்பது, இதுதான் முதல் தடவை!

துன்பங்களும், தோல்விகளுமே, மனிதனுக்கு உண்மையில் முதிர்ச்சியைத் தருவன என்பது உண்மைதான் என்று மயூரிக்குத் தோன்றியது. இந்த உண்மைக்கு அவனே ஒரு நல்ல உதாரணம்தானே?

ஒருவார விடுமுறை முடிந்ததும், வேலையில் சேருவதற்காகக் கிளம்ப வேண்டும் என்று மயூரி கூறியதும், அந்தவீட்டில் எல்லோரும் அதிர்ந்து போயினர்!

"எங்கள்மேல், உன் கோபம் தீரவில்லை! அதனால்தான் போக வேண்டும் என்கிறாய்!" என்று மனோரஞ்சிதம் அழுதாள்.

"வேலை என்னம்மா, பெரிய வேலை? எவ்வளவு நாள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும் என்று சொல்லு!

இரண்டு பங்கு பணம் அனுப்பி விடுவோம்!'' என்றார் செல்வராஜ்.

''நீ போய்விட்டால், இங்கே யார் பார்ப்பது?'' என்று குறைப்பட்டான் அபூர்வன்.

பழைய நிலைமை எண்ணிப் பயப்படுகிறார்கள் என்பது புரியவும், மயூரிக்குப் பரிதாபமாகத்தான் இருந்தது.

''இப்போது, வேலையாட்களிடம் ஏற்பாடு செய்து விட்டுப் போகிறேன். பிறகு வாராவாரம் வந்து பார்க்கிறேன். ஆனால், ஒருவார லீவு என்று வந்துவிட்டு மீண்டும் போகாமல் இருப்பது தவறு! அத்தோடு, இந்த வேலையை நான் விடவும் முடியாது!'' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறி முடித்துவிட்டாள் மயூரி.

அபூர்வனும், அவன் பெற்றோரும், ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு, ''அடுத்தவாரம் கட்டாயம் வந்து விடு!'' என்று சொல்லி அனுப்பி வைத்தார்கள்!

மயூரி, குமுதினியின் வீட்டை அடைந்தபோது அங்கே குணசீலன் கோபத்தோடு காத்திருந்தான்!

# 14

டாக்சி, குமுதினியின் வீட்டை நெருங்கும்போதே, அங்கே இன்னொரு கார் நிற்பதைக் கண்ட மயூரியின் உள்ளம் துள்ளியது!



குணா வந்திருக்கிறான்! அவன்தான், வரும்போது திருச்சியிலிருந்து 'ட்ராவல்' காரை ஒன்றை எடுத்துக் கொண்டு வருவான். திரும்பிப் போகும்போது காரைக் கொண்டு விட்டுவிட்டுச் செல்வான். குமுதினியும், மயூரியும்கூட.. அவன் வரும் சமயங்களில், அந்தக் காரிலேயே திருச்சி சென்று 'ஷாப்பிங்' பண்ணுவார்கள்! இப்போது கார் நிற்கிறது என்றால், வந்திருப்பது குணாவாகத்தான் இருக்க வேண்டும்!

கார் நிற்கவும், அவள் எதிர்பார்த்ததுபோலவே, குணசீலன் வீட்டினுள்ளிருந்து வெளியே வந்தான். டாக்சி டிரைவரிடம், ''எவ்வளவு'' என்று கேட்டு, ''நான் கொடுக்கிறேன், குணா!'' என்றவளின் பேச்சைக் காதிலேயே போட்டுக் கொள்ளாமல் பணத்தைக் கொடுத்து விட்டு அவளது பெட்டியைத் தூக்கிக் கொண்டு பேசாமல் உள்ளே நடந்தான்.

வீட்டினுள் சென்றதும், ''வாம்மா! அங்கே... அங்கே நிலைமை பரவாயில்லைதானே?'' என்று குமுதினி டீ கப்புகளுடன் உள்ளே சென்று கொண்டிருந்தவர், நின்று கேட்டார்.

குணசீலனின் இறுகிய முகமும், வரவேற்பாய் அவன் ஒரு வார்த்தைகூடப் பேசாததும் மனதை உறுத்த, ''ஆமாம்! ஆன்ட்டி.. பரவாயில்லை!'' என்று மெல்லிய குரலில் குமுதினிக்குப் பதிலிறுத்துவிட்டு, ஒரு தலையசைப்புடன் அவர் செல்லவும், மயூரி குணசீலனிடம் திரும்பினாள்.

''குணா... ஆன்ட்டி சொன்னார்களா?'' என்று தொடங்கினாள்.

''சொன்னார்கள்!'' என்றான் அவன் கோபத்தை உள்ளடக்கிய குரலில்! ''நல்ல பெண்ணாக இரு என்று சொல்லிவிட்டு நான் கிளம்பி என் தலை மறைந்ததும் சவாரிவிட்டது எல்லாமே சொன்னார்கள்'' என்றான் ஏளனமாக.

''என்ன குணா இப்படிச் சொல்லுகிறீர்கள்? அங்கே ஒரே களேபரம்! அத்தை மாடிப்படியில் இருந்து விழுந்து கால் எலும்பு முறிந்துவிட்டது! நிறையக் காயம்! மாமா வுக்கும் கையில் ஒரு சிறு முறிவு...''

''அதனால், அம்மையார் 'ஃப்ளாரன்ஸ் நைட்டிங் கேல்' பணிபுரிய போனீர்களாக்கும்!'' என்றான் அவன் எகத்தாளமாக.

''ஏன் குணா, இப்படிச் சொல்லுகிறீர்கள்?''

''வேறு எப்படிச் சொல்வது? மனோரஞ்சிதம் அம் மாளுக்குக் கால் ஒடிவதும், அவர் கணவருக்குக் கை ஒடிவதும் அவர்கள் சொந்த விஷயம் உனக்கென்ன?''

''உதவி வேண்டி அபூர்வன் எழுதியபிறகு... எப்ப டிப் போகாதிருப்பது?'' என்று சுருக்கமாக நிலைமையை எடுத்துரைத்தாள் அவள்.

''அது...சரி! உதவிகோரித் திருவாளர் அபூர்வனே எழுதிய பிறகு போகாமல் எப்படி இருக்க முடியும்? ஆனால், எனக்கு ஒரே சந்தேகம்! மருமகள் மருமகள்



என்று அந்தவீட்டில் ஒருத்தி உண்டுதானே? அதிலும் எப்பேர்ப்பட்ட மருமகள்! நிச்சயித்த பெண்ணை 'அம் போ' என்று விட்டுவிட்டு, அவசரமாக மணமுடித்த மருமகள். அந்தம்மாள் நோயாளிகளுக்கு இலவச சேவை எல்லாம் செய்ய மாட்டாளாமா? அவள் பெற் றோரின் மருத்துவமனையில் சேர்த்து, கொழுத்த ஃபீஸ் வெட்டினால் மட்டுமே தான் பணிபுரிவாளாமா?''

''விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டு, சௌம்யா அபூர்வனைவிட்டு விலகிப் போய்விட்டாள். விவாகரத்து செய்யப் போகிறார்களாம்!''

நீண்ட விசிலாய்க் காற்றை உள்ளிழுத்தான் அவன்! ''ஓகோ! இப்போதல்லவா சித்திரம் தெளிவாகத் தெரிகி றது! அவள், விடுதலைப் பத்திரம் எழுதி வைத்துவிட்டு, வீட்டைவிட்டுப் போவதும், அடுத்து உனக்கு உருக்க மாய் கடிதம் எழுதுவதும்...? ஐடியா, பிரமாதம்! ஆனால் நினைவிருக்கட்டும், மயூரி, அது, வெறும் விடுதலைப்பத் திரம், விவாகரத்து அல்ல!''

உள்ளூரத் திகைத்து, வாய்மூடி நின்றாள் மயூரி.

அங்கே, அபூர்வனுடைய குடும்பம் படும் கஷ் டத்தை நேரில் பார்த்துவிட்டு வந்திருந்தவளுக்குக் குண சீலனின் பேச்சு, மனிதாபிமானம் அற்றதாகத் தோன்றி யது.

முன்பும் ஒருதரம், அபூர்வனின் வீட்டைப்பற்றி, அவன் சற்றுக் கடுமையாகப் பேசியது அவளுக்கு நினைவு வந்தது.

இப்போது இன்னமும் குரூரமாகப் பேசுகிறான்!

இவனுக்கு ஏன் அந்தக் குடும்பத்தைப் பிடிக்கவில்லை? அம்மாவுக்கு அடிக்கடி தொல்லை கொடுத்தாலோ?

''அத்தை ரொம்பவும் திருந்திவிட்டார்கள், குணா! அம்மா அப்பாவிடம் மன்னிப்புக் கேட்கப் போகிறார்களாம்!''

செய்கையற்ற தவிப்புடன் குணசீலன், மயூரியை வெறித்து நோக்கினான்!

காரணம் புரியாமல், ''என்ன குணா?'' என்று கேட்டாள் அவள்.

''ஒன்றுமில்லை!'' என்று தலையசைத்தான் அவன். ''இனி... இனி என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டான்.

''அடுத்தவாரம் வருவதாகச் சொல்லிவிட்டு வந்தேன். அங்கே பார்க்க, ரொம்பப் பாவமாய் இருக்கிறது, குணா!''

''அப்புறம்?''

''என்ன அப்புறம்?''

''யோசித்து பதில் சொல்லு, மயூரி. இப்போது அபூர்வன் கேட்டால்... இப்போதும் அபூர்வனை மணப்பாயா?'' என்று உணர்ச்சியற்ற குரலில் குணசீலன் வினவினான்.



மயூரி சற்றுத் திணறினாள். சிறுவயதில் இருந்து கணவனாக வேறு யாரையும் நினைத்துப் பார்த்தது இல்லை! அபூர்வன் குடும்பத்துக்கும் எப்படியும் ஒத்துப் போகும் ஒரு பெண் தேவை! ஆனால், அதெல்லாம், எப்போதோ நடக்கக்கூடியது! இப்போது அதைப்பற்றி யோசிப்பானேன்?

''பதில் சொல்லு மயூரி. இப்போதும், அபூர்வனை மணப்பாயா?''

''வே...வேறு என்ன செய்யமுடியும், குணா?''

''ஓ!'' சட்டெனத் திரும்பி, குணசீலன் உள்ளே சென்றான். திரும்பி வந்தபோது, அவனது பெட்டி அவன் கையில் இருந்தது.

''இப்படி அரைநாள், கால்நாள் என்று இல்லாமல், போன தரம் மாதிரி ஒரு மூன்று நாளாவது தங்குகிற மாதிரி வா, குணா!'' என்று வற்புறுத்தியபடி, குமுதினியும் உடன்வந்தார்.

''என்ன குணா, அதற்குள்ளாகவா கிளம்புகிறீர்கள்?'' என்றாள் மயூரி ஏமாற்றத்தோடு.

''ஆமாம்!'' என்றவன் தன் பெரியன்னையிடம், ''பெரியம்மா, எனக்கு இரண்டு பாட்டில்களில் குடிக்கத் தண்ணீர் வேண்டும். உங்கள் வேலைக்காரப் பெண்ணை எடுத்துவரச் சொல்லுங்கள்!'' என்றான்.

குமுதினி உட்புறம் சென்றதும், ''இது பெரியம்மாவுக்கு இப்போது தெரிய வேண்டாம் மயூரி! திரும்பி

வந்தபிறகு, நானே, சொல்லிக் கொள்ளுவேன்! உன்னிடம் முன்பு சொன்னேனே ஒரு தீவிரவாதி பற்றி அவனைப் பேட்டி எடுக்கப் போகப் போகிறேன்! சீக்கிரமே வரச் சொல்லிக் கொண்டு இருக்கிறான் வருகிறேன். பிழைத்திருந்தால் சந்திப்போம்'' என்று மயூரியிடம் கூறினான்.

'பின்லேடன்' மாதிரி ஆள் என்று அவன் சொன்னது நினைவு வர அச்சத்துடன், ''அய்யோ! வேண்டாம் குணா! அந்த ஆளிடம் பேட்டி எல்லாம் வேண்டாம்...'' என்று அவனைத் தடுக்க முயற்சித்தாள்.

குமுதினி வரும் அரவம் கேட்கவும், 'உஷ்' என்று மயூரியை அடக்கினான் அவன். வேறுவழியில்லாமல், ''எச்சரிக்கையோடு இருங்கள் குணா!'' என்று மட்டும் கேட்டுக் கொண்டாள் அவள்.

மேலே நில்லாமல், இரு பெண்களிடமும் விடை பெற்றுக் கொண்டு கிளம்பிச் சென்றுவிட்டான்.

'பிழைத்திருந்தால் சந்திப்போம்' என்ற அவனது வார்த்தைகள், அவ்வப்போது மயூரியை அமைதி இழக்கச் செய்தன.

அடுத்த வாரம் மயூரி கிளம்பியபோது, குமுதினி, சற்று வெளிப்படையாகவே, தன் மனமின்மையைக் காட்டினார்.

''உனக்குச் சில விஷயங்கள் தெரியாது, மயூரி! உன்னிடம் சொல்ல வேண்டாம் என்று குணா எனக்குத்



தடையுத்திரவு போட்டிருந்தான். ஆனால், இது உனக்குத் தெரிந்திருக்க வேண்டுமோ என்று எனக்கு இப்போது தோன்றுகிறது!'' என்று தொடங்கிச் சொன்னார். ''பாரம்மா இங்கே உன் வேலைக்குச் சம்பளம், உனக்கு ஆகிற செலவு எல்லாம் தருவது யார் தெரியுமா?''

விலுக்கென நிமிர்ந்து அமர்ந்தாள் மயூரி.

அன்று, இதுபற்றி ஏதோ பேசிக்கொண்டு இருந்த போது பாதி வாக்கியத்தில், குமுதினி இருமியதும், குணசீலன் மீதி வாக்கியத்தைச் சொல்லி முடித்ததும் மயூரிக்கு நினைவு வந்தது. எதையோ மறைத்திருக்கிறார்கள். ''ஆன்ட்டி!'' என்றாள் தயக்கத்துடன்.

''அந்தப் புத்தக நிறுவனத்தார், அப்படி ஒன்றும் பணத்தை அள்ளி விடுகிறவர்கள் அல்ல! என் வேலைக்குக் கூலி தருவார்கள். ஓரளவு நல்ல சன்மானம்தான். ஆனால், எனக்கு உதவியாளர் வேண்டுமென்றால், அந்தச் செலவு நான்தான் செய்துகொள்ள வேண்டும் என்று முதலிலேயே சொல்லி விட்டார்கள்!...''

''கு...குணாவா, ஆன்ட்டி? எனக்குத் தனியாக பாத்ரூம் கட்டியது, அறையில் செய்து தந்த வசதிகள்.... எல்லாம் குணாதான் இல்லையா, ஆன்ட்டி? பிறகு ஏன், புத்தக நிறுவனத்தார் செய்வதாகப் பொய் சொல்ல வேண்டும்?''

''ஏன் என்று நீதான் யோசியேன்! நீ புத்திசாலி தானே?''

"என்மேல் இரக்கப்பட்டுச் செய்வதாக என்னி நான் வருந்தக்கூடும் என்று! இந்த இரக்கமும் பரிவும் தாங்க மாட்டாமல்தானே, நான் சென்னையிலிருந்து இங்கே வந்ததே!"

"செய்வது அவன்தான் என்று சொல்லாமல் இருந்த தன் காரணம் அது! ஆனால் இலவசம்பஞ்சு மெத்தையும், டிரஸ்சிங் டேபிளும், குஷனிட்ட நாற்காலியும்... முடிந்தால் ஏசி கூடப் பண்ணியிருப்பான். அது ரொம்பவும் அதிகப்படியாகத் தெரியும் என்றுதான் விட்டுவிட்டான், தெரியுமா?"

மயூரிக்குப் பழைய நினைவு வந்தது! அன்று பீட்சா வரவழைத்தானே! அதற்குக் கொடுத்தது போகப் பத்தே ரூபாய்தான் அவனிடம் இருந்தது!

பணம் என்று கணக்கிட்டால், இன்றைய செலவு, அவனுக்கு அன்றளவு பெரிதல்ல! ஆனால், அவன் மனம், இன்றும் அன்றும் ஒரே மாதிரிதான் இருக்கிறது!

"எப்போதுமே குணா, எனக்கென்றால் செலவைப் பார்க்க மாட்டார், ஆன்ட்டி!" என்றாள் கம்மிய குரலில்.

"அதுதான் ஏன் என்று யோசித்தாயா?" என்றாள் அத்தை அம்மாள் விடாமல்.

சென்றமுறை குணசீலன் மணக்கக் கேட்டது நினைவு வர மயூரிக்கு மூச்சடைத்தது! அப்படியென்றால்...



வேண்டாம்! இப்போது அதுபற்றி நினைக்க வேண்டாம்! இருக்கும் குழப்பத்தில், அதுவேறு தனிக்குழப்பம், இப்போது வேண்டாம்! இதற்கெல்லாம் வேறு விளக்கம் கூட இருக்கக்கூடும்! மீண்டும் அத்தை வீட்டில் மயூரி மாட்டிக் கொள்ளக்கூடாது என்பதற்காகக்கூட அவர்களிடமிருந்து அவளைக் காப்பாற்றுவதற்காகக் கூடக் குணா, அப்படிக் கேட்டிருக்கலாம்! அவளது மகிழ்ச்சிக்காக, இயன்றதை எல்லாம் செய்வது அவனுக்கு வழக்கம் தானே?

ஆனால், அப்படி, அவளது மகிழ்ச்சி, அவனுக்கு ஏன் முக்கியம்? ஏன்...

"என்னம்மா, யோசிக்கிறாயா? என்ன தோன்றுகிறது?"

"அது...ப்ளீஸ், ஆன்ட்டி! இதுபற்றி இப்போது பேசவேண்டாம் ஆன்ட்டி! சும்மாவே எத்தனையோ பிரச்சினைகள்! இதையும் சேர்த்துப் போட்டு இப்போது குழம்ப வேண்டாம், ஆன்ட்டி! நான், சென்னைக்குப் போய்வந்தபிறகு, இதுபற்றிப் பேசுவோமே!" என்றாள் கெஞ்சுதலாக.

ஒருகணம் தயங்கிவிட்டு, "அங்கே, அந்தப்பையன் வீட்டில் கல்யாணப் பேச்சு எடுத்தால்? சரியென்று தலையாட்டி விடமாட்டாயே!" என்று, குமுதினி தன் சந்தேகத்தை வெளியிட்டார்!

"சேச்சே! ஆன்ட்டி, அவர்கள் வீடு இப்போது இருக்கும் நிலையில், கல்யாணம் என்கிற வார்த்தையே அவர்களுக்குக் கசப்பாக இருக்கும்! அங்கே, அத்தைக்கு நடமாட முடியாததால், வீட்டைப் பார்க்க முடியவில்லை, ஆன்ட்டி! முக்கியமாக நான் போவது அதற்காகத்தான். அடுத்த ஒரு வாரத்துக்கு வேண்டிய சாமான் பார்த்து, 'லிஸ்ட்' போட்டுக் கொடுத்து, இன்னின்னதை இப்படிச் செய் என்று வேலையாட்களிடம் திட்டம் செய்து, பூஜை அறை சுத்தம் செய்து, வேலையாட்களை ஒட்டடை தட்டி, வீடு தோட்டம் துப்புரவு செய்வதை மேற்பார்த்து... இது எல்லாம் செய்யத்தான் போகிறேன், ஆன்ட்டி! மற்றபடி... நான் வேலையை விடமாட்டேன் என்று அங்கே உறுதியாகச் சொல்லி இருக்கிறேன், ஆன்ட்டி!" என்ற மயூரி சட்டென முகம் கலங்கினாள் "ஆனால்..."

"ஆனால் என்ன?"

"என் வேலையே எனக்காக உருவாக்கப்பட்டது எனும்போது... என் உதவி, உங்களுக்கு அவசியம் இல்லைபோலத் தோன்றுகிறதே ஆன்ட்டி!" என்றாள் மயூரி, வருத்தமாக.

"உன் உதவி எனக்குத் தேவைதான், மயூரி! சின்ன வகுப்புப் புத்தகங்கள் இலகுவாக இருந்தன! இப்போது உதவிக்கு ஆள் இல்லாவிட்டால் எனக்குச் சங்கடம்தான். உன் ஐடியாக்கள் வேறு எனக்கு அதிகப்படி போனஸ் மாதிரி! அதனால், உன் உதவி, எனக்குத் தேவை



இல்லையோ என்று மட்டும் சற்றும் நினையாதே! நீ இல்லாவிட்டால், எப்படியும், என் வருமானத்தில் இருந்து கொடுத்தாவது, நான் இனி ஆள் வைத்துத்தான் ஆகவேண்டும்! ஆனால், நீ வந்துவிடுவாய்தானே?" என்று மீண்டும் குமுதினி கேட்டார்.

ஐயம் திரிபற இதை அறிந்து கொள்ளும் ஆவல் அவருக்கு!

"நிச்சயம் வருவேன்!" என்று உறுதி கூறிவிட்டு மயூரி கிளம்பினாள்.

அபூர்வன் வீட்டு நிலைமைபற்றி, தன் மனதில் நிச்சயமாக நம்பியதையே மயூரி, குமுதினியிடம் கூறினாள்! ஆனால், அங்கே, நிலைமை வேறுவிதமாய் இருந்தது!

## 15

முந்தைய வாரம் பார்த்ததற்கு, மனோரஞ்சிதத்தின் உடல்நிலை எவ்வளவோ முன்னேற்றம் அடைந்து இருந்தது.

ஐம்பதை நெருங்கிக் கொண்டிருந்த வயதும், தாட்டியான உடல் அமைப்பும் காரணமாக உடைந்த காலை ஊன்றி நடப்பது நல்லதல்ல என்று மருத்துவர் கருத்து

தெரிவித்தார். அதனால், நடமாட்டம் இல்லாமல் படுக்கையிலோ, அல்லது மற்றவர் உதவியோடு வந்த சோபாவிலோ இருந்தாள். மற்றபடி, வெளிக்காயங்கள் அனைத்துமே ஆறிவிட்டிருந்தன.

செல்வராகக்கும், கைக்குரிய தொட்டிலை அவிழ்த்து விட்டிருந்தார்கள். அவ்வப்போது மறு கையால் தாங்கிக் கொள்ளும்படி மருத்துவர் ஆலோசனை மற்றபடி, இரு கைகளுமே பயன்பட்டன.

அபூர்வனும், சற்று உடல்தேறி, உடை, சிகை எல்லாவற்றிலும் பழையமாதிரி, கவனம் செலுத்தியிருந்தான்!

மயூரியின் பெற்றோரும், முன்தினம் இரவில்தான், சென்னைக்குத் திரும்பி வந்திருந்தனர். மகிழ்ச்சியோடு, தாயிடம் சற்றுநேரம் செல்லம் கொண்டாடிவிட்டு, மயூரி, அத்தை வீட்டுக்குக் கிளம்பினாள்.

ரேவதியையும் உடன் அழைத்தபோது, ''காலையில் முதல் வேலையாகப் போய் பார்த்துவிட்டுத்தான் வந்தேன், மயூம்மா! கோயில் பிரசாதம் எல்லாம் கொடுத்தேன். சாப்பாடு அனுப்பமுடியுமா என்று கேட்டார்கள்! தாங்களே, நேற்று இரவுதானே வந்தோம்! ஏற்கனவே, இன்றைக்கு ஒன்றும் பெரிதாகச் செய்ய வேண்டாம் என்று கூறிவிட்டார் அப்பா! அதனால், வழக்கம் போல அங்கேயே செய்துகொள்ளச் சொல்லி விட்டு வந்தேன்! ஆனால், நீ இன்றைக்கு, இங்கே வருவதாக எழுதியிருந்தாயே என்று கொஞ்சம் புலவுமட்டும் செய்யலாம் என்று



இருக்கிறேன்! பதார்த்தத்துக்கு வேண்டுமானால், ஏதாவது நல்ல ஓட்டலில் கொஞ்சம் வாங்கிக் கொள்ளலாம் என்று அப்பா சொன்னார்....'' என்று தாயார் கூறியது மயூரிக்கு விசித்திரமாக இருந்தது. கூடவே ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சியும் உண்டாயிற்று.

யாருக்குமே, உதவி செய்வதில், ரேவதி தயக்கம் காட்டியது கிடையாது! நேசக்கரம் நீட்டுவதில், மற்றவர்களைக் காட்டிலும் ஓர் எட்டு முன்னணியில்தான் இருப்பாள். அதிலும், மனோரஞ்சிதம் விஷயத்தில், இல்லை என்று சொல்லத் தைரியமும் இராது.

இப்போது அவள் கேட்டும், மறுத்திருக்கிறாளே! மகளுக்கு மட்டும் புலவு செய்யத் தோன்றுகிறது!

அதைவிட ஆச்சரியம், அப்பாவும் இதற்கு ஒத்துழைப்பது! அத்தை, எப்போது, என்ன கேட்டாலும், அவளுக்குச் செய்து கொடுப்பதற்கென்ன? என்று மனைவியை விரட்டும் தந்தை!

எப்படியோ, அப்பா, அம்மாவுக்காகப் பார்க்கத் தொடங்கி இருக்கிறார்! அது கொண்டாடப்பட வேண்டிய விஷயம்!

அம்மாவின் புலவு என்றால் அத்தைக்கு ரொம்பவும் பிடிக்குமே என்று எண்ணும்போது மயூரிக்குக் கொஞ்சம் வருத்தமாகத்தான் இருந்தது!

ஆனால், இதுவரை, அம்மா, அத்தைக்குச் செய்திருப்பது மிக அதிகம்! அத்தோடு, அந்தப் பழக்கம்

திறக்கப்பட வேண்டியதும்கூட! அபூர்வனை அவன் மணக்க முடிவு செய்ததற்கு ஒரு முக்கிய காரணம் இதுவும் தானே? தானாக நடந்தால் சந்தோஷம்தானே!

எல்லாம் சந்தோஷம்தான். இந்தக் குணா மட்டும், அந்தத் தீவிரவாதியைப் பேட்டி எடுக்கப் போகாமல் இருந்திருந்தால்...

'அவுட் ஆஃப் ப்ளூ' என்பார்கள்! அதுபோலத் திடுமென இந்த எண்ணம் தோன்றி, மயூரியைச் சோர்வடையச் செய்தது.

இல்லை! பயப்படத் தேவை இராது! அப்படி ஒன்றும், எந்தவிதப் பாதுகாப்பும் இல்லாமல், குணசீலனை, அந்தத் தீவிரவாதியிடம், அவனது நிறுவனம் அனுப்பி விடாது!

தன்னைத்தானே தேற்றிக்கொண்டபடி, மயூரி, அபூர்வனின் வீட்டுக்குக் கிளம்பினாள்!

''சமையல் கொஞ்சம் லேட்டாகும்! ஆனால், சாப்பிட வந்துவிடும்மா!'' என்று ரேவதிகூற, ''இருக்கட்டும்மா! நீங்கள் தந்த கோயில் முறுக்கு, அப்பமே வயிறு டொம்மென்று ஆகிவிட்டது. நான் அத்தை வீட்டுக்குப் போய்விட்டு வருகிறேன்!'' என்று கிளம்பிச் சென்றாள்.

மயூரி சென்ற போது, மனோரஞ்சிதம், சோஃபாவில் தான் அமர்ந்திருந்தாள்.

சமையலறை வாயிலில், சோஃபாவைப் போடச் செய்து, அங்கிருந்து வேலையாட்களை விரட்டிக் கொண்டிருந்தாள்.



மயூரியைக் கண்டதும், பெரிதும் முகம் மலர்ந்து, ''வா கண்ணா, வா! ஃப்ரிஜ்ஜிலே அன்னாசிப்பழம் இருக்குது. சாப்பிடுகிறாயா?'' என்று உபசாரம் செய்தாள்.

''நீ வருவாய் என்று பூ கூட வாங்கிவைத்தேன். கிட்டவாம்மா! வைத்து விடுகிறேன்!'' என்று தன் கையாலேயே மயூரிக்குப் பூச்சூட்டி விட்டாள்.

''அத்தை! நீங்கள் இந்த அளவு குணமானது மனதுக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது, தெரியுமா? இனிமேல், சீக்கிரமே, நீங்கள் நன்றாக நடக்கவும் தொடங்கிவிட்டால், எனக்கு முழுநிம்மதியாய் இருக்கும்!'' என்று மனதாரச் சொன்னாள் மயூரி.

''எல்லாம் உன் கையில்தான் இருக்கிறது! மயூரி!'' என்றார், வெளியே செல்வதற்காகக் கிளம்பி வந்த செல்வராஜ்.

''டாக்டர் கையில் என்று சொல்லுங்கள், மாமா!''

''இல்லை, கண்ணு! உன்னைப் பார்த்துக் கொண்டிருந்தாலே, எனக்கு நோயெல்லாம் பறந்து போய்விடும்! பாரேன், நீ வருகிறாய் என்றதுமே, சமையல்கட்டு வரை வந்துவிட்டேனே!'' என்றாள் மனோரஞ்சிதம். ''நாளைக்கு உன்னோடு ஓடிப்பிடித்துக் கூட விளையாடுவேன்!''

''உயர்வு நவிற்சி அணி!''

மயூரிக்கு, உள்ளூரச் சிரிப்பு வந்தது! அத்தைக்கு எதையுமே அதிகமாக்கிப் பேசித்தான் பழக்கம்!

சுற்றுமுற்றும் பார்த்து விட்டு, ''அத்தான் எங்கே, அத்தை? தொழிற்சாலைக்குப் போயிருக்கிறாரா?'' என்று விசாரித்தாள் மயூரி.

''சரி! நான் கிளம்புகிறேன். நீ அத்தையை, வீட்டைப் பார்த்துக் கொள், மயூரி'' என்று செல்வராஜ் சென்றுவிட, ''எங்கேம்மா!'' என்று மயூரிக்குப் பதில் சொல்லிப் பெருமூச்சுவிட்டாள் மனோரஞ்சிதம்!

''எனக்கு உடம்பில் அடி என்றால் அவனுக்கு மனதிலே அடி! 'மய்யூ என்னை மன்னிப்பாளா, மன்னிப்பாளா' என்று புலம்பிக் கொண்டு இருக்கிறான்! அவனைக்கூட நல்லபடியாக ஆக்க வேண்டியது, உன் பொறுப்புதான் செல்வம்! காலையிலே இருந்து, ஒன்றுமே சாப்பிட மாட்டேன் என்கிறான். ஃப்ரிஜ்ஜிலே பாதாம் பால் இருக்கிறது. கொண்டு போய்க் கொடுத்து, அதையாவது குடிக்கச் சொல்லு! எப்போது பார்த்தாலும், பசியில்லை, பசியில்லை என்று பாதிப் பட்டினியாகவே கிடக்கிறான்!'' என்று வருத்தத்துடன் புலம்பினாள்.

''ஐயோ! அப்படியா, அத்தை?! போன மாதம் ஒருதரம், தெருவில் பார்த்ததற்கு, இப்போது அத்தான் பரவாயில்லை என்று அம்மா சொன்னார்களே! ஒருவேளை, போன மாதம் இதைவிட மோசமாய் இருந்தாரோ, என்னவோ?'' என்றபடி மயூரி ஃப்ரிஜ்ஜைத் திறந்தாள்.



''ஆமாம் ஆமாம்! போன மாசம் இதைவிட மோசமாய்த் தான் இருந்தான். அப்போது, அந்த ராட்சசி இங்கே கூத்தாடிக் கொண்டிருந்த சமயம் அல்லவா? தினம் தினம் பையன் செத்தல்லவா பிழைத்துக் கொண்டிருந்தான்! இடையிலே ஒருவாரம், நீ இங்கு இருந்தபோது எவ்வளவோ தேறியிருந்தான்! இப்போது கொஞ்சம் வாடிவிட்டான்! ஆனாலும், போன மாதத்துக்கு இப்போது இருப்பது மேல் என்றுதான் சொல்ல வேண்டும்!'' என்றாள் மனோரஞ்சிதம்.

''அப்படியா, அத்தை?'' என்று கேட்டபடி, மயூரி, கண்ணாடித் தம்ளரில் ஊற்றி வைக்கப்பட்டிருந்த பாதாம் பாலை வெளியே எடுத்தாள். ''இதுவா, அத்தை? ஒரு தம்ளர் மட்டும்தானே இருக்கிறது! உங்களுக்கெல்லாம் சேர்த்துச் செய்யவில்லையா?'' என்று இயல்பாய் வினவி ஃப்ரிஜ்ஜை மூடினாள்.

இப்படி ஒரு காரணத்துக்காக, ஒரு தம்ளர் பாதம் பாலை எடுத்து வைத்துவிட்டு, மீதியை மூவருமாய்க் குடித்து முடித்ததைச் சொன்னால் சரியாய் இராது, என்று கருதி, ''ஆமாம்மா! உட்கார்ந்திருந்து சாப்பிட்டு, சாப்பிட்டு, உடம்பு குண்டாய் போகுது. இதற்குமேல் பாதாம் பால் வேறா? அதுதான், பையனுக்கு மட்டும் செய்தேன்!'' என்று அத்தையம்மாள் அளந்தாள்.

சந்தேகப்படத் தோன்றாமல், ''அத்தான் எங்கே, அத்தை?'' என்று மயூரி விசாரிக்க, ''மாடியிலே இருக்கி

றானம்மா! அனேகமாக, மொட்டை மாடியிலே, வானத்தை வெறித்துக் கொண்டு இருப்பான்! சே! அறியாத்தனமாய் உனக்குச் செய்த ஒரு தப்பை நினைத்து நினைத்து, என்னமாய், மறுகுகிறான், தெரியுமா?'' என்றாள் பெரியவள்.

''அய்யோ, ஏன் அத்தை? நான் அதையெல்லாம் நினைப்பதே இல்லை, தெரியுமா?'' என்றவளுக்கு, இந்தக்குணா, அவசரப்பட்டு தீவிரவாதியிடம் பேட்டி எடுக்கப் போய்விடக்கூடாதே என்றிருந்தது!

குணசீலனோடு தொடர்புகொள்ளவும் அவளுக்கு வழி தெரியவில்லை! 'அங்கே இங்கே சுற்றிக்கொண்டே இருப்பதால், 'ஒரு முகவரி' என்று தருவதற்கில்லை! கம்பெனி முகவரிக்கு எழுதினாலும் எப்போது என்னிடம் வந்துசேரும் என்று சொல்ல முடியாது. அதனால், அவ்வப்போது நானே பேசுகிறேன்' என்று சொல்லி, அதன்படி, குணாவே தான் அவ்வப்போது, டெலி., போன் செய்வான்! அப்படியும், வீட்டிலிருந்து ஒருதரம் முயன்று தோற்றிருந்தாள்!....

''என்ன மயூரி?'' என்று மனோரஞ்சிதம் கேட்ட பிறகே, சுயஉணர்வு வந்து, ''ஒ...ஒன்றுமில்லை, அத்தை! இதை அத்தானிடம் கொடுத்துவிட்டு நான் கொஞ்சம் வீட்டுக்குப் போக வேண்டும், அத்தை! அ... அம்மாவோடு பேசவே இல்லை!...'' என்று ஏதோ உளறிக்கொட்டிக் கிளறி மூடினாள்!



''இதைக் குடிக்கச் சொல்லி, அத்தானைக் கூட்டிக் கொண்டு வருகிறேன்!'' என்று மாடிக்குச் சென்றாள்!

கண்மறையும் வரை, மயூரியைப் பார்த்துக் கொண்டிருந்த மனோரஞ்சிதம் பெருமூச்சு விட்டாள்!

இனி, அபூர்வனின் புத்திசாலித்தனம்தான் கை கொடுக்க வேண்டும்! முக அழகுக்கு ஏற்ப அறிவும் இருந்தால் பிழைப்பான்! இந்த மயூரியையும் மனைவியாக்கிக் கொள்ளுவான்! அவளோடு கணிசமாய் கொஞ்சம் சொத்தும், நகையும், பணமும்கூடக் கைக்கு வந்துசேரும்!

காமதேனுவாய்க் கொட்டிக் கொண்டிருந்தார் அண்ணன்! பேசாமல், நிச்சயித்தபடி திருமணத்தை நடத்தியிருந்தால் இப்போது, இன்னும் எவ்வளவோ கறந்திருக்கலாம்! பொய்மான் ஒன்று, இடையில் வந்து, ஏமாற்றிவிட்டது!

கொஞ்சம் அழுது சமாளித்து, அண்ணனை மீண்டும் பிடித்து விடலாம் என்ற நம்பிக்கை, இன்று மகேந்திரனைப் பார்த்ததும், மனோரஞ்சிதத்துக்கு ஆட்டம் கண்டுவிட்டது.

சும்மா ஓர் ஒப்புக்காக விசாரிக்க வந்தேன் என்று சொல்லாமல் சொல்வதுபோல, ஒருவேளைச் சாப்பாடு கூடத் தர வழியில்லை என்று விட்டாரே!

ரேவதி எப்போதுமே எதிர்ப்பக்கம்தான்! மகேந்திரனுக்காக இவ்வளவு நாள் பொறுத்துப் போனாள்!

அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதை என்பார்கள்! அதைப் போல, சௌம்யா ஏதோ பொன் மழை கொட்டப் போகிறாள் என்று, மயூரியை விட்டு அவளை மருமகளாக்கி இத்தனை மாதங்கள், படாத பாடுபட்டாயிற்று. இனி இவளையும் விட்டுவிடக்கூடாது!

மயூரியாகப் போய், அபூர்வனைத்தான் கட்டிக் கொள்ளுவேன் என்றால், அதற்குமேல் மகேந்திரனோ, ரேவதியோ தடையேதும் சொல்ல மாட்டார்கள்! முறைப்படி, செய்ய வேண்டுவதிலும் குறைவைக்க மாட்டார்கள்.

அபூர்வனின் கடிதத்தைப் பார்த்ததும், மயூரி ஓடி வந்த விதத்தில், மனோரஞ்சிதத்திற்கு நம்பிக்கைதான்!

ஆனால், வேலையை விட முடியாது என்று போனது மூவருக்குமே கொஞ்சம் உறுத்தியது.

அன்றுவந்த மகேந்திரனும், ரேவதியும் சற்று விட்டேற்றியாக நடந்தது, உறுத்தலை அதிகமாக்கியது.

மயூரி, பொதுவாக, வார்த்தை மாறுகிறவள் அல்ல! அன்று வருவதாகச் சொன்ன பெண் வந்ததும், அவள் மனதை உருக்கி, மயக்கி, இந்தத் திருமணத்தை உறுதி செய்துவிட வேண்டும் என்று, மனோரஞ்சிதத்துடைய குடும்பம் திட்டமிட்டது!

அதன் - அந்தத் திட்டத்தின் ஒரு பகுதிதான், மனோரஞ்சிதம், தன் மகனின் வேதனை பற்றிப் பேசியது!



ஆனால், வேதனையைவிட, சூடுகண்ட பூனைகளாக இருந்த அந்தக் குடும்பத்துக்கு, நல்ல குணமும், ஓரளவு செல்வ வளமும் நிரம்பிய மயூரியை விட்டுவிடக் கூடாதே என்ற பயம்தான் அதிகம் இருந்தது என்பது அவளுக்குத் தெரியாது!

அதுபற்றிய யோசனையும் அவளுக்கு இல்லை! அவளுக்குத் திரும்பத் திரும்பத் தீவிரவாதியை குணா பேட்டி எடுக்கச் செல்வது பற்றிய நினைவுதான் வந்து வந்து அச்சுறுத்திக் கொண்டு இருந்தது.

குமுதினியின் வீட்டில் இருந்தே, குணாவின் நிறுவன முகவரிக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தாள்! அது அவனுக்குக் கிடைத்ததோ, இல்லையோ!

கிடைத்திராவிட்டால்?

மற்றவர்களோடு பேசும்போது அந்தப்பேச்சில் ஈடுபட்டு, அதற்குத் தகுந்தவாறு நடந்து கொண்டபோதும், இடையிடையே இந்த நினைவும் மயூரிக்கு வந்து கொண்டேதான் இருந்தது!

மயூரி மொட்டை மாடியை அடைந்தபோது, அபூர்வன், சோகமே உருவாய் அங்கே அமர்ந்திருந்தான்.

''அபூஅத்தான்...'' என்று அழைத்தபடி மயூரி வரவும், தலையை மட்டும் தூக்கி, அவளை நோக்கினான்.

''மய்யூ!'' என்றவனின் குரல் கேவியது!

''என்ன அத்தான்? ஏன்? அழவா செய்கிறீர்கள்? சேச்சே!'' என்று வியப்பும் வருத்தமுமாக வினவினாள்.

''இவ்வளவு காலத்தில், இதுபோல எத்தனை தடவை நீ எனக்குப் பால் கொண்டு வந்திருக்க வேண்டி யது? என் முட்டாள்த்தனத்தால் என் சொர்க்கத்தைக் கோட்டை விட இருந்தேனே!'' என்றான் அவன் சோக மாக.

அவன், கற்பனையில் உருவாக்கிய சித்திரம் அவ் வளவாக மனதிற்கு ஒத்துவராமல், மயூரி, சட்டென்று, பாதாம்பால் தம்ளரை, அருகில் இருந்த கைப்பிடிச் சுவர்மேல் வைத்தாள். ''அந்தப்பேச்சு எல்லாம், இப் போது, எதற்கு அத்தான்? முதலில் இந்தப் பாலைக்குடி யுங்கள்! அத்தை கொடுத்தனுப்பினார்கள்! நீங்கள் சரியா கச் சாப்பிடுவது இல்லை என்று அவர்களுக்கு ஒரே வருத்தம்!'' -என்றாள்.

தாயின் உபதேசத்தை மனதில் கொண்டு, ''ஆமாம், மயூரி, என் கண்மணிக்குச் செய்த துரோகம், என்னை, உன்னவே விடுவதில்லை!'' என்றான் அபூர்வன், முன் னிலும் சோகமாக.

இந்த மாதிரி வார்த்தைகளை எல்லாம் அபூர்வன் பயன்படுத்திப் பழக்கம் இல்லாததால், அவனது 'கண் மணி'யைத் தவறாகப் புரிந்து கொண்டு, ''நீர் அடித்து நீர்விலகுமா, அத்தான்? கணவன் மனைவி பந்தமும் அப்படித்தானே? எதற்கும் நீங்கள் நேரில் சென்று, சௌம்யாவைச் சமாதானப்படுத்த முயற்சியுங்கள்!'' என்று ஆலோசனை சொன்னாள் அவள்.



''என்னது? அந்தப் பேயையா?'' என்று மிரண்டு போனான் அபூர்வன். உடனேயே விஷயம் புரிந்து, ''நான் 'கண்மணி' என்ற குறிப்பிட்டது, உன்னைத்தான், கண்ணே!'' என்று விளக்கினான்.

''என்னையா?'' என்று மயூரி ஆச்சரியப்படவும், என்ன சொல்வது என்று புரியாமல் சற்றுத் திணறினான் அவன்!

ஒருவாறு சமாளித்துக் கொண்டு, ''ஆமாம் மய்யூக் கண்ணு! நீ இல்லாமல், எனக்கு இனி வாழ்க்கையே இல்லை, டார்லிங்!'' என்று காதல் பார்வை பார்த்தான்!

சட்டென மயூரிக்குச் சிரிப்பு வந்துவிட்டது! ''என்ன அத்தான், சினிமா 'டயலாக்' மாதிரிப் பேசுகிறீர்களே!'' என்று நகைத்தாள்.

வெகு சிரமப்பட்டு, ஒரு பெரிய நடிகனைக் காப்பிய டித்துப் பார்த்த காதல் பார்வை பயனற்றுப் போனதில், அபூர்வனுக்கு ஏகவருத்தம்! ஆனால் அதைக் காட்டிக் கொள்ள முடியாமல், ''வாழ்க்கையே, ஒரு சினிமா தானே, டியர்?'' என்றான் அவன்.

''அத்தான், ப்ளீஸ்! நீங்கள் எப்போதும் போல என்னை 'மயூரி' என்றே கூப்பிடுங்கள்! அதைவிட்டு, இப்படி டார்லிங், டியர், கண்ணு, மூக்கு என்றால் யாரையோ சொல்வது போல இருக்கிறது!'' என்றாள் மயூரி, அவனது பேச்சைச் சற்றும் மனதில் ஏற்காமல்.

தண்ணிலேயே மூழ்கி இருப்பவர்களுக்குப் பொதுவாகப் பிறருடைய உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ள முடிவது இல்லை. தன்னையே விரும்பித் தன்னைப் பேரழகுப் பெட்டகம் என்று எண்ணிக் கொள்வதோடு, தான் என்ன பிழை செய்தாலும், ஒரு புன்னகையில் மற்றவர்கள் அதை மறந்து, தன் விருப்பம் போல நடப்பார்கள் என்கிற ஒரு பொய்யான நம்பிக்கையும் அவர்களுக்கு இருக்கும்.

அபூர்வனிடம் இருந்ததும் அதே திமிர்தான்.

மயூரியை உதறியது தப்புதான்! பதிலாகத்தான் இப்போது, அவளையே மணந்துகொள்ள முன்வருகி றானே! பிறகென்ன? அவனது விருப்பம்போல ஆட வேண்டியவள்தானே அவள், என்கிற எண்ணம் தான் அவனுக்கு இருந்தது! தன் ஒரு காதல் பார்வையிலும் வார்த்தையிலும், அவள் கிறங்கி விடுவாள் என்றே எதிர்பார்த்தான். மிஞ்சிமிஞ்சி செயலிலும் எதிர்பார்க்கக் கூடும்! அவ்வளவுதான்!

இந்த எண்ணம் இருந்ததால், ''வெறுமனே அப்படி அழைத்தால் யாரையோ போலத்தான் இருக்கும்! இப்படி அணைத்துக் கொண்டு சொன்னால்...' என்று அவளது தோளைப்பிடித்து, அணைக்க முற்பட்டான்.

''சீச்சீ! விடுங்கள் என்னை! என்ன அசட்டுத்தனம் செய்கிறீர்கள்?'' என்று அவனை உதறிவிட்டு விலகி நின்றாள் அவள்.



''ஏன்? இதில் என்ன தப்பு? நாளை மணக்கப் போகிறவர்கள்தானே நாம்?'' என்று அபூர்வன் குறையும் எரிச்சலுமாகக் கேட்கவும், தன்னையும் அறியாமல் ''இல்லை!'' என்றாள் அழுத்தம்திருத்தமாக.

உள்ளூர, அதுவே உண்மை என்றும் உணர்ந்தாள்!

# 16

**ம**யூரி 'சீச்சீ' எனவும் அபூர்வனுக்கு முகத்தில் அடித்தது போல ஆகிவிட்டது. 'அசட்டுத்தனம்' என்ற தும், உதறி விலகியதும், மேலும் அவமானப்படுத்தியது போலவே உணர்ந்தான்.

ஆனால், அப்போதும், தன் அழகுபற்றி அவன் கொண்டிருந்த கர்வம், மயூரி மெய்யாகவே தன்னை ஒதுக்குகிறாள்; மறுக்கிறாள் என்று எண்ணவிடவில்லை!

அவனைவிட்டு, சௌம்யாவைத் தேர்ந்தெடுத்ததற் காகக் கெஞ்ச வைக்கிறாள்; பிகுபண்ணுகிறாள் என்று தான் நினைக்க வைத்தது.

எனவே, ''உன்னை மாற்றும் வழி எனக்குத் தெரியும்!'' என்று அவளை வலிந்து அணைக்க முற்பட்டான்!

''சீ விடு!'' என்று அவள், தன் முழுப்பலத்தையும் கூட்டி, அவனை உதறித்தள்ளி, அவன் பிடியிலிருந்து

தன்னை விடுவித்துக் கொண்டு ஓடி வந்து வேகமாகப் படியிறங்கினாள்.

''ஏ...என்ன மயூரி...'' என்ற மனோரஞ்சிதத்தின் அழைப்பு அவள்காதில் விழுந்ததாகவே தெரியவில்லை!

வேகமாக ஓடிச்சென்று, வீட்டைவிட்டு வெளியேறியவளின் மனதில் இருந்ததெல்லாம் இனி இந்த வீட்டில் காலடி எடுத்து வைக்கப் போவதில்லை என்பதுதான்!

தெருவில்கூட, யாரும் தன்னைப் பார்க்கிறார்களோ என்பதெல்லாம் ஒன்றும் அவள் கருத்தில் படவே இல்லை.

அதே வேகத்துடனேயே, பதைக்கப் பதைக்கப் பெரிய பெரிய மூச்சுகளுடன் வீட்டினுள் நுழைகையில், அவளது காதுகளில் அமுதம்போல ஒரு குரல் கேட்டது!

குணா!

குணசீலன் இப்போது அவளது வீட்டில் இருக்கிறான்! இனி அவளுக்குக் கவலையில்லை! பயமில்லை! நிம்மதி!

''குணா!'' என்று கூவலுடன் ஹாலுக்குப் பாய்ந்தோடிச் சென்றவள் அங்கே அவனைக் காணாமல் திகைத்தாள்.

இப்போது இங்கிருந்து குணசீலனின் குரல் நன்றாகக் கேட்டதே எப்படி? எங்கே இருக்கிறான்? எங்கேனும் ஒளிந்துகொண்டு வேடிக்கை காட்டுகிறானோ? இந்த நேரத்தில் என்ன வேடிக்கை?



மயூரி திகைப்புடன் சோஃபாவின் பின்புறங்களில் தேடத் தொடங்கவும், மீண்டும் குணசீலனின் குரல் அவள் பின்னிருந்து கேட்டது.

அவனை மீண்டும் அழைத்தபடி, விருட்டெனத் திரும்பிப் பார்த்த மயூரி அதிர்ந்துபோய் நின்றாள்.

அவள் பின்னே இருந்தது- அந்த ஹாலில் வைக்கப் பட்டிருந்த பெரிய டீவி!

அதிலிருந்துதான் குணசீலனின் குரல் கேட்டுக் கொண்டிருந்தது! பழைய பேட்டி 'க்ளிப்பிங்' எதையோ காட்டிக் கொண்டு இருந்தார்கள்!

'சொத்'தென்று போய், சோஃபாவில் உட்கார்ந்தவளுக்கு அழுகை விம்மி வெடித்துக் கொண்டு வந்தது!

குணசீலனுடைய பேட்டி வரக்கூடிய நேரம் என்று டீவியை ஓட விட்டுவிட்டு, டீவி பார்த்துக் கொண்டே இருப்பதற்கு வெங்காயத்தை எடுத்துக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்த ரேவதி, மகள் குணாவைக் கூவி அழைத்தவாறு உள்ளே ஓடிவந்ததையும், மற்றதையும் முழுவதுமாகக் கண்டாள்.

வெங்காயத்தை வைத்துவிட்டு, டீவி சத்தத்தைக் குறைத்துவிட்டு, மகள் அருகில் வந்து அமர்ந்து, அவள் முதுகைத் தடவிக் கொடுத்தாள்.

தாயை உணர்ந்து எழுந்து, அவள்மடியில் முகம் புதைத்துக் கண்ணீர் விட்டாள் மகள்.

டீவி திரையில் தெரிந்த குணசீலனின் முகத்தைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டு, மகள் முதுகைத் தட்டிக் கொடுத்தாள் ரேவதி. ''மய்ஹூ ஷ்... என்னடா போதும் அழுதது! சின்னப்பிள்ளை மாதிரி. இப்படி அழுவார்களா? போ! போய் முகத்தைக் கழுவிக் கொண்டு வா!'' என்று மெல்ல மயூரியின் கண்ணீரை நிறுத்தினாள்.

முகம் கழுவிவிட்டு வந்த மகளிடம், கொஞ்சம் பழச்சாறு கொடுத்துக் குடிக்க வைத்தாள். பிறகு மெல்லக் கேட்டாள் ''என்னம்மா! டீவியில் குணா குரலைக் கேட்டுவிட்டு, அவன்தான் வந்துவிட்டான் என்று ஓடிவந்தாயா?'' என்று.

''ஆ...மாம்மா!'' என்றவளுக்கு மீண்டும் அழுகையில் உதடு பிதுங்கியது.

''அவன் இங்கே இல்லை என்பதற்காக அவ்வளவு அழுதாயே அவனைப்பார்க்க உனக்கு அவ்வளவு ஆசையாக இருந்ததா? ஏண்டாம்மா?''

''ஏன்?''

விலுக்கென நிமிர்ந்து அமர்ந்தாள் அவள்!

''குணாவிடம் எதுவும் சொல்ல நினைத்து அவனைத் தேடினாயா?''

கொஞ்சம் விரும்பத்தக்காத சூழ்நிலையிலிருந்து தப்பித்து ஓடி வந்தாள்! மெய்தான்! ஆனால் அதைக் குணாவிடம் சொல்வதற்காகவா அவனை நாடினாள்? இல்லையே!



குணா இருந்தால் ஒரு பாதுகாப்பு! ஒரு நிம்மதி! எந்தத் தீமையும் நம்மை அணுக முடியாது என்கிற ஒரு தைரியம்! அவன் முகத்தைப் பார்ப்பதில் ஒரு மகிழ்ச்சி! அவன் குரலைக் கேட்பதில் ஒரு குதூகலம்! துக்கம் இருந்தால் வடிந்துவிடும்! சுகம் என்றால் கூடிவிடும்! அது அவனது மாஜிக்!

இன்று நேற்று என்றல்ல! என்றைக்குமே, குணாவின் அருகாமை அவளுக்குப் பிடித்தமானது! மிகமிக!

கடவுளே! அவளுக்கு ஏன் அது, இன்றுவரை புரியவில்லை!

மகளின் விழிகள் அகன்று விரிவதையும், முகம் பிரகாசம் அடைவதையும் பார்த்துக் கொண்டே இருந்த ரேவதிக்குச் சிரிப்பு வந்தது!

''என்னடா? சுயம்பிரகாசமா? விஷயம் விளங்கி விட்டதா?'' என்றாள் புன்னகையோடு.

''அம்மா!'' என்றாள் மகள், கண்களில் நீர்த்திரையிட!

''பைத்தியம்! இப்போதும் கண்ணீரா? சந்தோஷமாய் இருப்பதை விட்டுக் கண்கலங்குகிறாயே!'' என்ற, பெற்றவளின் விழிகளும் கூட லேசாகப் பனித்துத்தான் இருந்தன.

திடுமென முகத்தில் கலக்கம் சூழ, ''அம்மா, குணா! அவர் என்ன நினைக்கிறாரோ?'' என்று மயூரி கவலைப் பட்டாள்.

"அவனா?!" என்று சிரித்தாள் ரேவதி "அவன் என்றைக்குமே உன்னிடம் பைத்தியமாய் இருப்பவன்!" என்றவளின் கண்கள் லேசாகக் கலங்கின! "பாவம், பிள்ளை! இரண்டரை ஆண்டுகளாக என்ன பாடுபட்டு விட்டான்!" என்றாள் வருத்தத்துடன்.

"இரண்டரை? ஓ! அம்மா, அன்றைக்குக் குணா, உங்களிடம் சொன்னது... இப்படி ஆகும் என்று நினைக்கவில்லையே என்று வருத்தப்பட்டது. அய்யோ அம்மா, அபூ அத்தானோடு திருமணம் என்று சொன்னதற்காகவா? உங்களுக்கு அப்போதே குணா மனம் தெரியுமா? என்னிடம் சொல்லவே இல்லையே!" என்று சலுகையுடன் கேட்டாள் மகள்.

"எப்படியம்மா சொல்லுவது? என் வார்த்தைக்கு இந்தவீட்டில் அப்போது என்ன மதிப்பு இருந்தது? அதுவும், எங்கள் ஊர்க்காரர், பணவசதி அவ்வளவு இல்லை என்று சும்மாவே அப்பாவுக்குச் சிவா அண்ணனைப் பிடிக்காது! உன் அத்தை வீட்டில் வேறு 'ஆக்டோபஸ்' போல ஒரு மாதிரிச் சுற்றி வளைத்துக் கொண்டிருந்தார்கள். உன்னை மட்டும்தான் நம்பிக்கொண்டு இருந்தோம்! நீ யோசித்து நல்ல முடிவு எடுப்பாய் என்று நினைத்தால் நீயும் அந்தக் கல்யாணத்துக்கு பிடித்தம் என்றே சொல்லிவிட்டாயா?..."

"அது ஏன் என்று சொன்னேனேம்மா! அம்மா, நான் ஏன் அப்போது... அய்யோ! அபூர்வனைப் பிடித்



திருக்கிறது என்று வேறு சொல்லிவிட்டேனே! அது...அது சின்ன வயதின் அறியாத்தனத்தால் சொன்னது என்று குணாவுக்குப் புரிந்திருக்குமா, அம்மா?" என்று மயூரி கவலைப்பட்டாள்.

"நன்....றாகத் தெரியும்! ஆனால், உனக்கு அதைப் புரியவைக்கும் வகைதான் எங்களுக்குத் தெரியவில்லை! உன் வாயால் விருப்பம்தான் என்றுவிட்ட பிறகு எங்களால் ஒன்றுமே பண்ண முடியவில்லை!" என்றாள் ரேவதி.

திடுமென ஒன்று நினைவர, "ஐயையோ, அம்மா! இப்போது கூட, அந்தக் குமுதினி ஆன்ட்டி வீட்டில், குணா கேட்டபோது... 'இப்போதும் அபூர்வனை மணப்பாயா?' என்று குணா கேட்டாரம்மா! வேறே என்ன செய்யமுடியும் என்று... இப்போது என்னைக் கட்டாயம் தப்பாகத்தானே நினைத்திருப்பார்! கடவுளே! என்ன மடத்தனம் செய்துவிட்டேன்!" என்று மயூரி மீண்டும் கண்ணீர்விடத் தயாரானாள்.

"ஷ்...சும்மா இரு. அழக்கூடாது! இப்போதுதான் உனக்கு உன் மனம் புரிந்துவிட்டதே! பிறகென்ன? குணா, அடுத்தமுறை வரும்போது எல்லாம் சொல்லித் தெளிவுபடுத்திக் கொள்ளலாம்! ஆனால்... நன்றாக யோசித்துச் சொல்லு, மயூரி! உனக்கு நிச்சயம்தானே? மீண்டும் அபூர்வன் கேட்டான்! அத்தை சொன்னாள் என்று மாறமாட்டாயே?"

''சர்வநிச்சயம், அம்மா!'' என்றாள் மகள் உறுதியான குரலில்! உண்மையில் அபூர்வன் திருமணம் பற்றிப் பேச்சு எடுத்தால் எனக்கு அது ஒருநாளும் நடக்க முடியாதது என்பதே புரிந்தது!'' என்றாள் சுருக்கமாக.

கண்களில் ஆவல் தோன்றியபோதும், ரேவதி வாய் திறந்து மகளிடம் எதுவும் கேட்கவில்லை. மயூரி, அன்னையிடம், ஒளித்து மறைத்துப் பழகுகிறவள் இல்லை! சொல்லக்கூடியது என்றால் அவளாகவே சொல்லுவாள்!

ரேவதியின் நம்பிக்கை சரியே என்பதேபோல, மயூரியே, திரும்பவும் பேச்செடுத்து, அன்று அபூர்வன் வீட்டில் நடந்ததைச் சுருக்கமாகச் சொன்னாள். ''அபூஅத்தான் பக்கத்தில் வருவதையே, என்னால் சகிக்க முடியவில்லையே, அம்மா, எங்களுக்குத் திருமணமே நடந்திருந்தால், என் கதி என்ன ஆகியிருக்கும்?'' என்று உடல் சிலிர்த்தாள் மகள்! அத்தானுக்கும் என்மேல் அந்தமாதிரி ஈர்ப்பு எதுவும் கிடையாது என்றுதான் நினைக்கிறேன், அம்மா! இன்றுகூட, நம் வீட்டையும் விட்டுவிடக் கூடாதே என்று எல்லோருமாகச் சேர்ந்து திட்டமிட்டு நடத்தியது என்றே எனக்குத் தோன்றுகிறது. ஒரு தவறான திருமணம் நடைபெறாமல் தடுத்ததற்காக ஒருவகையில் அந்த சௌம்யாவுக்கு, நாம் ரொம்பவும் கடமைப்பட்டு இருக்கிறோம், அம்மா!'' என்று மகள் கூறியதைத் தாயார், முழுமனதுடன், ஆமோதித்தாள்!

''சுந்தருக்குத்தான் ரொம்பவும் மகிழ்ச்சியாய் இருக்கும் இல்லையாம்மா? எப்போதுமே, குணாதானே அவ



னுடைய 'ஹீரோ!'' என்றாள் மயூரி பெருமிதப் புன்னகையோடு.

''ஏன், உனக்கு இல்லையா? குணாவை மட்டும் தட்டுகிறார் என்று, அப்பாவையே எதிர்த்துப் பேச வாயே!'' என்று சிரித்தாள் ரேவதி.

''அம்மா! அப்பா... அப்பா, சரியென்பாரா, அம்மா?'' என்று மகள், புதிய அச்சத்துடன் வினவினாள்!

''எல்லாம் சரியென்பார்! அவரைப்பற்றிக் கவலையே படாதே!'' என்று தென்பூட்டினாள் அன்னை.

மகள் ஆச்சரியமாய் நோக்கவும், ''இப்போதெல்லாம், அப்பா ரொம்பவும் மாறிவிட்டார், கண்ணு! சொல்லப் போனால், இதற்கும், அந்த சௌம்யாவுக்குத்தான், நாம், நன்றி சொல்லியாக வேண்டும்! அவள் மட்டும், தன் பணத்தையும், பகட்டையும் காட்டியிரா விட்டால், உன் அத்தை வீட்டாரை, அப்பா, புரிந்து கொள்வது ஏது?'' என்று விளக்கினாள்!

''எல்லாம் நன்மைக்கே! என்பது உண்மைதான் போலும்!''

குமுதினி வீட்டில், குணசீலன் தனக்காகச் செய்த வசதிகள் பற்றி மயூரி தாயிடம் கூறினாள்.

''அவன் நிறையச் சம்பாதிக்க வேண்டும் என்று முனைந்ததே உன் அப்பாவிடம் பணக்காரனாக வந்து பெண் கேட்கத்தான்?'' என்றாள் தாயார்.

இன்னோரன்ன பேச்சுக்களில் இனிமையாகவே நேரம் போக்கினாலும், மகளின் முகம் அவ்வப்போது வாடுவது கண்டு, ''என்னடா யோசனை? என்ன விஷயம்? மனதுக்குள் இன்னும் என்ன இருந்து குடைகிறது?'' என்று ரேவதி விசாரித்தாள்.

மீண்டும் முகத்தில் கலக்கம் சூழ, ''புரியவில்லை, அம்மா! ஏதோ ஒன்று, என்னவென்று எனக்குச் சொல்லத் தெரியவில்லை! ஆனால், உள்ளூர... நெஞ்சுக்குள் குளிர் பரப்புகிறது. அம்மா! என்னவோ, பெரிய ஆபத்து வரப்போவது போலப் பயமாக இருக்கிறது! ஒன்றுமில்லை என்று எனக்கு நானே சொல்லிப்பார்க்கிறேன்! ஆனாலும்.... அம்மா, இந்த சந்தோஷம் எனக்கு நிலைக்குமா, அம்மா?'' என்று மயூரி கவலையுடன் கேட்டாள்!

''கட்டாயமாய்!'' என்று உறுதி கூறினாள் தாய்! ''இது எல்லாப் பெண்களுக்கும் ஏற்படுகிற படபடப்புதான். திருமணம் ஆகப்போகிற போது, திருமணமான புதிதில் காதலைப் பற்றி அறிகிற சமயத்தில், தாய்மை அடைகிறபோது என்று, இந்தக் கலவரமும் பெண்ணின் வாழ்வில் ஒரு பகுதிதான், மய்யூ! குணா அருகில் வந்துவிட்டால், எல்லாம் சரியாகிவிடும்!'' என்றாள் அனுபவசாலியாக!

''மெய்யாகவா, அம்மா?''

''மெய்! உண்மை! நிஜம்! சத்தியம்! போதுமா? தைரியமாய் இரு... குணாவந்த... குணா நேரில் வருகிற



போது வரட்டும்! இப்போது டீவியில் அவன் நிகழ்ச்சி முதலில் பார்! அடடா! முடிகிற நேரம் ஆகிவிட்டதே! ஆனால், துண்டுதுண்டாக எதை எதையோ பழசைக் காட்டுகிறார்களே தவிர, இன்றையப் பேட்டியைக் காட்டவில்லையே!'' என்றபடி ரேவதி, டீவி ரிமோட்டை எடுத்து, ஒலியை அதிகரித்தாள்.

குணசீலனோடு, மேலும் நாலைந்து பேரின் படங்களை, டீவி திரையில் 'குளோஸ் அப்'பில் காட்டினார்கள்.

தொடர்ந்து, ''திகிலும் வருத்தமும் தரக்கூடிய செய்தி ஒன்றை இப்போது நாங்கள் அறிவிக்க வேண்டியிருக்கிறது. உலகின் பல பாகங்களில், குண்டுவெடிப்பின் மூலம் பலர் உயிர் இழக்க காரணமான முக்கியத் தீவிரவாத அமைப்பின் தலைவரைப் பேட்டி எடுக்கச் சென்ற நமது குணாவை, அந்தத் தீவிரவாதி பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கிறான்! தன்து கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால், நம் குழுவினர் ஐவரையும் கொன்றுவிடப் போவதாக, 'சீட்டா' எனும் புனைப்பெயருடன் செயல்படும் அந்தத் தீவிரவாதி அறிவித்திருக்கிறான்!'' என்று தீவிரவாதியிடம் மாட்டிக் கொண்ட ஒலி, ஒளிப்பதிவாளர்கள், உதவியாளர் என்று ஒவ்வொருவர் படங்களையும் காட்டி விட்டுக் கடைசியாகக் குணசீலன் படத்தை ஒளிபரப்பினார்கள். பிரபலஸ்தர்களை நேருக்கு நேர் பேட்டி எடுப்பதில் சிறந்தவர் என்றும் உலகப் புகழ்பெற்று வரும் குணசீலன் என்றும் அறிவித்தார்கள்!

'இயோ, அம்மா! இதுதான்! இதுதான் நான் பயந்தது! குணா!?'' என்ற கதறலுடன் மயூரி மூர்ச்சித்து விழுந்தாள்.

# 17

அடுத்த இருதினங்கள் எப்படிக் கழிந்தன என்றே மயூரிக்குச் சரிவர நினைவில்லை!

குணசீலனுக்கு ஆபத்து! அவனை உயிரோடு காண்பது கடினம்! அனேகமாக முடியாது! இதுதவிர வேறு எதுவுமே அவள் மனதில் படவே இல்லை.

பசிதாகம் தூக்கம் எல்லாம் மறந்தாள்! பிபிசி, சிஎன்என், தூர்தர்ஷன் தனியார் சேனல்கள் என்று ஒவ்வொன்றிலும் செய்திப்பகுதியை மட்டுமே மாற்றி மாற்றி வைத்துக் கொண்டு தவித்தாள்.

செய்தித்துறைக்குக் கொடுக்க வேண்டிய பாதுகாப்பு விதிகளை மீறினான் என்று உலகம் முழுவதும் அந்தச் 'சீட்டா'வை இகழ்ந்தது.

ஆனால், அதனால் என்ன பயன்? உலகின் இந்தக் கண்டனம், 'சீட்டா'வைப் பொறுத்தவரையில், எருமை மாட்டின் மீது பெய்த மழை போலப் பயனற்றதாகவே இருந்தது!



இந்த ஐவரையும் விடுவிப்பதற்காக, 'சீட்டா' விதித்த நிபந்தனைகளைக் கேட்டதும், மயூரி மீண்டும் மயங்கி விழுந்தாள்!

அந்த அளவுக்கு, ஒத்துக்கொள்ள முடியாத நிபந்தனைகள்! உலகம் முழுவதிலும் அங்கங்கே சிறைப்படுத்தப்பட்டிருக்கும், அவனது தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த நாற்பத்து மூன்றுபேரை விடுதலை செய்து, அவன் கூறும் இடத்தில் கொண்டு விடவேண்டும்! அறுநூறு பேருக்கும் மேலான சாதாரண மக்களும், மூன்று உலகத் தலைவர்களும் மடியக் காரணமான பதினோரு குண்டுவெடிப்புகளை ஏற்பாடு செய்த அவனுக்கு உலகப் பொதுமன்னிப்பு வழங்க வேண்டும்; அவன் மீது எந்த வழக்கும் தொடரக்கூடாது! அவனும், அவனுடைய கூட்டாளிகளும் புதுவாழ்வு தொடங்குவதற்காகப் பல கோடி டாலர்கள் பணம் கொடுக்க வேண்டும்!

நடக்கக்கூடிய காரியமா?

அதுவும், இந்தப் பயணக் கைதிகள் பிரச்சினையைச் சமாளிப்பதற்காக, இதுபோன்ற கடத்தல்காரர்களின் நிபந்தனைகளைக் கொஞ்சமும் ஏற்கக்கூடாது என்று பலநாடுகளும் சட்டமியற்றி இருக்கும் இந்தக் காலத்தில்!

அடியோடு நம்பிக்கையிழந்து மயூரி ஓய்ந்து போனாள்.

ரேவதி மட்டும் அதட்டியும், மிரட்டியும், ஏதாவது குடிக்க வைத்திராவிட்டால், மயூரி, பட்டினி கிடந்தே செத்திருப்பாள்!

குற்றவுணர்வு வேறு மயூரியைக் குத்திப் பிடுங்கியது.

இந்தத் தீவிரவாதி பற்றிக் குணசீலன் கடைசி முடிவு எடுத்தது, அவன் அபூர்வனை மணப்பதாகச் சொன்ன அன்றுதானே?

அவளுக்கு ஒரு படம்போல அன்று நடந்தது நினைவிருந்தது. 'அபூர்வனை மணப்பாயா' என்று குணசீலன் கேட்டதும், 'வேறென்ன செய்ய முடியும், குணா?' என்று அவன் கேள்விக்கு 'ஆமாம்' என்று சொல்லாமல் சொன்னதும், உடனே உள்ளேபோய் அவன் பெட்டி எடுத்து வந்து கிளம்பிவிட்டதும்... அப்போதுதானே சொன்னான், இந்தப் பேட்டிக்குப் போகப்போவதாக!

தன்னிடம் அன்புகொண்ட ஒரு காரணத்துக்காக, குணசீலனை, அவனது முடிவை நோக்கித்தானே விரட்டிவிட்டதாக எண்ணி எண்ணி மயூரி குமைந்தாள்.

பெற்றவளிடம் கூட இதைக் கூற முடியாமல் தன்னுள்ளேயே உருகினாள் அவள்.

இடையே சற்றுநேரம், கணவனிடம் மகளை விட்டுவிட்டு ரேவதி, குணசீலனுடைய தந்தை சிவசங்கரனைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தாள்.

அங்கே அவரிடம் என்ன சொன்னாளோ, சற்று நேரத்தில் அவரே வந்து, மயூரிக்கு ஆறுதல் சொன்னார். ''நிலைமை, சற்று, மோசம்தான்! ஆனாலும், ஒரேயடியாக நம்பிக்கை இழந்துவிடக் கூடாது, அம்மா! இதை



விட மோசமான நிலையில் இருந்துகூட, ஜனங்கள் விடுபட்டிருக்கிறார்கள்! உலகம் முழுவதும் ஒட்டுமொத்தமாகக் கண்டனம் தெரிவிக்கிறது எனும்போது, அதற்குக் கொஞ்சமாவது மதிப்பிராமல் போகாது!'' என்று அவர் கூறியபோது, அவள் உள்ளூர வெகுவாகக் குன்றிப்போனாள்.

இந்தப் பெரியமனிதர், தன் வேதனையைப் பொறுத்துக் கொண்டு அவளைத் தேற்ற வந்திருக்கிறாரே!

மனைவியை இழந்தவர்! ஒரே பிள்ளை!

அவன் காரணமாக, இவர் தனிமரமாகி விடுவாரோ?

நெஞ்சு பதற, ''உலக அபிப்பிராயம் பற்றி, அந்தப் பாவி, கண்டுகொள்ளவே காணோமே, அங்கிள்?''

''இருக்கலாம்! ஆனால், இவன் குழுவில் எல்லோருமே அப்படி இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. இந்த உலகத்தில், தனிமைப்படுத்தப்பட்டால் அப்புறம் தலைதூக்குவது கஷ்டம்! ஈராக் மாதிரி ஒரு பெரிய தேசமே தோல்வியை ஒப்புக்கொண்டுவிடவில்லையா? இந்த உண்மை புரிந்தவர்கள் சீட்டாவின் தீவிரவாதக் கூட்டத்திலும் இருக்கத்தான் செய்வார்கள். அத்தோடு குணாவும் முட்டாளல்ல! தைரியமாய் இரு!'' என்றார் அவர்.

அவர் இருந்தவரை, மயூரிக்கும் கொஞ்சம் திடமாகத்தான் இருந்தது. ஆனால், அவர் கிளம்பிச் சென்ற

போது, அவரது தளர்ந்த நடையைக் கண்டதும், மீண்டும் அவளது நெஞ்சுக்கூட்டுக்குள் பந்து குதிக்கத் தொடங்கி விட்டது!

பல ஆண்டுகளாகப் பத்திரிகைத் துறையில் இருந்த அனுபவத்தில் சொன்னாரோ, என்னவோ, ஏறத்தாழ, சிவசங்கரன் சொன்னதுதான் நடந்தது.

அந்தத் தீவிரவாத அமைப்பின் தலைவன், 'சீட்டா' என்னதான் அசைந்து கொடுக்காமல், ஒரே பிடிவாதமாக இருந்தபோதும், அவனை இளக்குவதற்காக உலக நாடுக ளும், பிணைக் கைதிகளாக வைக்கப்பட்ட மூன்று நாட்ட வரின் தூதரகங்களும், சீட்டாவோடு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தபோது, சீட்டாவின் துணைத் தலை வனோடு குணசீலன் ஒரு பேச்சுவார்த்தை நடத்தினான்.

அதன் விளைவாக, அந்த அமைப்பினுள்ளேயே, சச்சரவு வலுத்து, துணைத்தலைவனின் பிரிவு, 'சீட்டா' வைப் பதவி இறக்கித் தலைமையைக் கைப்பற்றியது.

தலைமையைக் கைப்பற்றிய கையோடு, குணசீல னுக்குப் பேட்டியும் அளித்து, இவர்கள் ஐவரையுமே பத்திரமாகத் திருப்பி அனுப்பி வைத்தான் புதுத் தலை வன்!

குண்டுதுளைக்கப்பட்ட 'சீட்டா'வின் உடல், சாலை யோரம் கிடந்தது இன்னுமொரு பரபரப்பான செய்தி!

விமான நிலையத்திலிருந்து வெளிவந்த குணசீல னின் மார்பில் கூடி நின்ற உறவினரையும், குழுமிய



பத்திரிகையாளர்களையும் மறந்து, அப்படியே ஒட்டிக் கொண்டாள் மயூரி.

அவனது கையணைப்பிலேயேதான் மயூரி வீடு வந்து சேர்ந்தது.

வீட்டை அடைந்ததும், "மாமா, இப்போது நல்ல வசதி இருக்கிறது! மயூரியை எனக்கு மணமுடித்துக் கொடுப்பீர்களா?" என்று குணசீலன் மகேந்திரனிடம் கேட்டான்.

"நீ பெரிய ஆளப்பா!" என்றார் மகேந்திரன். "நான் முடியாது என்று சொன்னால் நீ விட்டுவிடுவாயா? அல்லது என் மகள்தான் என் பேச்சுக் கேட்பாளா? எங்கள் காலத்தில் கல்யாணத்துக்கு முன்னால், கண்ணால் பார்ப்பதே இயலாது! இப்போது கைக்குள்ளேயே வைத் துக் கொண்டு, ரொம்பப் பணிவுமாதிரிக் கேட்பதைப் பாருங்கள்!" என்று அவர்கூற எல்லோரும் நகைத்தனர்.

சிரித்து முடிந்ததும், "அந்த மாதிரி எண்ணம் இல்லா மல், உன் பெரியம்மா வீட்டுக்கு, மயூரியைத் தனியாக அனுப்புவேனா? எனக்குப் பரிபூரண சம்மதம், குணா!" என்றார் தெளிவாக. "ம்ம்.... தப்பு தப்பு... மாப்பிள்ளை!" என்று முடித்து, மீண்டும் எல்லோரையும் சிரிக்க வைத்தார்.

சற்றுநேரம் எல்லோருமாகப் பேசிக்கொண்டு இருந் தார்கள்!

''எங்களுக்கெல்லாம் அடியோடு தைரியமே கிடையாது குணா! அதிலும் மயூரி..! சிவா அண்ணா வந்து சொன்னபிறகு கொஞ்சம் ஆறுதல்! பிறகுபார்த்தால், கிட்டத்தட்ட அண்ணன் சொன்னபடிதானே நடந்திருக்கிறது!'' என்றாள் ரேவதி.

''அப்பாவுக்கு முப்பதாண்டு பத்திரிகை அனுபவம் இருக்கிறதில்லையா, ஆன்ட்டி!''

''சொன்னது சொல்லிவிட்டேன்! ஆனால் எனக்கும் உள்ளே பயமாகத்தான் இருந்தது!'' என்றார் சிவசங்கரன்.

''நீங்கள் நடந்துபோன தினுசில் எனக்கும் அது புரிந்தது, அங்க்கிள்! பிறகு, பயம் இரட்டிப்பாகி விட்டது!'' என்றாள் மயூரி.

''இந்த ஆன்ட்டி, அங்க்கிள் என்பதை விட்டுவிட்டு, இனிமேல் நல்லபடியாக அத்தை, மாமா என்று உறவு முறை சொல்லி அழையுங்கள்! இந்த வீட்டை, நீங்கள் சுற்றிப்பார்த்ததே இல்லையே! வருகிறீர்களா, சி...ம் ஆம்..., வருகிறீர்களா, அத்தான்?'' என்று உறவுமுறை கொண்டாடி, சிவசங்கரனைத் தன்னுடன் அழைத்துப் போனார் மகேந்திரன்.

ரேவதியும், சமையலைப் பார்க்கும் பாவனையில் எழுந்து சென்றாள்!

தனிமையில், குணசீலனைக் கண்கொட்டாமல் பார்த்தாள் மயூரி! பார்க்கவிடாமல் பெருகிய கண்ணீரைத்



தட்டிவிட்டபடி, ''நான்தான் யோசியாமல் ஒரு வார்த்தை சொன்னேன் என்றால், அதற்காக இப்படிப்போய் இந்த மாதிரி ஆபத்தில் சிக்கிக் கொண்டீர்களே, குணா! உங்களுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருந்தால் நான் உயிரை விட்டிருப்பேன், தெரியுமா?'' என்று விசும்பினாள்.

எட்டி அவளை அணைத்துக் கொண்டான் அவன். கண்ணைத் துடைத்து, ''அதுதான் வந்துவிட்டேனே, கண்ணம்மா! பிறகு என்ன? இனிமேல், இந்த உயிரை விடுவது, ஆபத்து இந்தமாதிரி விஷயம் பேசவே கூடாது! சரிதானா? பதிலாக...மயூ நாம் தேனிலவுக்கு எங்கே போகலாம், சொல்லு! எங்கே வேண்டுமானாலும், இரண்டுவாரத்துக்கு முழுச்செலவும் ஏற்றுக் கொள்வதாக எங்கள் நிறுவனத்து நிர்வாகி சொல்கிறார். பிறகும், பேட்டி எடுக்கப்போகும் இடத்துக்கெல்லாம் உன்னையும் அழைத்துப் போகலாமாம்!'' என்று உற்சாகமாகப் பேசினான்!

ஆனால், ''இன்னமும் இப்படிப் பேட்டியா? வேண்டவே வேண்டாம்!'' என்றாள் மயூரி. ''இந்த ஐந்துநாள் பட்டபாடு ஏழேழு பிறவிக்கும் போதும்!'' என்றாள் தீர்மானமாக.

''அச்சோ! இந்தமாதிரிப் பேட்டி, அல்லம்மா! இது வரை எடுத்தேனே, அதுபோல! இந்த மாதிரி விஷப் பரீட்சை இனிமேல் வேண்டாம் என்று நிறுவனமே சொல்லிவிட்டது! ஆனால், இந்தக் கடைசிப் பேட்டி, ஒரு

பெரிய 'ஜாக்பாட்'தான் தெரியுமா? மற்றபடியும் கூட, இந்தத் தொழிலில் பணம் அதிகம் கிடைக்கிறது, மயூரி! நான் உண்மையில் எதற்காக இந்தத் தொழிலைத் தேர்ந்தெடுத்தேன், தெரியுமா?'' என்றவனை இடைமறித்து, ''எல்லாம் தெரியும்!'' என்றாள் அவள்.

''அன்றைக்கு, அந்தத் தீவிரவாதியிடம் நீங்கள் பிடிபட்ட அன்று, அம்மா அதெல்லாம் சொன்னார்கள்!''

''எப்படித் தெரியும்?''

''அம்மா சொன்னார்கள்! அன்றைக்கு, நீங்கள், அந்தச் 'சீட்டா' விடம் பிடிபட்ட அன்றுதான் ஒரு காரணமாய் எல்லாம் சொன்னார்கள்! இவ்வளவு நாள், பெற்ற மகளிடமே மறைத்து, அம்மா உங்கள் ஆளாய்ச் செயல்பட்டிருக்கிறார்கள்! அப்படித்தானே?'' என்று பொய்க்கோபம் காட்டினாள் அவள்.

அவளது சுளித்த புருவத்தை நீவிவிட்டு, ''எல்லாம் உன் நன்மைக்காகத் தானே, கண்மணி!'' என்றான் குணசீலன்! ''இரண்டு ஆண்டுகளாக நீ இல்லாத நேரத்தில் வந்து, போய்க் கொண்டிருந்தேன்! அன்றைக்கு 'ஐந்து நிமிடம் கிடைத்தால், அதிலும் என்னைப்பற்றிய வம்பா' என்றாயே! உன்னைப்பற்றித்தானே கண்ணம்மா, நாங்கள் பேசுவதே! எப்படி இருக்கிறாய், என்ன செய்கிறாய்? சந்தோஷமாய் இருக்கிறாயா... சௌம்யா விஷயம் வெளியானதும் வந்தேனே! நினைவிருக்கிறதா? ஆன்ட்டி... சொல்லித்தான் வந்தேன்! இல்லை என்று



நான் நடித்ததில், நீ உன்னை அறியாமலே எனக்கு நூற்றுக்கு நூறு மார்க்கே கொடுத்துவிட்டாய்?'' என்று சிரித்தான் அவன்!

''என்னது?''

''விமான நிலையத்திலிருந்து ஃபோன் செய்ததாகச் சொன்னேன்! யாருக்கு என்றேனா? யார் சொன்னார்கள் என்றேனா? அன்றிருந்த மனநிலையும் நீயும் அதைக் கவனிக்கவில்லை! ஒருவகையில் அந்த சௌம்யாவுக்கு நான் நன்றிக்கடன்தான் பட்டிருக்கிறேன், மயூ! அவள் சமயத்தில் வராவிட்டால், என் கதி என்ன?''

''நம் கதி என்ன என்று சொல்லுங்கள்!'' என்று சிரித்தாள் மயூரி! ''நானும் அம்மாவும்கூட, அன்று இதையேதான் பேசிக்கொண்டு இருந்தோம்! சௌம்யாவுக்கு நன்றிசொல்வது பற்றி!... ஒரு காரணமாய் அம்மா விவரம் சொன்னார்கள், என்றேனே! அன்றுதான், அழூர்வன் பற்றி நான் முழுமையாகத் தெளிந்த நாள்..''

''என்னவென்று?''

ஆச்சரியமாக அவனைப்பார்த்தாள் மயூரி!

இரண்டு ஆண்டு சமாச்சாரம்! தெளிவாகச் சொன்னால்தான், மனம் முழுமையாகச் சமாதானம் அடையும் போலும்!

புன்னகையோடு, ''நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள்! இன்னொருதரம், இது திருப்பிச் செல்லப்படமாட்

டாது! அந்த அபூர்வன் இல்லை, அவர், வீசுகிற காற்றில் வந்து போகிற மேகம். மேகம் சற்றுநேரம், சூரியனை மறைக்கலாம்! ஆனால் நிலைத்து நின்று மறைத்துக் கொண்டே இருக்க முடியாது! அதுபோல என் சூரியனை மறைத்த மேகம் விலகி என் சூரியன் யார் என்று அன்று அறிந்து கொண்டேன்.''

''உன் சூரியன் யார் கண்மணி?''

''அதை நான் சொல்லவும் வேண்டுமோ, ஸ்வாமீ...'' என்று மயூரி மூக்கால் ராகம் இழுக்க, இருவரின் நகைப்பும் இணைந்து இனிய சங்கீதமாய் ஒலித்தது.